# வரலாற்று உலா

ஆ.சி.நடராசா







# வரலாற்று உலா

தொகுப்பாசிரியர்
ஆ.சி.நடராசா

வெளியீடு
சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்

2010

## ஆசிரியர் குழு

1) பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
அத்தியாயம் : 1, 2, 3, 4, 5, 6,

2) சிரேஷ்ட விரிவுரையாளர் (திருமதி) சாந்தினி அருளானந்தம்
அத்தியாயம்: 7, 8

3) சசிதா குமாரதேவன்
அத்தியாயம்: 9, 10, 11, 12,13, 14, 15, 16

4) ரேணுகா சின்னராஜா
அத்தியாயம்: 17, 18, 19, 20, 21

5) அன்பரசி இரட்ணசிங்கம்
அத்தியாயம்: 21, 22

6) கர்ணிகா பாஸ்கரஐயர்
அத்தியாயம்: 23

## முகவுரை

வரலாற்று உலா என்ற இந்நூல் ஈழத்தமிழ் மக்களது தொல்லியல் வரலாற்றினை எளிய நடையில் தமிழ் மக்களிற்கு எடுத்துக் கூறுகின்றது. இந்நூலினை ஒவ்வொரு தமிழ் மக்களும் படித்து தமது பண்டைப் பெருமையினை உணரவேண்டும்.

வரலாற்றைக் கற்கும் மாணவர்களும் வரலாற்றை அறியவேண்டும் என்ற ஆர்வமுடையோரும் நாட்டின் பல பகுதிகளுக்கும் சுற்றுலாக்கள் சென்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவது இன்று வழமையாகி விட்டது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் வரலாற்று பழமைவாய்ந்த இடங்களையும், சின்னங்களையும் சமூகத்தின் அனைவரும் அறியும்வண்ணம் இங்கு கிடைக்கப்பெற்ற மூலாதாரங்களை கண்டறிந்து அரிய கட்டுரைகளாக தினக்குரல் பத்திரிகையில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களும், ஏனைய விரிவுரையாளர்களும், வரலாற்று துறை மாணவர்களும் எழுதி வந்தனர். இக்கட்டுரைகள் வாசர்களிடம் ஒரு ஆர்வத்தினை ஏற்படுத்தியது.

மேலும் எமது தொல்லியல் வரலாறு திரிபுபடுத்தப்படாது இருப்பதற்கு நாம் பல நவீன விஞ்ஞான ஆய்வுகளையும் தொழில் நுட்பத்தினையும் புலமைசார் அறிஞர்களையும் ஈடுபடுத்தல் வேண்டும். இந்நூலினை கற்பவர்களிற்கு அத்தகைய உணர்வு ஏற்படும். இதற்கு எமது நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் தொல்லியல் அறிஞர்களான பேராசிரியர் க.இந்திரபாலா, கலாநிதி பொ.இரகுபதி போன்றவர்களும், தென்னிந்திய தொல்லியல் ஆய்வாளர்களும் உதவவேண்டும்.

சிவத்தமிழ் மானிட விடியற்கழகம் இந்நூலினை வெளியிடுவதன் மூலம் ஒரு வரலாற்றுப் பணியையும், சமூகப் பணியையும் செய்துள்ளது. இது எமது இனத்தின் கலாசாரம், வரலாறு, தொல்லியல் ஆதாரங்கள் என்பன பாதுகாக்கப்படுவதற்கு இந்நூல் ஒரு தூண்டியாக அமையுமென நம்புகின்றேன். இவ்வரிய முயற்சியினை உளமாரபாராட்டுகின்றேன்.

ஆ.சி.நடராசா

# உள்ளடக்கம்


1. யாழ்ப்பாணத்தின் தொல்மரபுரிமைச் சின்னங்கள் - சில குறிப்புகள் 01
2) "ஆனைக்கோட்டை" யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பூர்வீக குடியிருப்பு மையம் 15
3) வலிகாமம் - யாழ்ப்பாணத்தின் தொடக்ககால வரலாற்று மையங்கள் 23
4) யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புராதன இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிப்பு 27
5) வேலணை சாட்டியில் பெருங்கற்காலப் பண்பாடு 39
6) நெடுந்தீவில் சுற்றுலாவுக்குரிய தொல்லியற் சின்னங்கள் 44
7) தமிழரது பண்பாடு பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் நல்லூர்க் கந்தன் ஆலயம் 54
8) நல்லூர் நாற்றிசைக்கோயில்கள் - தமிழரின் இராசதானியை நினைவுபடுத்தும் சின்னங்கள் 59
9) ஐமுனா ஏரி - யாழ்ப்பாண அரசுகால நினைவுச்சின்னம் 65
10) மந்திரிமனை - யாழ்ப்பாண அரசின் ஓர் நினைவுச்சின்னம் 68
11) நல்லூர் இராசதானியின் நினைவுச்சின்னமாக கோப்பாயில் அமைந்திருந்த சங்கிலியன் கோட்டை 71
12) இயற்றாலையில் அழிவுண்டு காணப்படும் சங்கிலி மன்னன் காலக்கோட்டை 73
13) சுண்டிக்குளம் - மறக்கப்பட்டு வரும் ஒரு புராதன தொல்லியற் சுற்றுலா மையம் 77
14) நல்லூர் இராசதானிக் காலத்தை நினைவுபடுத்தும் சங்கிலியன் தோப்பு 81
15) வரலாற்று நோக்கில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 83
16) யாழ்ப்பாணத்தில் அரச மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கலைவடிவமாகக் கூறும் நகுலேஸ்வரர் ஆலயம் 88
17) கந்தரோடை - புராதன தொல்லியல் மையங்களுள் ஒன்று 92
18) யாழ்ப்பாணத்தில் பூர்வீக மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகள் 94
19) ஐரோப்பியரது நினைவுச் சின்னங்களுள் ஒன்றாக அமைந்துள்ள ஊர்காவற்றுறைக் கோட்டை 98
20) வரலாற்று சுற்றுலாவிற்கான முக்கிய தொல்லியல் மையம் வல்லிபுரம் 102
21) கச்சாய் துறைமுகம் வெளிச்சத்திற்கு வராத ஒரு தொல்லியல் மையம் 107
22) யாழ்ப்பாண நகரின் தென்புறத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை 111
23) யாழ் கோட்டை முனியப்பர் ஆலயம் 115

# 1

## யாழ்ப்பாணத்தின் தொல்மரபுரிமைச் சின்னங்கள் சில வரலாற்றுக் குறிப்புகள்

கடந்த இரண்டு ஆண்டுகளாக தினக்குரல் பத்திரிகையில் 'வரலாற்று உலா' என்ற தொனிப்பொருளில் வாரவெளியீடாக பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள் இப்போது ஒரு தொகுப்பு நூலாக வெளிவருகிறது. இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ஆய்வு நோக்கில் எழுதப்பட்டவை அல்ல. அவை யாழ்ப்பாணத்தில் இருந்த, இருக்கின்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடங்களை, எமது பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை மாணவர்களும், மக்களும் தெரிந்து கொள்ளும் நோக்கில் எழுதப்பட்டவையாகும். இதில் சொல்லப்பட்ட வரலாற்று இடங்களை விட சொல்ல வேண்டிய இடங்கள் பல யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் சில எதிர்காலத்தில் ஆராய்ந்து அடையாளம் காணப்பட வேண்டி யுள்ளன. அந்த முயற்சிகளுக்கெல்லாம் ஒரு தொடக்கப் புள்ளியாக இந்நூல் அமைகிறது எனக் கூறலாம்.

I

இலங்கை ஒரு பல்லினப்பண்பாடு கொண்ட நாடாகும். அதில் தமிழ், சிங்கள மக்களுக்குத் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு எனக் கூறப்பட்டாலும் ஆதிகாலத்தில் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது குறிப்பிட்ட ஒரு மதம் குறிப்பிட்ட ஒரு இடத்தில் தான் தோன்றி வளர்ந்ததெனக் கூறுவதற்கு ஆதாரங்கள்

இல்லை. மேலும் இலங்கை மக்கள் ஆதிகாலம் தொட்டு கிரேக்க, உரோம, அரேபிய மற்றும் சீன நாடுகளுடன் வணிக, கலாசார உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதை தொல்லியல் ஆய்வில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதை கிரேக்க, உரோம, சீன இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. இதனால் இந்நாட்டு மக்களது பண்பாடும் இலங்கையின் ஆதிகால மக்களுடன் கலந்திருக்கலாம் அல்லது இலங்கைப் பண்பாடு வளர உதவியிருக்க லாம் எனக் கருத இடமுண்டு. சமீப காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களும், சூழல் பற்றிய தொல்லியல் (Environmental Archaeology) ஆய்வுகளும் இலங்கையின் பூர்வீக மக்களும், பண்பாடும் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து வடஇலங்கை ஊடாகவே இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் சென்றதை எடுத்துக்காட்டுகின்றன. இதில் வடஇலங்கையின் அமைவிடம் இலங்கை தென்னிந்திய உறவுகளின் குறுக்கு நிலமாகவும், தமிழகத்தில் அவ்வப்போது தோன்றி வளர்ந்த பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாகவும் அமைந்திருப்பதனால் ஒப்பீட்டளவில் வடஇலங்கை மக்களின் பெரும்பான்மையோர் மதம், மொழி, பண்பாடு என்பவற்றால் ஆதிகாலம் தொட்டு தமிழகத்தை ஒத்த மக்களாகவே இருந்தனர் எனக் கருத இடமுண்டு.

II

இன்று மொழியால் வேறுபடுத்திப் பார்க்கப்படும் தமிழ், சிங்கள மக்கள் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்த நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் வழிவந்தார் கள் என்பதை மானிடவியல், தொல்லியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. காலப்போக்கில் அவர்களில் பெரும்பான்மையோர் சிங்கள மொழி பேசும் தனி இனமாக மாறியதற்கு பௌத்த மதத்துடன் அம்மதத்திற்குரிய பாளி, பிராகிருத மொழிகளும் இலங்கைக்குப் பரவியமை காரணமாகும். இலங்கையில் பௌத்த மதம் பரவுவதற்கு தேவநம்பியதீசன் ஆட்சியில் இலங்கை வடஇந்தியாவுடன் கொண்ட நேரடித் தொடர்பே முக்கிய காரணமாகும். ஆயினும் அம்மதம் இலங்கையில் வளர்வதற்கு தமிழகச் செல்வாக்கும் ஒரு காரணமாக இருந்ததென்பதை மறுப்பதற்கில்லை. கி.மு 3ஆம் நூற்றாண்டில் சங்கமித்தையால்

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பௌத்த அரசமரக்கிளை வடஇலங்கையில் உள்ள ஜம்புக்கோளப்பட்டினத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து அநுராதபுரம் வந்தடைந்ததாக மஹா வம்ஸம் கூறுகிறது. மேலும் தமிழகத்தை சேர்ந்த மகிந்தன், புத்ததத்த, புத்தகோசர், தர்மபாலர், வஜ்ஜிரபோதி முதலான பௌத்த குருமார் இலங்கைக்கு வந்து பௌத்தசமய நடவடிக்கைகளில் ஈடுபட்ட செய்திகள் பாளி இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது தமிழகத்தில் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ்ப் பௌத்தம் சமகாலத்தில் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தியதென்பது தெரிகிறது. ஆனால் பத்தி இயக்கத்தின் தோற்றத்தால் தமிழகத்தில் பௌத்தம் வீழ்ச்சிடைந்த போது அதன் தாக்கம் வடஇலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில் பத்தி இயக்கத்திற்கு தலைமையேற்று நடாத்திய நாயன்மார் பாடல்களில் தமிழகத்தை அடுத்து முக்கிய இந்து ஆலயங்கள் இருந்த இடமாக கேதீஸ்வரத்தையும், கோணேஸ்வரத்தையுமே போற்றிப் பாடியுள்ள னர். இப்பின்னணியில் வைத்து நோக்கும் போது யாழ்ப்பாணத்தில் தோன்றி வளர்ந்த பண்பாடு ஐரோப்பியர் ஆட்சி ஏற்படும் வரை பெருமளவுக்கு தமிழகச் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்ததெனக் கூறலாம்.

## III

இன்று யாழ்ப்பாணம் என அழைக்கப்படும் பிரதேசத்தின் பெயர் கடந்த 500 ஆண்டுகளாக புழக்கத்தில் இருந்து வந்தமைக் கான சான்றுகள் கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. 15ஆம் நூற்றாண்டுக்குரிய விஜயநகரப் பேரரசு காலக் கல்வெட்டு மற்றும் அதன் சமகாலத்திற்குரிய திருப்புகழில் இது 'யாழ்ப்பாணாயன்பட்டினம்' எனவும், சந்தேஸ இலக்கியங்களில் 'யாபாபட்டுன' எனவும், போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்களில் ஜவ்னாபட்னம், இவ்னாபட்னம் எனவும், பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் யாழ்ப்பாணம் எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இதேபெயரில் இப்பிராந்தியம் அழைக்கப்பட்டதா என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இதற்கு முன்னர் இப்பிராந்தி

யம் நாகதீபம், நாகநாடு, மணிபல்லவம், உத்திரதேசம், வடகர முதலான பெயரால் அழைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் வரலாற்று ஆவணங்களில் காணப்படுகின்றன. வேறுபட்ட பெயர்கள் பிராந்தியத்தின் எல்லைகள் வேறுபட்டிருந்ததைக் காட்டுவதாக இருந்தாலும் இவற்றின் வரலாற்று நிகழ்வுகள் ஒரு பிராந்தியத்திற் குரியதாகவே காணப்படுகின்றன. இதனால் இக்கட்டுரையில் யாழ்ப்பாணத்தைக் குறிக்க நாகதீபம் அல்லது உத்திரதேசம் என்ற பெயரே பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையின் முதல் பாளி வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்ஸம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்துவைத்ததாகக் கூறுகிறது (Mahavamsa 8:54). இதில் மஹாவம்ஸம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி.பி 5ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தின் வடக்கில் இருந்த பிராந்தியம்



வல்லிபுர பொற்சாசனம்

நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதை இவ்வரலாற்றுச் செய்திகள் உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம். ஆதிகாலத்தில் இந்தியாவை அடுத்து இலங்கையுடன் அதிக அளவில் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்ட பெருமை கிரேக்க, உரோம நாட்டு வணிகர்களுக்கு உண்டு. இவ்வுறவுகள் பெரும்பாலும் வடஇலங்கைத் துறைமுகங்களூடாக நடைபெற்றதை மாதோட்டம், கந்தரோடை, பூநகரி, சாட்டி, வல்லிபுரம் போன்ற இடங்களில் பெறப்பட்ட கிரேக்க உரோம நாடுகளுக்குரிய பலவகை மட்


பாண்டங்கள், மதுச்சாடிகள், நாணயங்கள் என்பன உறுதிசெய் கின்றன. இவ்வணிக உறவுகள் பற்றிக் கூறும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பில் இலங்கையில் இருந்த முக்கிய கரையோரப் பட்டினங்களில் ஒன்றாக 'நாகடிப' என்ற இடம் கூறப்பட்டிருப்பதுடன் அவ்விடம் அவர்கள் வரைந்த தேசப்படத்தில் இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகவும்



நாகநகர் பற்றிக் கூறும் கல்வெட்டு

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Weerakody 1997:87). இக்கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் 1936 இல் யாழ்ப்பாணத்திலுள்ள வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொற்சாசனத்தில் இடம் பெற்றுள்ள 'நாகதிவ' என்ற பெயரும் காணப்படுகிறது. அநுராத புரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாசனம் ஒன்று வடஇலங்கையில் இருந்த நாகநகர் பற்றிக் கூறுகிறது (Karunaratne 1984:82). இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. இந்நாகநகர் அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கவேண்டும் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் என கலாநிதி இரகுபதி கூறுகிறார். நிக்லஷ் என்ற அறிஞர் இது வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார். இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பதை இச்சாசன எழுத்தும், மொழியும் உறுதிப்படுத்துகிறது.

அண்மையில் தென்மராட்சி உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் ஒன்று நாகதீபத்தை அடையா ளப்படுத்துவதில் முக்கிய சான்றாக




படம் 5

அமைகிறது. இந் நாணயத்தின் முன்பக்கத்தில் 'நாகபூமி' (Nākapūmi) என்ற பெயரும், பின்பக்கத்தில் பொலம் என்ற பெயரும் காணப்படுகிறன. இலங்கைப் பிராமிச் சாசனங்கள் சிலவற்றில் 'பூமி' (Bumi) என்ற சொல்லும், 'நஹபூமி' என்ற பெயரும் காணப்படுகின்றன. அவற்றில் நஹபுமி (Nagabumi) என்ற வாசகம் பிராகிருத மொழிக்குரிய வடபிராமியில் எழுதப்பட்டிருக்கும் போது உடுத்துறையில் கிடைத்த நாணயம் தமிழ் மொழிக்கே சிறப்பான தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளமை முக்கிய வேறுபாடாக உள்ளது. இந்த வேறுபாடு பாளியில் நாகதீபம் என அழைக்கப்பட்ட பிராந்தியம் தமிழில் நாகபூமி என அழைக்கப்பட்டதை எடுத்துக்காட்டுவதாக கருதஇடமுண்டு. சற்றுப் பிற்பட்டகாலத்தில் தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழகத்திற்கு அப்பால் கடல்கடந்து செல்ல வேண்டிய இடங்களில் ஒன்றாக நாகநாட்டைக் குறிக்கின்றது. இதன் பின்னர் தோன்றிய கலிங்கத்துப்பரணியில் சோழவம்சத்தவனான கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதை கூறப்படுகிறது. இதேபோல் வேலூர்ப்பாளைச் செப்பேட்டில் பல்லவ மன்னன் ஒருவன் நாககுல மகளை மணந்த செய்தி சொல்லப்படுகிறது. கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பான் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி சூளவம்ஸத்தில் காணப்படுகிறது. வழக்கமாக அந்நியப் படையெடுப்புக்கள் நிகழும் போது இலங்கைமீதான அல்லது அநுராதபுர அரசின் மீதான படையெடுப்பெனக்கூறும் பாளி இலக்கியங்கள் இப்படையெடுப்பை நாகதீபத்தின் மீதான படையெடுப்பென தனித்துக் கூறியிருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள இலக்கியத்தில் வடஇலங்கை 'மணிநாகதீப' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்விடம் கந்தரோடையாக இருக்கலாம் என கொடகும்புர குறிப்பிடுகிறார். ஏறத்தாழ இதே காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைமீது படையெடுத்த கலிங்கமாகன் யாழ்ப்பாணத்தில்

வந்திறங்கி அங்கு நாகர்குல அரசனைச் சந்தித்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த பிராந்தியம் கி.பி.13ஆம் நூற்றாண்டுவரையாவது நாகதீபம், நாகநாடு, நாகபூமி முதலான பெயர்களால் அழைக்கப் பட்டிருக்கலாம் என்பது தெரிகிறது. ஆயினும் இந்த நாகதீபம் அல்லது நாகநாடு அநுராதபுரத்திற்கு வடக்கே எப்பிராந்தியத்தை அல்லது எந்த இடத்தைக் குறித்ததென்பதில் அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. சிலர் நயினாதீவைக் குறித்ததாகவும், வேறு சிலர் யாழ்ப்பாணத்தைக் குறித்ததாகவும், இன்னும் சிலர் தற்கால வடஇலங்கையைக் குறித்திருக்கலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளனர். ஆதிகாலத்தில் ஒரு இடத்தின் பெயர் காலப்போக்கில் ஒரு பிராந்தியத்தை அல்லது ஒரு நாட்டைக் குறிக்கும் பெயராக மாறியதற்கும், ஒரு நாட்டின் அல்லது குறிப்பிட்ட பிராந்தியத்தின் பெயர் காலப்போக்கில் குறிப்பிட்ட ஒரு இடத்தைச் சுட்டும் பெயராக மாறியதற்கும் பல ஆதாரங்கள் உண்டு. இங்கே நாகதீபம் அல்லது நாகநாடு தொடர்பான வரலாற்றுச் சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் நோக்கும் போது இப்பெயர் சுட்டும் பிரதேசத்தின் எல்லைகள் வடஇலங்கைக்கு அப்பால் திருகோணமலை வரை பரந்திருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இவ்வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் 15ஆம் நூற்றாண் டளவில் யாழ்ப்பாணம் என்ற பெயர் புழக்கத்திற்கு வருவதற்கு முன்னர் அப்பிராந்தியமும் நாகநாடு அல்லது நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதெனக் கூறலாம்.

## IV

15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால வரலாற்று ஆவணங்களை ஆராய்ந்தால் அவற்றில் நாகதீபம் பண்டு தொட்டு தனித்துவமான பிராந்தியமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். இத்தனித்துவம் பௌதீக அடிப்படை யில் மட்டுமல்ல பண்பாட்டு அடிப்படையிலும் ஏற்பட்டதெனக் கருத இடமுண்டு. அநுராதபுர அரசை மையமாகக் கொண்டெழுந்த பாளி இலக்கியங்கள் அவ்வரசிற்கு தெற்கே மிகத்தொலைவில் இருந்த தென்னிலங்கை அரசுகளுடனும், மக்களுடனும் அநுராதபுர

ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்த உறவுகளை விரிவாகக் கூறும் போது அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக் கிட்டிய தூரத்தில் அமைந் திருந்த நாகதீபத்துடன் கொண்டிருந்த அரசியல், பண்பாட்டு உறவு களையிட்டு மௌனம் சாதிக்கின்றன. கி.பி.5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சில உறவுகள் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டி ருந்தாலும் அவை நாகதீபத்தில் இருந்த பௌத்த ஆலயம் பற்றியதாகவும், தமிழகத்துடன் ஏற்பட்ட பௌத்த மத உறவு பற்றியதாகவும் உள்ளன. கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து அநுராத புர அரசிற்கும் நாகதீபத்திற்கும் இடையிலான அரசியல் உறவுகள் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டாலும் அவை அநுராதபுர அரசில் இருந்து நாகதீபம் தனித்துவமாக வளர்ந்ததையே காட்டுகின்றன. இதற்குப் பின்வரும் சம்பவங்களை ஆதாரமாகக் காட்டலாம்.

ஏழாம் நூற்றாண்டில் ஸிலாமேக வண்ண மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த காலத்தில் (கி.பி.614-623) ஸ்ரீநாக என்னும் தலைவன் உத்தரதேசத்திலிருந்து தமிழர் படையின் உதவியுடன் அநுராதபுரத்து மன்னனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றதாகச் சூளவம்சம் கூறுகிறது. இங்கே ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய ஸ்ரீநாக தனது படையெடுப்பை வடஇலங்கையில் இருந்து மேற்கொண்டமை முக்கியமாக நோக்கப்படவேண்டிய அம்சமாகும். சுவாமி ஞானப்பிரகாசர் படையெடுப்பை மேற்கொண்ட ஸ்ரீநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருக்கவேண்டும் எனக் கூறுகிறார். இப்படையெடுப்பை அநுராதபுர மன்னன் தோற்கடித்த போதும் அநுராதபுர அரசிற்கெதிரான கிளர்ச்சிகள் தொடர்ந்தும் உத்தரதேசத் தில் நடந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. ஏறத்தாழ இதேகாலப்பகுதி யில் 'மானா' என்ற சிங்கள இளவரசன் அநுராதபுரத்தில் ஆட்சியாளனாக இருந்த ஹட்டதாத்த மன்னனுக்குப் பயந்து உத்தரதேசத்தில் அடைக்கலம் பெற்று பின்னர் அங்கிருந்து தமிழ்நாடு சென்றதாகச் சூளவம்சம் கூறுகிறது. இலங்கை வரலாற்றில் தென்னிலங்கையில் சிற்றரசனாக இருந்தவர்கள் அநுராதபுர மன்னர்களாக வருவதும், ஆட்சிப்பூசலில் பதவி இழந்த சிங்கள மன்னர்களும், இளவரசர்களும் தென்னிலங்கையில் அடைக்கலம் பெறுவது அல்லது தமிழ் நாடு சென்று தமிழர் படையுதவி பெற்று அநுராதபுர மன்னர்களாக மாறுவது ஒரு பொதுவான நிகழ்வாக

இருந்தது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மன்னர்கள் வடஇலங்கையில் பாதுகாப்பு கருதி அடைக்கலம் பெற்றதற்கோ அல்லது இங்கு சிற்றரசர்களாக இருந்த சிங்கள இளவரசர்கள் அநுராதபுர மன்னனாக வந்ததற்கோ ஆதாரங்கள் காணப்பட வில்லை. இந்நிலையில் முதன் முறையாக 'மானா' என்ற சிங்கள இளவரசன் தென்னிலங்கையை விட வடஇலங்கை பாதுகாப்பெனக் கருதி இங்கு அடைக்கலம் பெற்றமை அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு வடஇலங்கை சாதகமாக இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீ வல்லவ என்பான் இலங்கை மீது படையெடுத்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் பாண்டியப் படைகளுடன் இணைந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த ஸேன மன்னனை தோற்கடித்ததாகச் சூளவம்ஸம் கூறுகிறது. இந்நிகழ்ச்சி வடஇலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தமிழகப் படையெடுப்பா ளருக்கு ஆதரவாக இருந்ததுடன் அநுராதபுர அரசை அவர்கள் ஒரு பகைமை அரசாகக் கருதிக்கொண்டிருந்தமையும் தெரிய வருகிறது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து ரோகண (இலங்கையின் தென்பகுதி), மலையக (இலங்கையின் நடுவே உள்ள மலைப்பிரதே சம்) மற்றும் உத்தரதேசம் (வடஇலங்கை) என்பன இலங்கையின் வேறுபட்ட மூன்று முக்கிய நிர்வாகப் பிராந்தியங்களாக இருந் ததைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் ரோஹண மற்றும் மலைய பிரதேசத்தை நிர்வகிக்க அநுராதபுர ஆட்சியாளர் கள் தமது குடும்ப வாரிசுகளை நியமித்தபோது உத்தரதேசத்தை நிர்வகிப்பதற்கு ஒருவரை நியமித்ததற்கு ஆதாரங்கள் காணப்பட வில்லை. இந்த வேறுபாடு வடஇலங்கை அநுராதபுர நிர்வாகத்திற் குள் அடங்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. இதுதொடர்பாக பேராசிரியர் இந்திரபாலா கூறும் கருத்துக்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

'உத்தரதேஸத்தைப்(வடஇலங்கை அல்லது நாகதீபம்) பற்றிய குறிப்புக்களை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுர

ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளைப் போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படிவந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப் படுத்திய பின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு'

இந்நிலை அநுராதபுர அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நாகதீபத்தில் மேலும் தீவிரமடைந்ததைக் காணலாம். சோழர் கி.பி.993 இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையை தலைநகராகக் கொண்டு 77 ஆண்டுகள் நேரடி ஆட்சி நடத்தியதன் மூலம் இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவர்களின் நேரடி ஆட்சியே இலங்கைத் தமிழர் வரலாறு தனிப்போக்குடன் வளர்வதற்கு முக்கிய காரணம் எனப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகிறார். முதலாம் இராஜராஜசோழன் 993 இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையை தலைநகராக மாற்றிய நிகழ்ச்சியையே இலங்கையில் சோழர் ஆட்சியின் தொடக்கமாக கூறப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் சோழர் எழுச்சி பெற்ற காலத்தில் இருந்து அவர்கள் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்புக்களையும், அவற்றின் விளைவுகளையும் நோக்கி னால் சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்வதற்கு முன்னரே வடஇலங்கையில் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதெனக் கூறலாம். இதுபற்றிப் பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு கூறுகிறார்

'சோழப்படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தக சோழன்) விளைவாக வடபகுதி, வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த போது, இப்பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்க கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சோழர் படைகள் வடபகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தக சோழன்

காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார் களா என்று தெரியவில்லை. அவர்கள் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்'.

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளும், நாகதீபத்தின் தனித்துவமான வரலாற்றுப் போக்கும் தான் கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கலிங்கமாகனது ஆட்சியால் சிங்கள மக்களும், அரசும் பொலநறுவையை விட்டு தெற்கு நோக்கி நகர்ந்த போது தமிழருக்குச் சார்பான அரசு ஒன்று கலிங்கமாகன், சாவகன் தலைமையில் வடஇலங்கையில் தோன்றக் காரணமாகியது. இவ்வரசே 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரியச்சக்கரவர்த்திகளின் வருகையோடு யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட அரசு ஒன்று வடஇலங்கையில் எழுச்சி பெறக் காரணமாகியது.

## V

தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. கி.மு.3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்குப் பரவிய போது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும் அறிமுகமாகியது. அவ்வாறு செவிவழிச் செய்தியாகப் பேணப்பட்ட மரபே கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தீபவம்ஸம், கி.பி.6ஆம் நூற்றாண்டில் மஹாவம்ஸம், கி.பி.6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சூளவம்ஸம் முதலான பாளி இலக்கியங்கள் தோன்றக் காரணமாயின. இந்நூல்கள் பௌத்த மதம் தோன்றி அது இலங்கைக்குப் பரவி வளர்ந்த வரலாற்றை முன்னிலைப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டதால் அவற்றில் இலங்கையின் முழுமையான வரலாற்றை எதிர்பார்க்க முடியாது. ஆயினும் இலங்கையின் தொல்லியல் ஆய்வுகள் வளர்ச்சியடை யாதிருந்த காலத்தில் அதன் ஆதிகால, இடைக்கால வரலாற்றை அறிவதற்கு இந்நூல்களையே அடிப்படை மூலாதாரமாகப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இவற்றை அடிப்படையாகக்

கொண்டே பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இதனால் அப்பாட நூல்களில் இலங்கையின் எல்லாப் பிராந்தியங்களினதும் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வரலாறு முழுமையாக இடம்பெற வாய்ப்பில்லாது போய்விட்டது. இதற்கு வடஇலங்கை வரலாறு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண வரலாறும் விதிவிலக்கல்ல.

இதனால் இலங்கை வரலாற்றுப் பாட நூல்களில் பதினாறாம் நூற்றாண்டு போத்துக்கேயர் இலங்கை வந்த போது கோட்டை, கண்டி அரசுகளோடு வடஇலங்கையில் யாழ்ப்பாண அரசு ஒன்றும் இருந்ததென்ற சிறு குறிப்போடு அப்பிரதேச வரலாறு தொடங்கு வதைக் காணலாம். இது யாழ்ப்பாண அரசுக்கு முந்திய காலத்தில் இப்பிராந்தியத்தில் மக்கள் வாழவில்லை என்ற கருத்தையும் ஏற்படுத்துகிறது. இதனால் இலங்கை வரலாறு கற்கும் தமிழ் மாணவர்கள் தமது மொழி, மதம், கலை, பண்பாடு என்பவற்றின் தொன்மையையும், தனித்துவத்தையும் தெரிந்து கொள்ளாமலே இலங்கை வரலாற்றைக் கற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. இக்குறைபாடுகள்தான் ஏனைய மக்களுக்கிருக்கும் வரலாற்று உணர்வும், பண்பாட்டு அடையாளங்களைக் கண்டறிந்து பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வமும் பெரும்பாலான தமிழ் மக்களிடம் இல்லாதிருக்க காரணம் எனவும் கூறப்படுகிறது.

## VI

1970 களின் பின்னர் தொல்லியல் ஆய்வில் ஏற்பட்ட தீவிர வளர்ச்சியும், புதிய கண்டுபிடிப்புக்களும் இலங்கையின் பூர்வீக மக்கள், பண்பாடு தொடர்பான புதிய கருத்துச் சூழலை அறிஞர்கள் மத்தியில் உருவாக்கியுள்ளன. இக்கண்டுபிடிப்புக்கள் பாளி இலக்கியங்கள் கூறியவற்றை உறுதிப்படுத்தவும், நிராகரிக்கவும், சொல்லாமல் விடப்பட்ட பல வரலாற்று உண்மைகளைச் சொல்லவும் உதவியுள்ளன. இந்த மாற்றங்களை சமகாலத்தில் வெளியிடப்பட்ட வரலாற்றுப்பாட நூல்களிலும் காணமுடிகிறது. ஆயினும் இலங்கையின் ஏனைய வட்டாரங்களுடன் ஒப்பிடுகையில் வடஇலங்கையில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய அளவில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப் பட்டன எனக் கூறமுடியாது. ஆயினும் இதுவரை மேற்கொள்ளப்

பட்ட ஒரு சில அகழ்வாய்வுகள் இப்பிராந்தியத்தின் வரலாற்றிற்கு புதுவெளிச்சமூட்டுபவையாக உள்ளன. இவற்றில் இருந்து இப் பிராந்தியத்திற்கு 3000 ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்ற உண்மை இப்போது தெரிய வந்திருக்கிறது. 1970களில் கந்தரோடையில் அகழ்வாய்வினை மேற்கொண்ட பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்கிலே யாழ்ப்பாணத்தின் முதலாவது பூர்வீக குடிகள் தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரிய திராவிடர் என்ற கருத்தை முன்வைத்தார். மேலும் அவர் தனது அகழ்வின் போது கந்தரோடையில் கண்டுபிடித்த பலதரப்பட்ட தொல்லியற் சான்றுகளை தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கிடைத்த பெருங்கற்காலச் சின்னங்களுடன் ஒப்பிட்டு இம்மக்கள் தென்தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்திருக்க லாம் அல்லது அவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணியிருக் கலாம் என்ற கருத்தை முன்வைத்தார். 1980களில் யாழ்ப்பாணத்தில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட கலாநிதி பொ.இரகுபதி அவர்கள் தனது ஆய்வின் மூலம் 40க்கு மேற்பட்ட இடங்களில் புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான தொல்லியற் சான்றுகளைக் கண்டுபிடித்து அக்குடியிருப்புக்களின் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடை இருந்ததெனக் குறிப்பிடுகிறார். கந்தரோடையில் இரண்டரைக் கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் பெருங்கற்காலக் குடியிருப்புகளுக்குரிய சான்றுகள் கண்டறியப்பட்டிருப்பதுடன் அப்பிரதேசம் 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் நேரடி ஆட்சி ஏற்படும் வரை அயலில் உள்ள இந்திய நாட்டுடனும், மேற்காசிய, கிழக்காசிய நாடுகளுடனும் நெருங்கிய வணிக உறவுகளைக் கொண்டிருந்ததற்கான தொல்லியற் சான்றுகளும் காணப்படு கின்றன. இவ்வாதாரங்களை நோக்கும் போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் வழித்தோன்றல்கள் எனக் கூறலாம்.

இலங்கைத்தமிழர் பண்பாட்டை தனித்து நோக்கும் அதேவேளை, யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை தனித்துவம் வாய்ந்ததாகக் கணிக்கும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகிறது. வரலாற்று ரீதியாக இலங்கைத் தமிழர் பண்பாடு தமிழகத்

தொடர்பால் வளர்ந்திருந்தாலும் தமிழகம் தனது தனித்துவமான பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை பிற்காலத்தில் இழந்த நிலையில் அவற்றை தொடர்ந்தும் பாதுகாத்து வரும் இடம் யாழ்ப்பாணம் எனத் தமிழக அறிஞர்கள் கூறுகின்றனர். சமகால நாகரிக மாற்றத்தால் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் சில மறைந்தும் அல்லது மறக்கப்பட்டு வந்தாலும் பல பண்பாட்டு விழுமியங்கள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதை மறுப்பதற் கில்லை. அவ்வாறு பேணப்பட்டு வருவதற்கு அவற்றிற்கு நீண்ட கால வரலாறு இருப்பதே காரணமாகும். உதாரணமாக இன்று யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள சில சடங்குகள், சமய நம்பிக்கை கள், ஈமச்சின்ன வகைகள், இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் கிரியை முறைகள் என்பவற்றின் அடிப்படை அம்சங்களின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாகப் பெருங்கற்காலப் பண்பாடே காணப்படுகிறது. இப்பண்பாட்டிற்கும் பிற்காலப் பண்பாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இங்கு வாழ்ந்த சமூகங்கள் எவ்வாறு கால மாற்றத்திற்கு ஏற்ப தமது பண்பாட்டை மாற்றி வளர்ந்து சென்றார் என்பதை தொடர்ச்சியாக எடுத்துக் கூற ஒரு வரலாற்று இலக்கிய மரபு தோன்றவில்லை. இக்குறைபாடு தமிழ்நாட்டுத் தமிழருக்கும் உண்டு. ஆயினும் இச்சமூகங்கள் காலத்திற்கு காலம் அன்றாடம் பயன்படுத்திய பாவனைப் பொருட்களும், வாழ்ந்த இருப்பிடங்களும், நகரங்களும், துறைமுகங்களும், வர்த்தக மையங்களும், போக்குவரத்துப் பாதைகளும் அவற்றுடன் இணைந்திருந்த கட்டிட அழிபாடுகளும் இன்று தொல்லியல், வரலாற்று எச்சங்களாகக் காணப்படுகின்றன. அவற்றை எமது மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றின் வரலாற்றுப் பழமையையும் அவற்றையெல்லாம் ஏன் பாதுகாக்க வேண்டும் என்பதன் அவசியத்தையும் கூற எழுந்ததே இந்த நூலாகும்.

# 2

## "ஆனைக்கோட்டை" யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பூர்வீக குடியிருப்பு மையம்

**யா**ழ்ப்பாணத் தீபகற்பத்தின் பூர்வீக மக்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? அவர்களுக்கும் தற்காலத்தில் குடாநாட்டில் வாழும் மக்களுக்கும் இடையிலான உறவுகள் என்ன? முதலான நீண்ட காலக் கேள்விகளுக்கான விடைகள் தற்காலம் வரை தெளிவற்றதாகவே இருந்து வந்துள்ளது. 1917 இல் கந்தரோடையில் மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வின் மூலம் குடாநாட்டின் வரலாற்றுத் தொன்மையை வெளியுலகிற்குத் தெரியப்படுத்திய போல்பீரிஸ் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரங்களில் ஒன்றாகக் கந்தரோடையை வருணித்தார். ஆயினும் இந்த ஆய்வின் மூலம் இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் யார்? அவர்கள் எக்காலத்திலிருந்து இங்கு வாழ்கிறார்கள் என்பதை அவரால் கூறமுடியவில்லை. அவ்வாறு கூறும் அளவிற்கு எமது தொல்லியல் ஆய்வு அக்காலத்தில் நவீன விஞ்ஞான முறையில் வளர்ந்திருக்கவு மில்லை.

1970 களில் நன்கு திட்டமிட்ட முறையில் கந்தரோடையில் அகழ்வாய்வினை மேற்கொண்ட பென்சில்வேனியப் பல்கலைக் கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்கிலே குடாநாட்டின்

முதலாவதாகக் குடியேறிய மக்கள் தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிடர் என்ற கருத்தை முன்வைத்தார். மேலும் அவர் தனது அகழ்வாய்வில் கண்டுபிடித்த பலதரப்பட்ட தொல்லியற் சான்றுகளை தென்னிந்தியா வில் குறிப்பாகத் தமிழகத்தில் கிடைத்த பெருங்கற்காலச் சின்னங்களு டன் ஒப்பிட்டு இம்மக்கள் தென்தமிழகத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்திருக்கலாம் அல்லது அவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணியிருக்கலாம் என்ற கருத்தை முன்வைத்தார். இங்கு கிடைத்த சில தொல்லியற் சான்றுகளை விஞ்ஞானபூர்வமான காலக் கணிப்பு முறைக்கு உட்படுத்திய அவர் கந்தரோடையின் முதலாவது மனித குடியிருப்பின் தொடக்கம் ஏறத்தாழ 2500 ஆண்டில் ஏற்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். ஆயினும் சமீபகால ஆய்வுகளில் இதன் தொடக்க காலக் குடியிருப்பு இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென வரையறை செய்யப்பட்டுள்ளது. 1980களில் குடாநாட்டிலுள்ள 40 புராதன குடியிருப்பு மையங்களை அடையாளப்படுத்திய பேராசிரியர் பொ.இரகுபதி அதன் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடையைக் குறிப்பிடுகிறார். ஆயினும் இக்குடியிருப்புக்களை முதலில் தோற்றுவித்த பெருங்கற்கால மக்களது பண்பாட்டின் சிறப்பம்சமாகக் கருதப்படும் இறந்தவர் களுக்காக அமைக்கப்படும் ஈமச் சின்னம் ஒன்றுதானும் கந்தரோடையில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலை யில் ஆனைக்கோட்டையில் குடியிருப்புக்களுடன் அப்பாற்பட்டு மக்களுக்குரிய ஈமச்சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குடாநாட்டின் பூர்வீக வரலாறு பற்றிய ஆய்வில் ஆனைக்கோட்டை முக்கியத்துவம் பெறக் காரணமாகும். இந்த இடத்தில் ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்வதற்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாடு என்றால் என்ன என்பதை வாசகர்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

பெருங்கற்காலப் பண்பாடு என்ற சொல் ஆதிகாலத்தில் இறந்தவர்களுக்காக பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங் கள் அமைக்கப்பட்டதன் காரணமாகத் தோன்றியதாகும். உலகின் பல நாடுகளில் வேறுபட்ட காலங்களில் கற்களைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில், பல அளவுகளில் ஈமச்சின்னங்கள்


அமைக்கப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் வடிவமைப்புக்கள் நாடுகளுக்கிடையே வேறுபட்டுக் காணப்பட்டாலும், இறந்தவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற நம்பிக்கையில் இவ்வீமச் சின்னங்கள் அமைக்கப்பட்டன என்பதில் பொதுவான ஒற்றுமைத் தன்மை காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழிபேசும் தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள் குறிப்பாக இம்மக்கள் பயன்படுத்திய கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள், தாழிகள், இரும்புக் கருவிகள், ஈமச்சின்னங்களின் வடிவங்கள் என்பவற்றில் பொதுவான ஒற்றுமைத்தன்மை காணப்படுவதால் இப்பண்பாடு இப்பிராந்தியங்களுக்குரிய தனித்துவமான அம்சமாக நோக்கப்படுகிறது. ஈமச்சின்னங்களை அமைக்கப் பெரிய கற்களைப் பயன்படுத்தியதால் இதற்கு பெருங்கற்காலம் என்ற பெயர் ஏற்பட்டாலும் பெரிய கற்கள் காணப்படாத இடங்களில் குறிப்பாக தென்னிந்தியா இலங்கை போன்ற நாடுகளில் இப்பண்பாட்டுக்குரிய கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black and Red Ware), இரும்பின் பயன்பாடு என்பவற்றிற்கான சான்றுகள் காணப்பட்ட இடங்கள் பெருங்கற் கால குடியிருப்பு பகுதியெனவும், இச்சின்னங்களுடன் தாழியடக்கம் (Urn), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் போன்ற ஈமச்சின்னங்கள் (Extended burial) காணப்பட்ட இடங்கள் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் எனவும் அழைக்கும் மரபு காணப்படுகிறது. அத்தகைய ஒரு பண்பாட்டிற்குரிய சான்றுகளே ஆனைக்கோட்டையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


பெருங்கற்கால ஈமச்சின்னம் (வவுனியா)

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வானது பொதுவாக இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச் சின்னம் பற்றிய ஆய்வாக மட்டும் அமையாது, கூடவே அக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்களது பலதரப்பட்ட பண்பாட்டுப் பரிமாணங்கள் பற்றிய ஆய்வாகவும் விளங்குகிறது. இலங்கையிலும், தென்னிந்தியாவின்


சில வட்டாரங்களிலும் வரலாற்றுக் காலம் தொடங்குவதற்கு முன்னோடியான நிலையான குடியிருப்புக்கள், நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங் களின் (Black and Red Wares) பயன்பாடு, மந்தை வளர்ப்பு, சிறு தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற அம்சங்கள் இப்பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததால் இக்காலம் நாகரீகத்தின் தொடக்க காலமாக வும், பிற்கால வரலாற்றிற்கான ஆக்க காலமாகவும் (Formation Period); அழைக்கப்படுகிறது. தமிழகத்தில் நாகரிக எழுச்சி, அரச தோற்றம், நகரமயமாக்கம், சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளின் தொடக்கப் புள்ளியாகப் பெருங்கற்காலப் பண்பாடு காணப்படு கிறது. இத்தகைய சிறப்புக்குரிய பண்பாட்டுச் சின்னங்களை ஆனைக்கோட்டை அகழ்வாய்விலும் காணமுடிந்தது சிறப்பான அம்சமாகும்.

ஆனைக்கோட்டைத் தொல்லியல் மையம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாந்துறை கடற்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இங்கு இரண்டு சதுரமைல் பரப்பில் ஆறு குடியிருப்பு மையங்களும், இரண்டு ஏக்கா பரப்பில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களும் அடையாளம் காணப் பட்டுள்ளது. அவற்றுள் தொல்லியற் சின்னங்கள் காணப்பட்ட சில மண்மேடுகள் ஏற்கனவே மண் அகழ்வோரின் நடவடிக்கைகளால் சிதைவடைந்து காணப்படுகின்றன. அவ்வாறு அகழப்பட்ட இடங்களில் புராதன தொல்லியற் சின்னங்கள் கவனிப்பாரற்று இருப்பதை அவ தானித்த கலாநிதி பொ.இரகுபதி 1980களில் வரலாற்றுத்துறை மாணவர் களுடன் சேர்ந்து மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் மூலம் அங்கு பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் இருந்ததை முதன் முறையாக உறுதிப்படுத்திக் கொண்டார். இதைத் தொடர்ந்து 1980களின் பிற்பகுதியில் பல்கலைக்கழக நிதியுதவியுடன்



ஆனைக்கோட்டை பெருங்கற்கால மனித எலும்புக் கூடு

பேராசிரியர் கா.இந்திரபாலா தலைமையில் இங்கு அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழ்வின் மூலம் இரு இடங்களில் பெருங்கற்கால மக்களது ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விரு ஈமச் சின்னமையங்களும் 10 அடி இடைவெளியில் 4அடி உயரம் கொண்ட மண்மேட்டின் மூன்றாவது மண்படையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவ் வீமச் சின்னங்களில் ஏறத்தாழ 5 அடி உயரம் உடைய இரு மனித எலும்புக் கூடுகள் கிழக்கு மேற்குத் திசையை நோக்கிய வண்ணம் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. அதில் முதாலாவது ஈமச்சின்னம் சற்றுக் காலத்தால் முற்பட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதில் இரு கைகளும் கட்டப்பட்ட மனித எலும்பைச் சுற்றி பலவகைப்பட்ட மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. அம்மட்பாண்டங்களில் கறுப்புச்-சிவப்பு. தனிக்கறுப்பு, சிவப்பு. நிற கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில மட்பாண்டங்களில் சுறா, மீன், மிருக எலும்புகள், நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. சில மட்பாண்டங்களில் குறியீடுகள் காணப்பட்டன. இப்பண்பாட்டுடன் இங்கு இரும்பின் பயன்பாடு புழக்கத்திற்கு வந்துள்ளதை உறுதிப்படுத்தும் இரும்புக் கருவிகளும், கழிவிரும்புகளும் பரவலாகக் கிடைத்துள்ளன. இரண்டாவது ஈமச் சின்னம் சற்றுக் காலத்தால் பிற்பட்டதென்பதை அவ்வீமச் சின்னத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரோம மட்பாண்டங்கள் (Rouletted Ware), இலக்குமி நாணயம் என்பன உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் ஈமச் சின்னத்தின் அமைப்பும், அதனுடன் காணப்பட்ட மட்பாண்டங்களும், படையற் பொருட்களும் முதலாவது ஈமச்சின்னத்தை பெருமளவுக்கு ஒத்தனவாகக் காணப்படுகின்றது. இவ்வீமச் சின்னங்களின் தோற்ற காலம் எது என்பதை வரையறை செய்யக்கூடிய விஞ்ஞான பூர்வமான காலக்



ஆனைக்கோட்டை முத்திரை

கணிப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இங்கு கிடைத்த காலத்தை ஓரளவுக்கு கணிக்க உதவும் பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை, உரோம மட்கலன்கள், லட்சுமி நாணயம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டுஇவ்விரு ஈமச் சின்னங்களும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால மக்களுக்குரியதென்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமச் சின்னம் என்ற பெருமை ஆனைக் கோட்டைக்கு இருந்தாலும், சர்வதேச அளவில் ஆனைக்கோட்டை முக்கியத்துவம் பெற்றதற்கு ஈமச் சின்னத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட ஈரெழுத்துப் பொறித்த சாசன முத்திரையே முக்கிய காரணமாகும்.

இச்சாசன முத்திரை முதலாவது மனித எலும்புக் கூட்டின் தலைமாட்டில் வைக்கப்பட்ட கறுப்புச்-சிவப்பு நிற வட்டிலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகும் இம்முத்திரையுடன் சுறா எலும்பினாலான மாலை, குறியீடுகள் மற்றும் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களும் சேர்ந்து காணப்பட்டமை சாசனத்தின் முக்கியத்துவத்தை மேலும் புலப்படுத்துவதாக உள்ளது. இம்முத்திரை இருவகையான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. முத்திரையின் மேற்பகுதியில் மூன்று குறியீடுகளும், அதற்கு கீழே ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று பிராமி எழுத்துக்களும் உள்ளன. ஒரு வகையில் குறியீடுகள் உணர்த்தும் பொருளையே கீழேயுள்ள பிராமி எழுத்துக்களும் புலப்படுத்துகிறது எனலாம். மேலே பொறிக்கப்பட்ட மூன்று குறியீடுகளை ஒத்த வடிவம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக முத்திரையில் பரவலாகக் காணப்படுகிறது. சிந்துவெளி நாகரிக கால முத்திரைகளை ஆய்வு செய்தோர் அக்காலத்தில் எழுத்தின் பயன்பாடு இருந்ததென்பதற்கு முத்திரைகளில் வரும் குறியீடுகளை சான்றாகக் காட்டுகின்றனர். 1960களில் இருந்து இம்முத்திரைகளை வாசிப்பதற்கு பல அறிஞர்கள் முயன்றும் இதுவரை அவர்களால் பொதுவான முடிவுக்கு வரமுடியவில்லை. இதற்கு எகிப்திய நாகரிக கால எழுத்தை வாசிப்பதற்கு றோசற்ரா போன்ற மூன்று மொழிச் சாசனம் உதவியது போல் சிந்துவெளி முத்திரைகளை வாசிக்க சிந்துவெளி எழுத்துக்களுடன் பிற்காலத்

திற்குரிய இன்னொரு மொழிச் சாசனம் கிடைக்கவில்லை என்ற காரணம் கூறப்படுகிறது. இந்நிலையில் ஆனைக்கோட்டையில் கிடைத்த முத்திரையில் மூன்று சிந்துவெளியை ஒத்த குறியீடுகளுடன் அதற்கு கீழே ஒலிப்பெறுமானமுள்ள மூன்று பிராமி எழுத்து கிடைத்திருப்பது சிந்துவெளி எழுத்துப் பற்றிய வாசிப்பிற்கு கிடைத்த முதல் துருப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இன்று சிந்துவெளி எழுத்தை வாசிக்க முற்படும் ஒருவர் ஆனைக்கோட்டை முத்திரையைக் கருத்தில் எடுப்பது தவிர்க்க இயலாத அளவிற்கு அது முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகிறது.

இச்சாசனத்தின் இன்னொரு முக்கியத்துவம் அதில் பொறிக்கப்பட்ட "கோவேத" என்ற பெயராகும். இதில் வரும் 'கோ' என்ற எழுத்தும் 'வேத' என்ற சொல்லும் தமிழில் அரசனைக் குறிப்பதாகும். தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் அரச உருவாக்கம் நிகழ்ந்ததற்கு உறுதியான சான்றுகள் உண்டு. இவ்வரச உருவாக்கத்தை இனக் குழு நிலையில் இருந்து அரசு தோன்றுவதற்கு இடைப்பட்ட காலமாகத் தோன்றிய குறுநில அரசுகள் எனப் பேராசிரியர் சுதர்சன் செனீவரட்ணா குறிப்பிடுகின்றார். இவற்றின் அடிப்படையில் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் ஆனைக்கோட்டை முத்திரையை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் குறுநில அரசு இருந்ததன் முக்கிய ஆதாரமாகப் பார்க்கிறார்.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனைக்கோட்டைத் தொல்லியல் மையத்தை 1980களில் பார்த்த போது அது எமது மூதாதையர் வாழ்ந்த இடம் என்பதன் அடையாளமாக பரந்த வயல் வெளிகளின் மத்தியில்இவ்விடம் மட்டும் உயர்ந்த மண்மேடுகளால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது அவ்விடத்தை இலகுவில் அடையாளம் காணமுடியாத அளவிற்கு அவ்விடம் மண் அகழ்வோரின் நடவடிக்கைகளாலும், விவசாயிகளின் நில ஆக்கிரமிப்புக் கொள்கையாலும் சுருக்கமடைந்து புதையுண்டிருந்த பெறுமதியான தொல்பொருட் சின்னங்கள் வயல் வெளிகளில்



ஆனைக்கோட்டையில் மண் அகழ்வுக்கு உட்பட்ட ஒரு தொல்லியல் மையம்

பாவனைக்குதவாத பொருட்களாக ஆங்காங்கே பரந்து காணப்படு கின்றன. மக்கள் தமது பாரம்பரிய மரபுரிமைச் சொத்துக்களை தாமாக உணர்ந்து பாதுகாக்க முன்வராத பட்சத்தில் அதற்கு என்ன நிகழும் என்பதற்கு ஆனைக்கோட்டைத் தொல்லியல் மைய நிகழ்வு எமக்கொரு சிறந்த பாடமாக அமைந்துள்ளது..

3

## வலிகாமம் - யாழ்ப்பாணத்தின் தொடக்ககால வரலாற்று மையங்கள்

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை இடப்பெயர்கள் பல கம, காம என் என்ற பின்னொட்டுச் சொற்களோடு முடிவடைவதைப் பாளி இலக்கியங்களும், பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களும் எடுத்துக் கூறுகின்றன. இவ்விரு மொழிகளும் இலங்கையில் மட்டுமன்றி பௌத்த மதம் நிலவிய நாடுகளில் எல்லாம் கல்வெட்டு மொழியாகவும், பேச்சு மொழியாகவும் கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டு வரை இருந்துள்ளன. இதனால் இச்சொற்கள் அந்நாட்டு இடப்பெயர்களிலும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக தற்போதைய தமிழகத்தின் வடஎல்லை மாநிலமான ஆந்திரால் உள்ள பிட்டுகாமம், புன்னன்காமம், நந்திகம் முதலான இடப்பெயர் களைக் குறிப்பிடலாம். அப்பெயர்கள் பிற்காலத்திலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய இடங்களுக்குரியப் பெயர்களாக இருந்ததற்கு 10ஆம், 11ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பாளி, பிராகிருத மொழிகள் பௌத்த மதம் நிலவிய நாடுகளில் அல்லது வட்டாரங்களில் அங்கு புழக்கத்தில் இருந்து வந்த சுதேச மொழிச் சொற்கள் பலவற்றைக் கடன் வாங்கியது போல் சுதேச மொழிகளும் இம்மொழிகளில் இருந்து பல சொற்களைக் கடன் வாங்கியதற்கு அல்லது அச்சொற்கள்


பிராகிருத மயப்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. உதாரணமாகச் சங்க இலக்கியத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட பெருமகன், பெருமகள் முதலான பெயர்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பருமக, பருமகன், பருமகள் எனப் பிராகிருத மயப்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இதற்கு இடப்பெயர் களும் விதிவிலக்கல்ல. திருகோணமலை மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டொன்றில் 'வேள்கம' (வேள்காமம்) என்ற இடப்பெயர் காணப்படுகிறது. இது வேள்காமம் என்ற தமிழ்ப் பெயரின் பிராகிருத வடிவமாகும். வேள் என்பது சங்க இலக்கியத்திலும், சமகால இலங்கை தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் வரும் 'வேள்' என்ற தலைவனைக் குறிக்கும் பட்டப் பெயராகும். தமிழில் 'வேள்' என்ற பட்டப் பெயர் வடமொழியில் 'ராஜா' என்ற பட்டப்பெயருக்குச் சமமான கருத்துடையதெனப் பேராசிரியர் ரோமிலாதாபர் குறிப்பிடுகிறார். ஆகவே திருகோணமலையில் கிடைத்த கல்வெட்டில் வரும் வேள்கமம் என்ற இடப்பெயர் தமிழகத்தில் காணப்படும் வேள்நாடு, வேளூர் என்ற இடப் பெயர்களுக்கு சமமான கருத்துடையதெனக் கூறலாம். பேராசிரியர் பரணவிதானா கல்வெட்டில் வரும் வேள்கம என்ற பெயரைத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் பொறித்திருக்க வேண்டும் எனக் கூறுகிறார். இதிலிருந்து பிராகிருத மொழிக்குரியதாக இருந்த பெயர்கள் அல்லது சொற்கள் தமிழ்மயப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. ஆகவே இன்று தமிழில் காமம், கமம் (சுண்ணாகம், கொடிகாமம், வலிகாம, பண்ணாகம், மல்லாகம்) என்ற பொது விகுதியிலும், இலங்கையில் நாகரிக உருவாக்கம் ஏற்படக் காரணமாக இருந்த பெருங்கற் காலப்பண்பாட்டு மக்களது குடியிருப்புக்களை அண்டியே இவ்விடப்பெயர்கள் முதலில் தோன்றியிருந்தன என்பதற்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இத்தகைய பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே வலிகாமத்திலுள்ள கந்தரோடையிலும், ஆனைக்கோட்டையிலும் இருந்துள்ளதை இவ்விடத்தில் நினைவு படுத்திக் கொள்வது பொருத்தமாகும்.

வலிகாமம் என்ற இடப்பெயர் முதன் முறையாக கி.பி.7ஆம் நூற்றாண்டுக்குரிய சிகிரியாக் கல்வெட்டில் காணப்படுகிறது. அங்குள்ள சுவரோவியங்களைப் பார்த்து தமது விமர்சனங்களை கல்லில் பொறித்தோர் பெரும்பாலும் தமது ஊர்ப்பெயர்களையும் குறிப்பிடத் தவறவில்லை. அப்பெயர்களில் இருந்து எப்படி பாளி, பிராகிருத மொழிகளில் அமைந்த கம, காம என்ற இடப்பெயர் களின் பின்னொட்டுச் சொல் சிங்களத்தில் கமுவ எனவும் தமிழில் கம் (உதாரணமாக அங்குள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள தமன்கம்) மாறியதற்குரிய ஆதாரங்கள் அங்குள்ள கற்பொறிப்புக் களில் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு கல்வெட்டில் 'வாலிகம்' என்ற இடப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பெயரை கலாநிதி நிக்லக்ஷ் என்ற அறிஞர் தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் இருந்து வரும் வலிகாமம் என அடையாளப்படுத் துகிறார். இப்பெயரே 13ஆம் நூற்றாண்டுக்குரிய சிங்கள இலக்கியத்தில் வலிகமுவ எனக் குறிப்பிடப்படுவதாக அவர் மேலும் கருதுகிறார். கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குரிய திருவாலங்காடு மற்றும் பல்லவராயன்பேட்டை கல்வெட்டுக்கள் இரண்டாம் இராசாதிராச சோழனது படைகள் வடஇலங்கை மீது படையெடுத்து மன்னார், மாதோட்டம், மட்டிவால்நாடு, ஊர்காவற்துறை, புலச்சேரி ஆகிய ஊர்களுடன், வல்லிக்காமம் என்ற ஊரிலும் நிலைகொண்டிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைபிடித்து தமிழ்நாடு கொண்டு சென்றதாகக் கூறுகிறது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகனது ஆட்சியைத் தொடர்ந்து சிங்கள இராசதானியும், மக்களும் பொலநறுவையை விட்டு தென்னிலங்கை நோக்கி நகர்ந்தபோது வடஇலங்கையில் தமிழருக்குச் சார்பான அரசு கலிங்கமாகன் தலைமையில் தோன்றிய தாகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்விலக்கி யங்கள் அவனது அரசின் தலைநகர் வடஇலங்கையில் எங்கிருந்த தென்பதை தெளிவாகக் கூறாவிட்டாலும் அவனது படைகள், கோட்டைகள் நிலை கொண்டிருந்த இடங்களாக புலச்சேரி, மன்னார், மாதோட்டம், ஊர்காவற்துறை, முதலான இடங்களுடன் வலிகாமத்தையும் குறிப்பிடுகின்றன. தம்பதேனியாவில் இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சி செய்த போது (1236- 1271) வலிகாமத்தின் மீது தமிழ்படை வீரர்கள் படையெடுத்து அங்கு நிலைகொண்டதாக

பூஜாவலிய என்ற சிங்கள இலக்கியம் கூறுகிறது. அவ்விடம் சில இடங்களில் குட்டவலிகாமம் எனவும் குறிப்பிடப்படுகிறது. கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோன்றிய யாழ்ப்பாண அரசு காலத்தில் அதன் ஆக்கத்திற்கு உட்பட்டிருந்த நிர்வாகப் பிரிவுகளில் வலிகாமம் முக்கிய மாவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 16ஆம் நூற்றாண்டில் நல்லூர் இராசதானியை வெற்றி கொண்ட போர்த்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் தமது நிர்வாகத்தில் வலிகாமத்தை முக்கிய இடமாகக் கூறியிருப்பதுடன் அவர்களது அரச ஆவணங்களில் தற்காலத்தைப் போல் வலிகாமம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. காலத்தால் முந்திய சிகிரியாக் கல்வெட்டில் வலிகாமம் என்ற பெயரின் முன்னொட்டுச் சொல் 'வலி' எனவும் சோழக் கல்வெட்டில் 'வல்லி' எனவும் காணப்படுகிறது. யாழ்ப்பாணப் பேரகராதியிலும், சென்னை தமிழ்ப் பெயரகராதியிலும் இவ்விரு சொற்களுக்கும் ஒரு வகைத் தாவரக்கொடி, மஞ்சல், தங்குமிடம் எனப் பொருள் கூறப்பட்டுள்ளன. ஆகவே வலிகாமம் என்ற பெயர் இவற்றில் ஏதோ ஒரு கருத்தில் இருந்து தோன்றியதெனக் கருத இடமுண்டு. சோழக் கல்வெட்டுகளிலும், பாளி, சிங்கள இலக்கியங்களிலும், வலிகாமம் ஒருதுறைமுகம் சார்ந்த நகரமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 4

## யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புராதன இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிப்பு



கோட்டையின் வடிவமைப்பு

யாழ்ப்பாணத்தில் 429 ஆண்டுகள் ஐரோப்பியரது மேலாதிக்கம் நிலவியதன் அடையாளமாக காணப்படும் நினைவுச் சின்னங்களுள் யாழ்ப்பாணக் கோட்டைக்குத் தனித்துவமான வரலாறு உண்டு. யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு தெற்கே கடல்நீரேரியுடன் அமைந்த இக்கோட்டை இலங்கையில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய கோட்டையாகக் கூறப்படுகிறது. கி.பி. 1619 அளவில் போத்துக்கேயரால் முதலில் இக்கோட்டை கட்டப்பட்டதாகக் கூறப்பட்டாலும் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18ஆம் நூற்றாண்டிலும் ஆட்சி புரிந்த ஒல்லாந்தரால் மீளக்கட்டப்பட்ட தோற்றத்துடனேயே தற்போதைய கோட்டை காணப்படுகிறது. அதில் சில மாற்றங்களை பிரித்தானியர் தமது ஆட்சியில் ஏற்படுத்தியிருந்தாலும் அவை ஒல்லாந்தர் காலக் கோட்டையின் அடிப்படைத் தோற்றத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அதனால் தான் இக்கோட்டையை

ஒல்லாந்தர் காலக் கோட்டையென அழைக்கப்படுகிறது.




கோட்டையின் அகழிப் பக்கச் சுவர்


போர்த்துக்கேயரால் நான்கு பக்கச் சுவர் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கோட்டையை ஒல்லாந்தர் நட்சத்திர வடிவில் ஐந்து பக்கச் சுவர்களைக் கொண்டதாக மாற்றியமைத்தனர். இந்த வடிவில் இலங்கையில் உள்ள ஒரேயொரு கோட்டை இதுவாகும். 62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் ஒவ்வொன்றும் கீழ்ப்பகுதி 40 அடி அகலமும் மேற்பகுதி 20 அடி அகலமும் 30 அடி உயரமும் கொண்டவை. படையெடுத்து வரும் எதிரிகளை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் சுவரின் உயரம் மேலிருந்து கீழ்நோக்கிப் பதிந்து காணப்படுகிறது. இவ்வெளிப்புறச் சுவர் களைச் சுற்றி ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. நான்கு பக்கமும் பாரிய பீரங்கித் தளங்களையும், பாதுகாப்பு அரண்களையும், காவற்கோபுரங்களையும், சுரங்கங்களையும், சுடுகள தளங்களையும் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி இரண்டு மைல் தொலைவில் 200 போத்துக்கேயப் படைவீரர்களும் உள்ளூர்ப் படை வீரர்களும் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்ததாக போத்துக்கேய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 34 ஏக்கரில் அமைந்த கோட்டையின் உட்பகுதியில்



கோட்டையின் வெளிப்புறத் தோற்றம்



உட்பக்க தோற்றம்




[illegible]

நிர்வாக மையங்களும், படை வீரர்களின் இருப்பிடங்களும், ஒல்லாந்தர் கட்டிய கிறிஸ்தவ ஆலயமும், யாழ்ப்பாணத்தை நிர்வகித்த ஆளுனர் மாளிகையும் (இராணி மாளிகை) சிறைச்சாலைகள், பிற நிர்வாகக் கட்டிடங்களும் காணப்படுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சியில் கொழும்பு, காலி கோட்டைகள் ஒரு நகரமாகச் செயற்பட்ட போது யாழ்ப்பாணக் கோட்டை மட்டும் இராணுவ, நிர்வாக மையமாகவே செயற்பட்டது.



அழிவடைந்த கோட்டையின் ஒரு பக்கத் தோற்றம்

இந்துசமுத்திர நாடுகளில் உள்ள கோட்டைகளில் கம்பீரமும், அழகும், சிறந்த தொழில் நுட்பக் கலை மரபும் கொண்ட கோட்டையாக யாழ்ப்பாணக் கோட்டை மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டைகள் பற்றி 1984இல் ஆய்வு மேற்கொண்ட நெல்சன் என்பவர் சமகாலத்து சிறந்த தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையை இங்கிலாந்தில் உள்ள தலைசிறந்த கோட்டைகளுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறந்த வடிவமைப்புக் கொண்டதெனப் புகழ்ந்து கூறுகிறார். இத்தகைய சிறப்புக்குரிய இக்கோட்டை இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அதிலும் குறிப்பாக கடந்த மூன்று சகாப்த கால அனர்த்தத்தால் அதன் பொலிவையும்,



கிறிஸ்தவ ஆலயத்தின் மாதிரி தோற்றம்

சிறப்பையும் இழந்து காணப்படு கிறது. வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு சுற்றி வர அமைந்துள்ள பெரிய அரண்கள் கோட்டையென்பதைப் புலப்படுத்தினாலும் உள்ளே இருந்த அனைத்துக் கட்டிடங்களும் முற்றாக அழிவடைந்து ஒரு கற்குவியலாகவே காட்சியளிக்கின்றது.

இந்நிலையில் இலங்கை நெதர்லாந்து அரசுகளின் நிதியுதவியுடன் மூன்றாண்டு காலத் திட்டத்தில் இக் கோட்டையைப் பழைய நிலைக்கு கொண்டு வரும் புனர்நிர்மாணப்பணியை தற்போது இலங்கைத் தொல்லியற் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இப்பணியினை நிறைவு செய்யத் தொல்லியற் திணைக்கள அறிஞர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பட்டதாரிகள், பலதரப்பட்ட தொழில்நுட்பவியலாளர், தொழிலாளர்கள் என நூற்றுக் கணக்கான பணியாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் தமது ஆரம்ப புனர்நிர்மாண பணிகளாக கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மாதிரி அகழ்வாய்வுகளையும், இடியுண்ட கட்டிடப் பகுதிகளில் தொல்லியல் மேலாய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வுகளின் போது கிடைத்த தொல்லியல் ஆதாரங்கள் கோட்டையின் வரலாற்றிற்கு மட்டுமல்ல இப்பிரதேசத்தின் பூர்வீக வரலாற்றிற்கும் வெளிச்சமூட்டுபவையாக அமைந்துள்ளன. இவையனைத்தும் ஆரம்ப ஆய்வுகளில் கிடைத்தவை. இங்கெல்லாம் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது மேலும் பல சான்றுகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுண்டு.





இங்கு கிடைத்த தொல்லியல் ஆதாரங்களுள் புராதன இந்து ஆலயத்திற்கு பயன்படுத்தப்பட்ட கருங்கல் மற்றும் சுண்ணக் கல் என்பவற்றால் ஆன தூண்கள், ஆலயத்தின் பிற கட்டிடப் பாகங்கள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்களில் யாழ்ப்பாணக் கோட்டை கட்டிய வரலாறு அதிலும் குறிப்பாக கோட்டையைக் கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்ட கற்கள் எவ்வாறு பெறப்பட்டதென்ற வரலாறு விபரமாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கோட்டை கட்டுவதற்கு வேண்டிய முருகக் கற்கள் (கோரல் கற்கள்) அயலில் உள்ள வேலணை, நயினாதீவு எழுவைதீவு, அனலைதீவு முதலான இடங்களில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தீவுகளைச் சுற்றியுள்ள கடல்களில் இருந்து முருகக் கற்களைக் கொண்டுவந்த தோணிகள் ஒவ்வொன்றுக்கும் அக்காலத்தில் 3 பணம் வழங்கப் பட்டது. கடலில் இருந்து கற்களைச் சேகரித்து தோணியில் ஏற்றுவதற்கு தோணியொன்றிற்கு அரைப்பணம் வழங்கப்பட்டது. தோணிகளுக்குப் பாதுகாப்பாகச் செல்லும் அதிகாரிக்கு மாதம் ஒன்றிற்கு 13 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது. கோட்டையைக் கட்டுவதில் போத்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மாரும் பங்கு கொண்டனர். அவர்களுள் தலைமை மேசனுக்கு நாள் ஒன்றிற்கு ஒரு பணமும், அவனுக்கு கீழே வேலை செய்யும் மேசனுக்கு நாள் ஒன்றிற்கு அரைப் பணமும் சிற்றாள்களாக வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றிற்கு 70 கரண்டி சாமி அரிசியும், கோட்டை கட்டுவோரை மேற்பார்வை செய்யும் பண்டாரத்திற்கு மாதம் ஒன்றிற்கு 8 பணமும் சம்பளம்



தாமரைப் பூ வடிவில் செதுக்கப்பட்ட தூண்





பொழிந்த சுண்ணக்கற் தூண்

வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிக்கும் சுண்ணாம்புக் காளவாய்கள் குடாநாட்டின் பல இடங்களில் உருவாக்கப்பட்டன. அவை சுண்ணக் கற்களைப் பதமாக்கி பண்ணைக் கரைக்கு கொண்டு செல்லப்பட்டன. அவற்றோடு கலப்பதற்கான சக்கரை மூடைகள் இந்தியாவில் கோவாவில் இருந்து தருவிக்கப்பட்டன. இவற்றோடு கலப்பதற்கான களி மண்குளங்களில் இருந்து பெறப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளன இந்த விபரங்கள் யாழ்ப்பாணக் கோட்டை முழுக்க முழுக்க முருகக்கற்களைக் கொண்டே கட்டப்பட்டதென்ற கருத்தைப் புலப்படுத்துகிறது. ஆனால் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும், அழிவடைந்து காணப்படும் கிறிஸ்தவ ஆலயப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்விலும் முருகக் கற்களுடன் பல அளவுகளில், பல வடிவங்களில் அமைந்த சுண்ணாம்பு மற்றும் கருங்கற்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அவதானிக்க கூடிய முக்கிய வேறுபாடு முருகக்கற்கள் குறிப்பிட்ட அளவுகளில் (10"x6") வெட்டப்பட்டு பொழியப்பட்டு கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ள போது கருங்கற்களும், சுண்ணக் கற்களும் வேறுபட்ட அளவுகளிலும், வடிவங்களிலும் ஒழுங்கற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அக்கற்களில் பெரும்பாலானவை ஏற்கனவே இந்து ஆலயங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் என்பதற்கு அவற்றில் செதுக்கப்பட் டுள்ள சிற்பங்களும், அலங்காரங்களும் சான்றாகக் காணப்படு கின்றன. இக்கற்கள் எங்கிருந்து பெறப்பட்டதென்ற விபரங்கள் போத்துக்கேய, ஒல்லாந்து ஆவணங்களில் விபரமாகக் குறிப்பிடப் படவில்லை. ஆயினும் அவர்கள் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறிதுமாக இருந்த 500 ஆலயங்களும், பெரிய வசிப்பிடங்களும் இடிக்கப்பட்டு அவற்றிலிருந்த கற்கள் கோட்டை கட்டப்பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நல்லூர் இராசதானியை 1519இல் வெற்றி கொண்ட போர்த்துக்கேயர் அங்கிருந்த பெரிய ஆலயத்தை தமது பாசறையாகப் பயன்படுத்தி விட்டு பின்னர் அவ்வாலயத்தையும் இடித்தழித்து அக்கற்களைக் கோட்டை கட்டப் பயன்படுத்தியதாக போர்த்துக்கேய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இதனால் கோட்டையில் முருகக் கற்களோடு கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்


பட்ட ஆலயங்களுக்குரிய கற்களின் முக்கியத்து வத்தை இவ்வரலாற்று நிகழ்ச்சிகளின் பின்னணியில் நோக்குவதற்கு இடமுண்டு.

இக்கற்கள் காணப்பட்ட இடங்களுள் கோட்டைக்குள் இருந்த கிறிஸ்தவ தேவாலயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1730 இல் கட்டி முடிக்கப்பட்ட இவ்வாலயத்தின் அமைப்பு சிலுவை போன்ற வடிவில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 600 அடி சுற்றளவு கொண்ட இவ்வாலயத்தில் 50 அடி அகலமான இருவாயில்கள் காணப்படுகின்றன. வெளியில் சிறிதாகத் தோற்றமளித்த இவ்வாலயத்தின் உள்ளே மிக அலங்காரமான ஒல்லாந்தர் காலக் கலைமரபின் உச்ச நிலையில் அதன் போதனை மண்டபமும், கலையரங்கும் இருந்ததாகக் கூறப்படுகிறது. இங்கு ஒல்லாந்தர் காலத் தேவாலய மணியோடு போத்துக்கேய மணியும் பயன் படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தில் பல்வேறு காலகட்டத்திற்குரிய கல்லறைகளும், போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் காலப் போர்வீரர்கள், உயர் அதிகாரிகள் என்போருக்காக எழுப்பப்பட்ட நினைவுக் கற்களும், சாசனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் போத்துக்கேயர் கட்டிய கத்தோலிக்க தேவாலயத்தையே பின்னர் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றினர் என்பதை உறுதி செய்கின்றன. ஆயினும் தற்போது இவ்வாலயத்தின் முழுமையான அமைப்பையோ அல்லது அவற்றின் தொழில் நுட்பக்கலை மரபையோ தெரிந்து கொள்ளமுடியாத அளவில் அவ்வாலயம் முற்றாக அழிவுண்டு கல்மேடாகக் காட்சியளிக்கிறது.


சித்திர வேலைப்பாடுடைய தூண்


பொழிந்த கருங்கற் தூண்


இவ்வாலய அழிபாடுகளிடையே கிடைத்த சான்றுகளைக் கொண்டு முருகக்கல், செங் கட்டி, சுதை என்பவற்றைப் பயன்படுத்தி இவ்வால யத்தைக் கட்டியுள்ளனர் என்பது தெரிகிறது. ஆயி னும் இவ்வாலயக் கட்டிடக் கலை மரபுக்கு பொருந்தாத வகையில் சில கருங்கற் தூண்களும், சுண்ணாம்புக் கல் தூண்களும் இங்கு காணப்படுகின்றன. இவை இவ்வாலய அழிபாட்டின் மேற்படையில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். இவ்வழிபாடு முழுமையான ஆய்விற்கு உட்படுத்தப்படுமானால் மேலும் பல கற்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இங்கு கிடைத்த கற்களில் கருங்கற்தூண்களும், ஒரு முருகக் கற்தூணும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அதில் இரு கருங்கற் தூண்களும் இந்து ஆலயத்தின் கருப்பக்கிருக அல்லது முன்மண்டபத் தூணாக இருக்கலாம். சற்சதுர வடிவில் நன்கு பொழிந்து வெட்டப்பட்ட தூண்களின் நடுப்பாகத்தில் தாமரைப்பூ வடிவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு கருங்கற் தூணின் மேற்பாகத்தில் காணப்படும் தாமரை வடிவம் திராவிடக் கலைமரபிற்குரிய போதிகை வடிவமாகக் காணப்படுகிறது. மற்றைய தூண் சுண்ணக்கல்லால் ஆனது. ஏறத்தாழ 5அடி நீளமும் 11/2 அகலமும் கொண்ட இத்தூண் பலகை போன்ற வடிவில் நன்கு பொழியப் பட்டுள்ளது. இத்தூண் ஆலய முகப்பின் வாசல் படியில் அல்லது கபோதத்திற்கு மேல் வைக்கப்பட்ட கற்பலகையாக இருக்கலாம்.


சுண்ணக் கல் தூண்

ஏனைய தூண் களும், கற்களும் கண்டு பிடிக்கப்பட்ட முக்கிய இட மாக கோட்டையின் மேற் குப்பக்க மேல்மாடித்தளம் காணப்படுகிறது. பெருமளவு சிதைவடைந்த இம்மேற்


கர்ப்பக் கிருகத்தில் இருந்த பீடம்?

தளம் மீள்கட்டுமானத்திற்காக அகழப்பட்டபோது அதன் அடிப்பாகங்கள் முருகக்கற்களோடு சுண்ணக்கல் மற்றும் கருங்கற்தூண்களும் பயன்படுத்திக் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் இதன் மேற்தளத்திலுள்ள பீரங்கித் தளங்களும், சுடுதளங்களும் பல்வேறு அளவுகளிலும், வடிவங்களிலுமான கருங்கல்,சுண்ணகற் தூண்களைக் கொண்டு கட்டப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை கோட்டை கட்டுவதற்கான நோக்கில் வெட்டப்பட்ட கற்களாக இல்லாதது ஆலயத்திற்குரிய தூண்கள் என்பதை அவற்றின் வடிவங்களும், அவற்றில் பொறிக்கப்பட்ட அலங்காரங்களும் உறுதி செய்கின்றன. அவற்றில் இரு சுண்ணக்கற் தூண்கள் நடுவில் சற்சதுரமாக வெட்டப்பட்டு ஒரு பக்கத்தில் ஒரு துவாரமும் மறுபக்கத்தில் இரு துவாரங்களும் இடப்பட்டு இரு பக்க நுனிப்பாகங்களும் அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தூண்களில் காணப்படும் துவாரங்கள் இன்னொரு கற்தூணுடன் பொருத்திக் கட்டும் வகையில் செதுக்கப்பட்டதெனக் கருதஇடமுண்டு. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சில சுண்ணக்கற்கள் வளைவாக வெட்டப்பட்டு அவை பிற கற்களுடன் பொருத்திக் கட்டும் வகையில் அவற்றின் உட்பாகம் மூன்று படிகள் கொண்டதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இக்கற்கள் தூணின் மேற்புறத்தில் பலகைக்கு மிண்டு போல் அமைந்துள்ள வளைவான கொடுங்கை யாக இருக்கலாம். இங்கு சற்சதுர வடிவில் நடுவில் பள்ளமாக அமைந்த கருங்கற்பலகைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் மிகப்பெரிய கருங்கல்லின் நடுப்பகுதில் பள்ளமிடப்பட்ட கருங்கல் ஒன்று கிடைத்துள்ளது. இக்கல் கருப்பக்கிருகத்தில் இருந்த ஆவுடையாக அல்லது தெய்வச் சிலை வைக்கப் பயன்படுத்திய பலிபீடமாக எடுத்துக்கொள்ள இடமுண்டு.


கபோதக் கல்?

மேற்கூறப்பட்ட கற்களும், கற்தூண்களும் இந்து ஆலயங்களுக்குரியவை என்பதில் ஐயமில்லை. 16ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை அன்னியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததால் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்களை முன்னிலைப்படுத்திய அன்னியர் ஆட்சியில் கோட்டைக்குள் இந்து ஆலயங்கள் கட்டியிருக்க வாய்ப்பில்லை. இதனால் இவ்வாலயக்கற்கள் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களுக்குரிய கற்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவ்வாலயங்கள் போத்துக்கேயர் வருகைக்கு முன்னர் கோட்டையமைந்திருந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தவையா அல்லது கோட்டைக்கு வெளியே கட்டப்பட்டிருந்த ஆலயங்களா என்பதை எதிர்கால ஆய்வில் கிடைக்கும் சான்றுகள்தான் உறுதிசெய்ய வேண்டும்.

வரலாற்றறிஞர்களில் ஒருசாரார் போத்துக்கேயர் வருகைக்கு முன்னரே யாழ்ப்பாண அரசர் காலத்தில் இவ்விடத்தில் ஒரு கோட்டையிருந்ததாகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்கால இலக்கியங்களில் வரும் யாழ்ப்பாண அரசு காலக் கோட்டைகள் பற்றிய குறிப்புக்களைக் எடுத்துக்காட்டுகின்றனர். மேலும் யாழ்ப்பாண அரசின் மீதான செண்பகப்பெருமாள் படையெடுப்பு பற்றிக் கூறும் ராஜாவலிய என்ற சிங்கள நூலும் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த காவலரண்கள், கோட்டைகள் பற்றிக் கூறுவதும் இதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் கோட்டைகள் பற்றிய ஆதாரங்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கிறது. கிழக்கிலங்கையில் கிடைத்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிச் சாசனம் ஒன்றில் 'கொடவேள்' என்றபெயர் காணப்படுகிறது. இதைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் 'கோட்டை வேள்' எனப்பொருள் கொண்டுள்ளார். பொலநறுவை அரசு காலத்தில் பாளி, சிங்கள இலக்கியங்களில் கோட்டைகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. 11ஆம் நூற்றாண்டில் முதலாம் விஜயபாகுவின் அரசிற்கும், பௌத்த மதத்திற்கும் பாதுகாப்பளித்த சோழர்கால வேளைக்காறப்படையினர் நிலைகொண்டிருந்த இடங்களாக மகாதொட்ட (மாதோட்டம்) மட்டிகாவட்டதீர்த்த ஆகிய

இடங்கள் குறிப்பிடப்படுகிறது. இதில் குறிப்பிடப்படும் மட்டி காவட்ட தீர்த்த என்ற இடம் பூநகரியில் உள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இதைப் பொருத்தமென எடுத்துக் கொள்ளும் பேராசிரியர் பொ.இரகுபதி அவர்கள் மட்டிகாவட்ட என்பது களிமண்ணால் வட்டமாக (மட்டி-கிமண், வட்ட- வட்டம்) அமைக்கப்பட்ட கோட்டையெனப் பொருள் கொள்கிறார். இரண்டாம் இராசாதி ராஜனது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவராயன் பேட்டை, திருவாலங்காட்டுச் சாசனங்கள் வடஇலங்கை மீது படையெடுத்த சோழப்படை மட்டிவால், ஊராத்தோட்டை, வலிகாமம், மாதோட்டம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைபிடித்து தமிழ் நாட்டுக்கு கொண்டு சென்றதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் மட்டிவால் என்ற இடம் தற்போது பூநகரியில் உள்ள மட்டுவில் நாட்டைக் குறிப்பிடலாம். இவ்விடத்தில் போத்துக்கேயரால் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரால் மீளக் கட்டப்பட்ட கோட்டை அமைந்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

இப்பின்னணியில் வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண அரசு காலத்தில் தற்போதைய கோட்டை அமைந்த இடம் ஒரு வர்த்தக மையமாக அல்லது கோட்டை இருந்த இடமாக இருந்திருக்க இடமுண்டு. ஏனெனில் கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்ச் சின்னங்கள் போத்துக்கேயர் கோட்டை கட்டுவதற்கு 1000ஆண்டு களுக்கு முற்பட்டதென தொல்லியற் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நிமால்பெரேரா குறிப்பிடுகிறார். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் போல் பீரிஸால் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாணயங்கள் இதன் காலத்தை முன்னோக்கி நகர்த்துகிறது. கோட்டையுடன் இணைந்த அரியாலை, மணியம்தோட்டம் காக்கை தீவு போன்ற இடங்களில் பேராசிரியர் இரகுபதி மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் கோட்டை அமைந்த பிரதேசத்தின் வரலாற்றை மேலும் முன்னோக்கிப் பார்க்கத் தூண்டுகிறது. 1980 அளவில் கோட்டைப் பகுதியில் ஆய்வு மேற்கொண்ட பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் கோட்டையின் மேற்குப்புற

மேற்தளத்தில் கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதக் கூடிய கிரந்த எழுத்துப் பொறித்த கல்வெட்டை அவதானித்ததாகக் குறிப்பிடுகிறார். மேலும் கோட்டையின் உட்புற வாசலில் கிடைத்த 11ஆம் நூற்றாண்டுக் குரிய கல்வெட்டொன்று முதலாம் இராஜேந்திரசோழனால் ஆலயமொன்று அளிக்கப்பட்ட தானம் பற்றிக் கூறுகிறது.

இவ்வாதாரங்கள் அனைத்தையும் ஒன்றுசேர நோக்கும் போது கோட்டை அமைந்த பிரதேசம் போத்துக்கேயர் காலத்திற்கு முன்னரே அதன் அமைவிட முக்கியத்துவம் காரணமாக முதன்மை பெற்றிருந்ததென்பது தெரிகிறது. ஆயினும் அவற்றின் அடிப்படையில் கோட்டைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயக் கற்களையும், தூண்களையும் போத்துக்கேயர் வருகைக்கு முன்னர் இங்கிருந்த ஆலயங்களுக்குச் சொந்தமானவை என்ற முடிவுக்கு வரமுடியாது. அதேவேளை கோட்டை அமைந்திருந்த இடங்களில் முன்னரே ஆலயங்கள் இருந்திருக்கலாம் என்ற கருத்தையும் நிராகரிக்க முடியாது. ஆனால் இக்கோட்டையைக் கட்டிய போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலயங்களையும், பெரிய இருப்பிடங்களை அழித்து அவற்றின் கற்களைக் கொண்டும் கோட்டை கட்டியதாகக் கூறியிருப்பதனால் இங்கு கிடைத்த ஆலயக் கற்கள் பெரும்பாலும் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலயங்களுக்கு உரியவை என்பது தெளிவாகிறது. யாழ்ப்பாண அரசு காலத்தில் பெரும்பாலும் சுண்ணக்கற்களைப் பயன்படுத்தியே ஆலயங்கள் கட்டப்பட்டதாகப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கூறுகிறார். அதற்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்கள் கி.பி.11ஆம் 12ஆம் நூற்றாண்டுக்குரியவையாகக் கருதப்படுகிறது. கோட்டைக்குள் இருவகைக் கற்களும், தூண்களும் காணப்படுவதால் அன்னியரால் வேறுபட்ட காலத்தைச் சேர்ந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளமை தெரிகிறது. ஆகவே தொடர்ந்து கோட்டைக்குள் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகளும், மேலாய் வுகளும் புதிய விளக்கம் தரும் வகையில் அதிர்ச்சியான நம்பகரச் சான்றுகளைத் தரலாம் என எதிர்பார்க்கலாம்.

# 5

## வேலணை சாட்டியில் பெருங்கற்காலப் பண்பாடு



அண்மைக் காலத்தில் வடஇலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய தொல்லியல் மையங்களில் தீவகத்தில் உள்ள சாட்டியும் ஒன்றாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்தில் உள்ள ஒரு கடற்கரைக் கிராமமாகும். இலங்கையின் வரலாற்றுப் பழைமை வாய்ந்த துறைமுகங்களைக் கொண்ட கிராமம் என்ற வகையில் சாட்டிக்குத் தனித்துவமான வரலாற்றுச்சிறப்புண்டு.

இதன் அமைவிடம் புவிச் சரிதவியல் அடிப்படையில் தமிழகத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதால் இவ்விடம் பண்டு தொட்டு தென்னிந்தியாவுடனும், தென்னிலங்கையுடனும் யாழ்ப்பாணக் குடாநாடு ஏற்படுத்திக் கொண்ட கடல்வழித் தொடர்பிற்குக் குறுக்கு நிலமா


கவும், தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய தொடக்க வாயிலாக வும் திகழ்ந்ததெனக் கூறலாம். இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இப் பிரதேசம் பற்றியும், இவ்விடத்தைச் சுற்றியுள்ள தீவுகள் பற்றியும் பண்டைய இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும், ஐரோப்பியர் கால ஆவணங்க ளிலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. அத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்க ளில் இக்கிராமத்தில் பிற தேவைக்காக மண் அகழப்பட்ட போது எதிர்பாரா மல் கிடைத்த தொல்லியற் சான்றுகளும் 1980 களில் யாழ்ப்பாணப்பல்க லைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் பேரா சிரியர் பொ.இரகுபதி ஆகியோர் இங்கு மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வில் சேகரித்த தொல்லியற் சின்னங்களும் தீவகம் பற்றி இலக்கியக் கலாநிதி வி.சிவசாமி எழுதிய நூலும் ஆய்வுக் கட்டுரைகளும் இவ்விடத் தின் பழைமையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

**பூர்விக மக்களும் அவர்கள்**
**குடியேறியதற்குச் சாதகமாக இருந்த காரணங்கள்**

சாட்டிக் கிராமத்தில் பரவலாகக் காணப்படும் தொல்லியல் எச்சங் கள் இங்கு பண்டு தொட்டு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை உறுதிப் படுத்துகின்றன. ஆயினும் இம்மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப் போது வந்தார்கள்? இவர்களுக்கும் குடாநாட்டின் ஏனைய இடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பன முக்கிய கேள்விகளாக உள்ளன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நம்பகத் தன் மையுடைய தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் இலங்கைக்குரிய பூர்வீகக் குடிகள் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்த வர்கள் என்ற கருத்து பலமாக வலுப்பெற்று வருகின்றது.

1917-1918 காலப் பகுதிகளில் கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்ட போல்பீரிஸ் என்பவர் அநுராதபுரத்துக்கு அடுத்த புராதன நகராக கந்தரோடையை வர்ணித்தார். 1967 இல் பென்சில்வேனி யப் பல்கலைக்கழக அரும்பொருள் அகழ்வாய்வினரும், 1973 இல் விமலா பேக்லே என்பவரும் கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வினை ஆதாரமாகக் கொண்டு தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள அரிக்கமேடு, ஆதிச்சநல்லூரை ஒத்த பண்பாட்டு மக்கள் கந்தரோடை யில் வாழ்ந்தார்கள் என்ற கருத்தை முதன் முதலாக முன்வைத்தன. 1980 இல் பேராசிரியர் பொ.இரகுபதி ஆனைக்கோட்டையில் கண்டுபிடித்த பெருங்கற்கால ஈமச்சின்னமும், 1989-1993 காலப்பகுதியில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் பூநகரியில் கண்டுபிடித்த இப்பண்பாட்டுச் சின்னங்களும் குடாநாட்டின் தொடக்க கால மக்கள் தென் தமிழகத்தை ஒத்த பெருங்கற்கா லப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்கள் என்பதை உறுதிப்படுத்தின. ஆயி னும் இம்மூன்று இடங்களில் கிடைத்த ஆதாரங்களை வைத்து இதையொத்த குடியிருப்புக்கள் சமகாலத்தில் குடாநாட்டில் பரந்தளவில் இருந்ததென கூற முடியாதிருந்தது.

ஆனால் இலங்கையில் தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாகவும், குறுக்கு நிலமாகவும் தீவகம் அமைந்திருப்பதால் அங்கு பண்டைய காலம் தொட்டு மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற ஐதீகம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இதனை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட



குடைகள் ஈமச்சின்னம்

தொல்லியல் அகழ்வாய்வில் இருந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்த தொடக்க கால மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பற்றிக் கலாநிதிப் பட்டத்திற்காக விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் "யாழ்.மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளும், ஆதிக்குடிகளும்'' என்ற கட்டுரையில் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே தனித்துவமானதாகக் கருதப்படும் மெருகூட்டப்பட்ட கறுப்புச் -சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் காணப்படும் இடங்களில் ஒன்றாகச் சாட்டிக் கிராமத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களில் அகழ்வாய்வு மூலம் பெருங்கற்கால மக்களது எலும்புக் கூடுகளைக் கண்டுபிடித்த பேராசிரியர் பொ.இரகுபதி தனது தொல்லியல் மேலாய்வின் போது சாட்டிக் கிராமத்தில் இருந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய புராதன கறுப்புச் -சிவப்பு நிற மட்பாண்டங்களைச் சேகரித்ததாக யாழ்ப்பாணத்தின் புராதன குடியேற்றங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் ஆய்வுக் குழுவினர் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடித்த இப்பண்பாட்டிற்குரிய பலவகைப்பட்ட சான்றுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இம் மக்கள் இச் சாட்டிப் பிரதேசத்தில் குடியேறியமைக்கான காரணங்களை நோக்குவோமாயின் இக்குடியிருப்புக்கள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய மணற்பாங்கான இடங்களிலேயே முதலில் ஏற்பட்டிருந்ததனை காணமுடிகின்றது. இதற்கு அதிக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாது அழிக்கக்கூடிய பற்றைக் காடுகள், இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான தன்மை என்பனவே காரணம் எனலாம்.

பொதுவாக வைரமான மண்ணுள்ள இடங்களில் நீரைப் பெறுவதற்குக் கூடிய தொழில் நுட்பமும் அதிக மனிதவலுவும் நீண்ட காலமும்

தேவை. ஆனால் அவ்வாறானதொரு தொழில்நுட்பம் அன்றைய காலத்தில் இலங்கையில் வளரவில்லை.

தென்னிலங்கையில் இயற்கையாகத் தோன்றிய ஆறுகள், குளங்கள், நீரைப் பெறுவதற்குச் சாதகமாக இருந்தமையால் அவ்விடங்களை அண்டிக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்த வாய்ப்புக்கள் இல்லை. இதனால் தான் தொழில்நுட்பத்துடன் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்களில் அக்கால மக்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்திக்கொண்டனர். மற்றும் இலகுவாக கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், கடல், தரைவழிப்போக்குவரத்திற்கு சாதகமான தரைத்தோற்றம் என்பவற்றிற்கு இப்பிரதேசம் சாதகமாக இருந்தமை முக்கிய காரணிகள் ஆகும்.

**ஈமச்சின்னங்களின் வடிவமைப்பு**

ஈமச்சின்னம் என்றால் என்ன? என்பதை நோக்கினால், வரலாற்று உதயகாலம் என்று அழைக்கப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் வாழ்ந்த திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில் சவ அடக்கங்களை வடிவமைத்தமை ஈமச்சின்னங்கள் என்று அழைக்கப்பட்டன. அந்த வகையில் ஈமச்சின்னங்களை ஈமத்தாழி, ஈமப்பேழை, தொப்பிக்கல், குத்துக்கல், கற்பதுக்கை, கல்வட்டம், கல்மேசை, குடைக்கல், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் என அவற்றின் வடிவமைப்பைக் கொண்டு பலவாறு பிரிக்கலாம்.

சாட்டியில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக் குழுவினர் 2004 ஆம் ஆண்டில் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது அங்கு ஈமச்சின்னங்களை கண்டுபிடித்தனர். அகழ்வாய்வுக்கு உட்படுத்திய இடம் சாட்டிக்கிராமத்தின் மையப்பகுதியாகவும், வரலாற்றுப்பழைமை வாய்ந்த துறைமுகம் அமைந்த இடமாகவும் காணப்படுகிறது. இங்கு 10 மீற்றர் இடைவெளியில் 30 க்கு மேற்பட்ட ஈமச் சின்னங்கள் இருந்ததற்கான சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 10 இடங்கள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அக்கால மக்களது பண்பாட்டு எச்சங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ் ஈமச் சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் மண்ணின் மேற்படையில் கல்லும் மண்ணும் கலந்த நிலையில் மண்மேடுகளாகக் காணப்பட்டன. ஆனால் அவ்விடங்களை அகழ்ந்தபோது அவை ஏறத்தாழ 1 முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச் சின்னத்தை நினைவுபடுத்துகிறது. இதன் அத்திவாரங்கள் சில இடங்களில் கற்களைக் கொண்டு நட்சத்திர வடிவிலும், ஏனையவை சுடுமண், மரம், கல் என்பவற்றைப் பயன்படுத்தி வட்டவடிவிலும் அமைக்கப்பட்டிருந்தன.

ஒரு இடத்தில் குடைவடிவில் மிகப் பெரிய கல்லை வடிவமைத்து அதன் உட்பக்கம் வட்டமாக குடையப்பட்டு அதற்குள் இறந்தவர் உடலின் பாகங்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. பொதுவாக இந்த வடிவில் அமைந்த பெருங்கற்கால ஈமச்சின்னம் குடைக்கல் எனத் தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகிறது.

இவ்வீமச் சின்னங்களின் மேற்பகுதி பெரும்பாலும் மண் அகழ்வோரின் நடவடிக்கைகளால் சிதைவடைந்திருந்தாலும் கீழ்ப்பக்க மண்படையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகளும் அவற்றுடன் இணைந்திருந்த பிற பொருட்களும் இவ்விடங்களில் எல்லாம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் பெருங்கற்கால மற்றும் வரலாற்றுத் தொடக்க கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இவ்வீமச் சின்னங்கள் சிலவற்றின் மேலுள்ள கலாசார மண்படையில் பிற்பட்ட கால அரேபிய சீன மட்பாண்டங்களும், ஒரு ஈமச் சின்னத்தில் கி.பி 13-14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாழ்ப்பாண அரசுக் கால சேது நாணயமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் கீழ்ப் பகுதியில் உள்ள பெருங்கற்கால ஈமச்சின்னத்திற்கும் அதன் மேல் பகுதியில் உள்ள கிணற்று வடிவிலான கட்டிடப் பகுதிக்கும் உள்ள தொடர்பையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

பேராசிரியர் பொ.இரகுபதி இங்கு பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேல் காலப்போக்கில் சிறிய கிணற்றுவடிவிலான கட்டடம் பிறதேவைக்காக அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். தமிழகத் தொல்லியல் அறிஞரான பேராசிரியர் சுப்பராயலு தமிழகத்தில் மேற்கொண்ட சில அகழ்வாய்வுகளை உதாரணம் காட்டிச் சாட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இப்பிராந்தியத்திற்கேயுரிய தனித்துவமான அம்சம் எனக் கூறுகிறார். ஆயினும் சிதைவடையாத நிலையில் உள்ள ஒரு ஈமச்சின்னத்தை சாட்டியில் கண்டு பிடித்து முழுமையாக அகழ்வு செய்யும் வரை இறுதியான முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆயினும் இங்கு வாழ்ந்த தொடக்க கால மக்கள் பெருங்கற்கால திராவிட மக்கள் என்பதை இதுவரை சாட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.

இவ்வீமச் சின்னங்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு விதிமுறைப்படி அமைக்கப்பட்டவையாகும். அகழ்வுக்கு முன்னர் இவ்விடங்கள் ஒரு மண்மேடாகக் காட்சியளித்தாலும் அவற்றை அகழ்ந்து பார்த்த போது அவ்விடங்களில் எல்லாம் 10 முதல் 1 அடி உயரமான சிறந்த தொழில் நுட்பத்துடன் கூடிய வட்டமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

6

# நெடுந்தீவில் சுற்றுலாவுக்குரிய தொல்லியற் சின்னங்கள்

**தொ**ல்லியலாளரால் அதிகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத பிராந்தியங்களில் நெடுந்தீவும் ஒன்றாகும். பெயருக்கு ஏற்ப அது நீண்ட தீவு மட்டுமல்ல அதற்கொரு நீண்ட பாரம்பரிய வரலாறும் உண்டு என்பதை அங்கு சிதைவுறும் தொல்லியல் நினைவுச் சின்னங்கள் எடுத்துக் கூறுகின்றன. நெடுந்தீவின் வரலாறு பதினேழாம் நூற்றாண்டின் பின்னர் வெளிச்சத்திற்கு வருவதற்கு ஐரோப்பியர் ஆட்சிக் காலம் காரணம் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்களில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு முந்திய வரலாறு பெரும்பாலும் புகைபடிந்த நிலையிலேயே காணப்படுகிறது. அண்மையில் நெடுந்தீவு லஷ்மணன் அவர்கள் எழுதிய சிதைவுறும் சின்னங்கள் என்ற நூலின் கையெழுத்துப் பிரதியை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது நெடுந்தீவு பற்றிய வரலாற்று நூல் என்பதை விட நெடுந்தீவு பற்றிய பன்முகத் தன்மையுடன் எழுதப்பட்ட அரிய கலைக் களஞ்சியம் என்று கூடக் கூறலாம். அதில் சிதைவுறும் சின்னங்கள் என்ற தலைப்பில் அவர் ஆதங்கத்துடன் கூறும் விபரங்கள் நெடுந்தீவை பார்வையிட வேண்டும் என்ற ஆவலைத்தூண்டியது. அதன் விளைவே கடந்த வாரம் தொல்லியல் வரலாற்று மாணவர்களுடன் சென்று கள

ஆய்வில் ஈடுபடக்காரணமாகியது. அங்கு பார்த்தைவையும், கேட்டவையும் இற்றைக்கு முந்நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசின் தலைநகராக இருந்த நல்லூரின் பழைமையை அறியத் தொல்லியல் ஆதாரங்கள் இல்லையே என ஏங்கிய எமக்கு நெடுந்தீவில் பார்வையிட்ட தொல்லியற் சின்னங்கள் ஒரு வரலாற்றுப் பழமைவாய்ந்த தொல்லியற் சுற்றுலா மையங்களை பார்த்தது போன்ற திருப்தியை அளித்தது. அவற்றில் சிலவற்றை யாவது பொதுமக்கள் மத்தியில் பதிவு செய்ய வேண்டும் என்பது கள ஆய்வில் ஈடுப்பட்ட மாணவர்களின் விருப்பமாகும்..

எட்டுக்கிலோ மீற்றர் நீளமும், ஆறு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட நெடுந்தீவின் பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் சமகாலத்தில் ஏற்பட்டு வரும் துரித அபிவிருத்திகள் ஒரு நகரத்திற்குரிய வளர்ச்சியை நோக்கி அத்தீவு செல்வதான பிரமிப்பை ஏற்படுத்தியது. ஆயினும் தற்போது ஏறத்தாழ ஆறாயிரம் மக்கள் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் செறிவாக வாழ்ந்து வரும் நிலையில் பல நூறு ஆண்டுகளாக பயன்படுத்தாத தரிசு நிலங்களைச் சிறு சிறு துண்டுகளாகக் கல்வேலி கொண்டு எல்லையிடப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது அவை முன்பொரு காலத்தில் மக்கள் வாழ்ந்த இடங்கள் என்பதற்கு சாட்சியம் கூறுவதாக உள்ளன. ஆகவே அத்தகைய தரிசு நிலங்கள் பலவற்றில் அத்தீவின் பாரம்பரிய வரலாற்றைப் பறைசாற்றும் தொல்லியற் சின்னங்கள் காணப்பட்டமை எமக்கு ஆச்சரியமாக இருக்க வில்லை.


**பூர்வீக மக்கள்**

குடாநாட்டில் மனித வரலாற்றின் தொடக்கம் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு உட்பட்ட தென்பதை கந்தரோடையில் பென்சில்வேனிப் பல்கலைக்கழக அரும்பொருள் அகழ்வாய்வுக் குழுவினர் கண்டு பிடித்த தொல் லியற் சின்னங்களை நவீன காலக்



கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து தற்போது தெரியவந்துள்ளது. அங்கு முதலில் வாழ்ந்த மக்களைத் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்காலப் பண் பாட்டுக்குரிய திராவிடர் என்பது மானிடவியலாளர்களின் பொது வான கருத்தாகும். இம்மக்கள் குடாநாட்டின் ஏனைய இடங்களில் சமகாலத்திலோ அல்லது சற்றுக் காலம் தாழ்த்தியோ குடியேறி வாழ்ந்திருக்கலாம் என்பதை ஆனைக்கோட்டை, களபூமி, சாட்டி, பூநகரி, குடத்தனை, வெற்றிலைக்கேணி முதலான இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இக்குடியேற்றங்கள் நெடுந்தீவிலும் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு நம்பத்தகுந்த பல ஆதாரங்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. அவற்றுள் நெடுந்தீவுக்கு வட மேற்கே கடற்கரையை அண்டிய வட்டாரத்தில் பரவலாகக் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பலவகைப்பட்ட மட்பாண்ட ஓடுகள், கீச்சுக் கிட்டான்கள் (Iron Slacks) கைவிரல் அடையாளம் கொண்ட கூரை ஓடுகள் முதலானவை சான்றாக உள்ளன. மேலும் இங்கிருக்கும் பெருந்துறை என்ற இடத்தில் உள்ள மண்மேடுகளில் பரவலாகக் காணப்படும் பலவகை மட்பாண்டங்களும் கழிவிரும்புகளும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கந்தரோடை, சாட்டி என்பவற்றை ஒத்த திராவிட மக்களது பெருங்கற்காலக்



பெருங்கற்கால ஈமச்சின்னமா?


சோழர் பாண்டியர் பொலநறுவை அரச கால நாணயங்கள்

குடியிருப்புக்கள் இருந்துள்ளதை உறுதிசெய்வதாக உள்ளது. அவற்றுள் கல்வட்டங்களால் அமைந்த ஒரு மேடு பெருங்கற்காலப்


பண்பாட்டிற்கேயுரிய கல்லறை எனப்படும் ஈமச்சின்னமாக இருக்கலாம் என எண்ணத்தூண்டுகிறது. அவ்விடம் முழுமையான அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்படுமானால் புகைபடிந்திருக்கும் நெடுந்தீவின் பூர்வீக மக்கள் யார் என்ற கேள்விக்கு விடைகிடைக்க வழியுண்டு. இதன் சுற்றுவட்டாரத்தில் இருந்து பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த நாணயங்கள் பொது மக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சசிகுமார் என்ற இளைஞன் எம்மிடம் கொடுத்த சோழ, பாண்டிய மற்றும் பொலநறுவை அரசு கால நாணயங்கள் 10-11ஆம் நூற்றாண்டுகளில் இத்துறைமுகப் பகுதி சர்வதேச கடல்சார் வணிகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இதன் சமகாலத்தில் சீன நாட்டு வணிகரும் இத்துறைமுகத்தைப் பயன்படுத்தினர் என்பதை இங்கு கண்டெடுக்கப்பட்ட சீன நாட்டு மட்பாண்ட ஓடுகள் உறுதிசெய்கின்றன.

**சோழர் கால ஆலயமா?**



அண்மையில் எமது தலைமையில் வரலாற்றுத்துறை மாணவன் ஜெகதீஸ்வரன் மற்றும் தொல்லியல் ஆர்வலர் நெடுந்தீவு நல்லதம்பி சசிகுமார், நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் தேவசுதன், தயாகரன், பகீரதன் ஆகியோர் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் போது அங்குள்ள புக்காட்டுப் பகுதியில் அழிவுண்ட நிலையில் ஏறத்தாழ நாற்பது அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்ட ஆலயமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அப்பிர தேசத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல், சுதை என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயம் மிகச்சிறிய கர்ப்பக் கிரகத்தையும் அந்தராளத்தையும் 24x15 அடி நீள அகலத்தில் முக மண்டபத்தையும் கொண்டுள்ளது. மூடுசாந்தினால் அமைக்கப்பட்ட கூரையைக் கொண்ட இவ்வாலயத்தின் கற்பக்கிரகம் அந்தராளம் என்பவற்றின் அத்திவாரத்தையும் சிறிய உயரத்திலான சுவரையும் தவிர ஏனைய பகுதிகள் முற்றாக அழிவடைந்து வெறும் கல் மேடாகக் காட்சியளிக்கிறது

இவ்வாலயம் தொடர்பாக ஆய்வை மேற்கொண்ட போது இவ்வாலயம் எப்போது கட்டப்பட்டதென்பதை அவ்வூர் மக்கள் கூற முடியாத அளவுக்கு அதன் தோற்ற காலம் மிகப் பழைமையாகக் காணப்படுகிறது. நெடுந்தீவில் நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டுள்ள இப்புக்காட்டுப் பகுதியில் இவ்வாலயம் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் அல்லது ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்டிருந்தால் அது பற்றிய வரலாறு அப்பகுதி மக்களுக்குத் தெரிந்திருக்கும். மேலும் இப்படியான கலை வேலைப்பாடுகள் கொண்ட பெரியதொரு ஆலயம் குறுகிய காலத்தில் அழிந்து போவதையும் அவ்வூர் மக்கள் அனுமதித்திருக்க மாட்டார்கள்.



ஆகவே இவ்வாலயம் .ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என எடுத்துக்கொள்வதே பொருத்தமாகும். இவ்வாலயம் அக்காலத்தே பரவலாகக் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும் ஆலயத்தின் கட்டிட அமைப்பும், குறைந்த நீள, அகலம் கொண்ட கற்பக்கிருகம் அந்தராளம் என்பவற்றின் அமைப்பும் 10 ஆம் 11ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்திலும் இலங்கையில் பொலநறுவையிலும் கட்டப்பட்ட சோழர் கால ஆலய அமைப்புக் களை அப்படியே ஒத்துள்ளன.

மேலும் ஆலயத்தின் உட்பகுதியில் சிதைவுண்டு காணப்படும் அந்தராளப்பகுதியில் சிறியளவில் மேற்கொண்ட ஆரம்ப அகழ்வின் போது கிடைத்த சிலைகள், புடைப்புச்சிற்பங் கள், அலங்கார வேலைப்பாடுடைய கற்கள் சுடு மண்ணால் அமைந்த நீர்ப்பாசனக் குழாய்கள், ஆலயத்தில் பயன்படுத்திய கோமுகி, ஆலயச் சுற்றாடலில் இருந்து ந.சசிகுமார் கண்டுபிடித்த 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராஜராஜ சோழனின் பெயர் பொறித்த நாணயங்கள் என்பன ஆலயத்தின் பழைமையைக்

கண்டறிவதற்கு நம்பிக்கையான ஆதாரங்களாக உள்ளன. எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் விரிவான ஆய்வுகள் இவ்வாலயத்தின் பழமையையும், பெருமையையும் வெளிப்படுத்த உதவலாம்.

**புராதன இந்துக் கோவிலின் அழிபாடுகள்**

நெடுந்தீவின் வரலாற்றுப் பழைமைவாய்ந்த இடங்களைத் தேடிப்பார்த்த போது எதிர்பாராத நிலையில் கல்வேலிகள் அமைக்கப்பட்ட இடத்திலிருந்து கிடைத்த இந்து ஆலயத்திற்குரிய இரு போதிகைகள் எமக்குப் புதிய கண்டுபிடிப்பாக அமைந்தது. இக்கல்வேலிகள் கடலில் இருந்து எடுக்கப்பட்ட கூலாங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும் இப்போதிகைகள் மட்டும் வைரமான கற்களில் அழகாகச் சிற்பங்கள் கொண்டு செதுக்கப் பட்டுள்ளமை இக்கற்கள் காணப்பட்ட இடத்தில் அல்லது கல்வேலிகள் அமைப்பதற்காக கற்கள் கொண்டுவரப்பட்ட இடத்தில் புராதன இந்து ஆலயம் இருந்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. எதிர்காலத்தில் விரிவான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் இப்போதிகைகளுடன் தொடர்புடைய ஆலயம் எங்கிருந்ததென்பதையும், அவற்றின் காலம், கலைமரபு எவை என்பதும் தெரிய வரலாம்.


**ஒல்லாந்தர் கால நினைவுச் சின்னங்கள்**



நெடுந்தீவின் வரலாறு வெளிச் சத்திற்கு வருவதற்கு ஐரோப்பியர் கால ஆட்சி முக்கிய காரணமாக அமைந்தது. அதிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண தென்னிந்திய வணிக உறவின் குறுக்கு நிலமாகவும், தொடக்கவாயிலாக நெடுந்தீவு காணப்பட்டதால் அவர்களின் இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் கேந்திர மையங்களில் ஒன்றாக இத்தீவு விளங்கியது. அவற்றை நினைவுபடுத்தும் வகையில் கிறிஸ்தவ தேவாலயங்கள், நிர்வாகக் கட்டிடங்கள், கடற்கரைப்பாதுகாப்பு அரண்கள் வெளிச்ச வீடுகள், இறந்த இராணுவ மற்றும் உயர் அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

என்பன காணப்படுகின்றன. அதற்கு உதாரணமாக அங்குள்ள ஒரு சில நினைவுச் சின்னங்களைக் குறிப்பிடலாம்.

**ஒல்லாந்தர் காலக் கோட்டை**



நெடுந்தீவு மத்தியில் தற்போதைய வைத்திய சாலைக்கு கிழக்கே பயன் படுத்த முடியாத நிலையில் மிகப் பழைமை வாய்ந்த கட்டிடத் தொகுதிகள் சிதைவுண்டு காணப்படுகின்றன. யாழ்ப் பாணத்திலும், ஊர்காவற்றுறையிலும் உள்ள கோட்டைகளை அடுத்து ஒல்லாந்தர் காலத்திற்குரிய இன்னொரு முக்கிய நினைவுச் சின்னமாக இக்கட்டிடத் தொகுதியைக் குறிப்பிடலாம். இக்கட்டிடத் தொகுதிகளை அங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர் வெடியரசன் கோட்டை எனவும் இன்னொரு சாரார் ஒல்லாந்தகோட்டை எனவும் அழைத்து வருகின்றனர். ஆனால் ஒல்லாந்தர் கால ஆவணங்களில் நெடுந்தீவில் ஒரு கோட்டை கட்டப்பட்டதற்கான எந்தக் குறிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. கடற்கரையை அண்டிக்காணப்படும் இக்கட்டிடத் தொகுதியின் அமைப்பையும், ஒல்லாந்தர் காலக் கலைமரபைப் பிரதிபலிக்கும் அவற்றின் மாடங்களையும், முகப்புத் தோற்றத்தையும் நோக்கும் போது அதன் மேற்குப்பக்க கட்டிடத் தொகுதி அவர்களின் நிர்வாக மையமாகவும், கடற்கரை நோக்கிய அதன் கிழக்குப் பக்க கட்டிடத் தொகுதி கடற்பாதுகாப்பு அரணாகவும் இருந்ததெனக் கூறுவதே பொருத்தமாகும். அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் கட்டிடத்தின் கிழக்குப் பக்கத்தில் கண் காணிப்பு நிலையங்கள் இருந்தற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதன் நோக்கம் கடல் வழியாக வரக்கூடிய ஆபத்துக்களைக் கண்காணிப்பதாக இருக்கலாம். இருமாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கட்டிடத் தொகுதி ஒல்லாந்தர் கால கட்டிடக் கலை மரபையும், அவர்களின் உயர்ந்த தொழில் நுட்பத்தையும் பார்ப்போரைப் பிரமிப்பூட்டும் வகையில் அமைந்து காணப்படுகிறது.

**பறவைகள் சரணாலயம்**




இக்கட்டிடத் தொகுதிக்கு தெற்கே மிகக் கிட்டிய தொலைவில் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டு பிற்காலத்தில் தொடர்ந்து பராமரிக் கப்பட்ட பறவைகள் தங்குவதற்கான மிக அழகான கட்டிடம் ஒன்று காணப்படுகிறது. ஏறத்தாழ 15 அடி உயரம் கொண்ட இக்கட்டிடத்தின் மேற்தளத்தில் 80 சிறிய அறைகள் கொண்ட பறவைகளுக்குரிய கூடுகள் காணப்படுகின்றன. அவை கூழாங்கற்களையும், சுதையையும், மரத்தையும் பயன்படுத்தி அமைக் கப்பட்டவையாகும். அக்கூடுகளின் அமைப்பைக் கொண்டு அதை புறாக்கூடு என மக்கள் அழைத்து வருகின்றனர். ஆனால் அது அமைந்துள்ள இடத்தின் தன்மையையும், கட்டிடத்தின் கலை மரபையும், தொழில் நுட்பத் திறனையும், உற்று நோக்கும்போது இதன் நோக்கம் வேறுபட்டதாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பொதுவாகப் பருவகால மாற்றம் நிகழும் போது பிற நாட்டுப் பறவைகள் இலங்கை வந்து சில காலம் தங்கிப் பருவ நிலை மாறியதன் பின்னர் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பி செல்லும் வழக்கம் உண்டு. அவ்வாறு வந்து போகும் பறவைகளை நெடுந்தீவில் நிரந்தரமாகத் தங்க வைப்பதற்காக தமது நாட்டில் இருப்பது போன்ற பிறநாட்டுப் பறவைகள் தங்குவதற்காக இக்கூட்டை ஒல்லாந்தர் அமைத்திருக்க லாம் எனக் கருத இடமுண்டு. எவ்வாறாயினும் இக்கட்டிடம் இலங்கையிலுள்ள மிக முக்கிய ஒல்லாந்தர் கால நினைவுச் சின்னங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை.

**குதிரைகளுக்கான லயன்கள்**

நெடுந்தீவு செல்வோரை அதிக அளவில் கவரும் இன்னொரு முக்கிய நினைவுச் சின்னமாகவும், ஒரு சுற்றுலா மையமாகவும் காட்சியளிக்கும் இடம் நெடுந்தீவு மத்தியில்

காணப்படும் குதிரைகளுக்கான லயன்களாகும். இலங்கைக்கு இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்து மேற்காசியாவில் இருந்தும், வடஇந்தியாவில் இருந்தும் குதிரைகள் கொண்டு வரப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.



யாழ்ப்பாண அரசு காலத்தில் இங்கிருந்து தென்னிந்தியாவுக்கு யானைகள் அனுப்பப்பட்டு அங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கும், அதற்குப் பதிலாக தென்னிந்தியாவிலிருந்து குதிரைகள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சியில் படை நடவடிக்கைகளுக்கும், நிர்வாகத் தேவைகளுக்கும் குதிரைகள் பயன்படுத்தப்பட்டதால் அவற்றின் பாவனைகள் முன்னரைக் காட்டிலும் அதிகரித்திருந்தன எனக் கூறலாம். அதில் ஒல்லாந்தர் ஆட்சியில் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குதிரைகள் கொண்டுவரப்பட்ட போது அவற்றை வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் பொருத்தமான இடமாக நெடுந்தீவு இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அவற்றிற்காக ஒல்லாந்தர் ஆட்சியில் அமைக்கப்பட்ட குதிரை லயன்களே தற்போது அங்கு அழிவுண்ட நிலையில் காணப்படுகிறது. ஏறத்தாழ 300 மீற்றர் நீளத்திலும் 50 மீற்றர் அகலத்திலும் அமைக்கப்பட்ட இவ்லயன் பல குதிரைகளைப் பாரமரிக்கக் கூடிய இடவசதிகளைக் கொண்டிருப்பதுடன் அவற்றைப் பராமரிப்பதற்கான நிர்வாகக் கட்டிடமும் அதனுடன் இணைந்ததாகக் காணப்படுகிறது. இக்கட்டிடப்பகுதியொன்றே ஒல்லாந்தர் ஆட்சியில் நெடுந்தீவு எவ்வளவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீவாக இருந்த தென்பதற்குச் சாட்சியாக உள்ளது. அவர்கள் ஆட்சியில் முன்னிலை பெற்ற குதிரை வளர்ப்பு அவர்கள் ஆட்சி மறைந்தாலும் அவர்கள் கால நினைவுகள் இன்றும் மறையவில்லை என்பதை அங்கு பரவலாகக் காணப்படும் குதிரைகள் நினைவுபடுத்திக் கொண்டு இருக்கின்றன.


**பெருக்கு மரங்கள்**

நெடுந்தீவில் காணப்படும் அதிசயப் பொருட்களில் ஒன்று அங்கு காணப்படும் பெருக்கு மரங்களாகும். ஒல்லாந்தர் ஆட்சியில் குதிரைகள் வளர்க்கப்பட்ட முக்கிய இடமாக நெடுந்தீவு காணப் பட்டதால் குதிரைகளின் உணவுக்காக இப்பெருக்கு மரங்களை ஒல்லாந்தர் தமது நாட்டிலிருந்து கொண்டு வந்து இங்கு அறிமுகப்படுத்தியதாகத் தெரிகிறது. இவ்வாறான மரங்கள் நெடுந்தீவை அடுத்து அவர்களின் ஆதிக்கம் நிலவிய மன்னார்க் கோட்டைப் பிரதேசத்திலும் இருப்பதாகத் தெரிகிறது. இம்மரங்களை அதிசயப் பொருளாகப் பார்ப்பதற்கு அது புதிய இனவகை மரங்கள் என்பது மட்டுமல்ல இலங்கையில் இதுபோன்ற பெரிய மரங்கள் இல்லை என்பதும் இன்னொரு முக்கிய காரணமாகும். இம் மரங்களின் அடிப்பாகத்தில் காணப்படும் குகை போன்ற வடிவம் பல மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குரிய இடவசதிகளைக் கொண்டிருப்பது பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது.

இதுவரை காலமும், வாய்மொழியாகவும், பிற்கால இலக்கியங்கள் ஊடாகவும் நெடுந்தீவின் வரலாறு பற்றி அறிந்த தொல்லியல், வரலாற்று உணர்வுடைய மாணவர்கள் அவற்றை நேரில்பார்வையிட்டு உண்மைகளைப் புரிந்து கொண்டமை மகிழ்ச் சிகரமாக அமைந்தது.

7

# தமிழரது பண்பாடு பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் நல்லூர்க் கந்தன் ஆலயம்




நல்லூர்க்கந்தன் ஆலயம் தோன்றிய இடம், தோற்றக் கால அமைப்பு போன்றன இன்று மாறியிருந்தாலும் ஈழத்தமிழரால் மிக உயர்ந்த நிலையில் போற்றப்படுவதற்கு அது கி.பி 13 ,கி.பி 17 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட 450 ஆண்டு கால யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசஆலயமாகத் திகழ்ந்ததே முக்கிய காரணமாகும். அந்த வகையில் அவ்வாலயம் எவ்வாறு ஈழத்தமிழர் வரலாற்றோடும் வாழ்வோடும் ஒன்றிணைந்து வளர்ந்ததென்பதை எடுத்துக் கூறுகிறது இச்சிறு கட்டுரை.

யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்காலத் தமிழ் இலக்கியங்கள், யாழ்ப்பாண அரசு காலத்தில் இருந்த ஆலயங்கள் பலவற்றைக் குறிப்பிட்டாலும் அவற்றின் மையக் கோவிலாக நல்லூர்க் கந்தசுவாமி கோவிலையே குறிப்பிடுகின்றன. இதற்கு முக்கிய காரணம் இக்கோவில் யாழ்ப்பாண ஆட்சியாளரின் அரண்மனையாகவும், அதிகார பீடமாகவும், அரச பாதுகாப்பு அரணாகவும், அரசசெயலகத்தின் குறியீடாகவும், அக்காலப் பண்பாட்டின் மையமாகவும் திகழ்ந்தமையேயாகும். அப்பாரம்பரிய வர

லாற்று நம்பிக்கையின் விளைவு தான் இன்றும் ஏனைய ஆலயங்கள் பலவற்றிற்கு இல்லாத பெருமையும், சிறப்பும் இக்கோவிலுக்கு இருப்பதற்குக் காரணமாகும். இருப்பினும் இக்கோவில் எப்போது? யாரால்? எந்த இடத்தில்? எவ்வாறு தோன்றியது? என்பன போன்ற கேள்விகளுக்கு இற்றைவரை உறுதியான விடை காண முடியாத நிலையே இருந்து வருகின்றது. இக்கோயில் பற்றிய சில சான்றுகளை நோக்கும் போது இக்கோயில் 13 ஆம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. ஆனால் இதற்கு முன்னரே சிறு கோயிலாக அல்லது முருக வழிபாட்டுக்குரிய இடமாக இருந்திருக்கக் கூடும்.

தென்னிந்திய சோழப் பெரு மன்னனாகிய 1 ஆம் இராசராசச்சோழனின் கல்வெட்டொன்று நல்லூரிலிருந்து கோயிலுக்குக் கொடுத்த தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டானது போத்துக்கேயரால் நிறுவப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து பெறப்பட்டதாகும். போத்துக்கேயர் நல்லூரிலிருந்த கோயிலை அழித்துத் தரைமட்டமாக்கி அங்கிருந்து பெற்ற கற்சிதைவுகளைக் கோட்டை கட்டுவதற்காகக் கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. எனவே மேற்படி கல்வெட்டு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு உரியதாகவும் இருக்கக்கூடும். முருக வழிபாடு யாழ்ப்பாணத்தில் தொன்மையாக இருந்தமையாலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் பண்டை வழிபாட்டைக் குறிக்கும் வேலை மூலமூர்த்தியாகக் கொண்டிருப்பதாலும் இக்கருத்தை வலுவூட்டுவதாக அமை கிறது. மேலும் பழமையான வழிபாட்டு முறையான பலியிடும் வழக்கமும் அண்மைய நூற்றாண்டு வரையிலும் அக்கோயிலில் இருந்தமையை ஆறுமுக நாவலரின் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தொடர்பான பிரசுரங்களில் இருந்து அறியலாம்.

கைலாய மாலையும், நல்லூர் கந்தசாமி கோயிற் கட்டிட்டமும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவன் புவனேபாகு எனக் குறிப்பிடுகின்றன. இவன் முதலில் மந்திரியாக இருந்து பின்னர் மன்னனாக மாறியவன் எனச் சில அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் மேற்படி புவனேகபாகு யார் என்பது தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கைலாய மாலையில் இடம்பெறும் குறிப்பினைக் கொண்டு இக்கோயில் நிறுவப்பட்ட காலம் கி.பி 10 ஆம் நூற்றாண்டு எனவும் சிலர் 13 ஆம் நூற்றாண்டு எனவும் எடுத்துக் காட்டுகின்றனர். ஆயினும் நம்பகரமான சான்றுகளைக் கொண்டு பார்க்கும் போது தமிழில் செண்பகப் பெருமாள் என்றும் சிங்கள நூல்களில் சபுமல் குமாரயா என்றும் அழைக்கப்பட்ட புவனேகபாகு என்பவனே இக்கோயிலைக் கட்டினான் என்பதைப் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.



இவன் கோட்டை அரசனாகிய 6 ஆம் பராக்கிரமபாகு (கி.பி 1412 - 1467) சார்பில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுத்து இங்கு ஆட்சி செய்த கனகசூரிய சிங்கையாரியனை வெற்றி கொண்டு 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இதனைக் கோகில சந்தேச, செலஹினி சந்தேச, ராஜாவலிய போன்ற சிங்கள நூல்களும் யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியில் சென்றல் கபே என்ற கடையின் படிக்கட்டில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றன. இக்கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு நல்லூர்க் கட்டியம் குறிப்பிடும் சிறி சங்கபோதி இவனே என்பதைப் பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆரம்பத்தில் சிறுகோயிலாக இருந்த நல்லூர்க் கோயிலைச் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண இராச்சியத்துக்குப் படையெடுத்து வந்த பொழுது அழித்ததாகவும், அதனைக் கைப்பற்றிய பின்னர் யாழ்.நகரினையும் அக்கோயிலையும் புனரமைத்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இன்று முத்திரைச்சந்தியில் புரட்டஸ்தாந்து தேவாலயம் அமைந்துள்ள இடத்திலேயே இக்கோயில் அமைக்கப்பட்டிருந்தது. இத்தேவாலயத்துக்கு அருகாமையில் இன்று பாழடைந்து காணப்படும் யமுனா ஏரி, சங்கிலித்தோப்பு என்பன இக்கோயிலை அண்டிக் காணப்பட்டவையாகக் கருதலாம். யமுனா ஏரி இக்கோவிலின் தீர்த்தக்கேணியாக இருந்ததென்பது சிலரின் வாதமாகும்.

போத்துக்கேயரான குவைரோஸ் சுவாமிகள் தனது Temporal and spiritual conquest of ceylon என்ற நூலில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு கோயிலைப் பெரிய கோயில் எனக் குறிப்பிடுகின்றார். இது நல்லூர்க் கோயிலைச் சுட்டுவதாக ஆய்வாளர் குறிப்பிடுவர். முத்துத்தம்பிப்பிள்ளை தனது நூலில் ஒலிவேரா இக்கோயிலை அரணாகவும் அலுவலகமாகவும் பயன்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றார். மேற்படி தளபதி தமக்கெதிராகப் படையெடுத்து வந்த தஞ்சாவூர்ப் படைத்தளபதியைக் கைது செய்து தான் தங்கியிருந்த கோயிலுக்குக் கொண்டு சென்று தண்டனை வழங்கியதாக Pieris என்பவர் தனது நூலில் குறிப்பிடுகின்றார். போத்துக்கேயர் 1621 க்கு முன்னரே பல சைவாலயங்களை யாழ்ப்பாணத்தில் அழித்திருந்தாலும் நல்லூர்க் கந்தசாமி கோயிலை இவ்வாண்டிலேயே அழித்தனர். இக்கோயிலை அழிக்காது விடுவதற்கு எவ்வளவு செல்வமென்றாலும் கொடுப்பதற்குச் சைவர்கள் முயன்ற போதும் ஒலிவேரா அதற்கு இணங்காது கோயிலை அத்திவாரமும் இல்லாது அடியோடு கிளறுவித்தான். இக்கோயிலின் அழிபாடுகளைக்

கொ ண்டு கோட்டையும் சில வீடுகளும் கட்ட ப்பட்டதாக அறிய முடிகின் றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து மதக் குருவாக விளங்கிய பால்டியஸ் நல்லூரில் இருந்த தேவாலயம் பிற சம யத்தவரது கோயில் இருந்த இடத்தில் கட்டப்பட்டதாகத் தனது நூலில் கூறி யுள்ளார். பொதுவாக போத்துக்கேயர் சைவாலயங்களை அழித்த இடங்க ளில் அல்லது அவற்றுக்கருகில் தமது கத்தோலிக்க ஆலயங்களை அமைத் தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறே ஒல்லாந்தரும் கத்தோலிக்க தேவால யங்களையே புரட்டஸ்தாந்து தேவாலயங்களாக மாற்றினர். நல்லூர்க்கந்த சாமி கோயிலும் அவ்வாறே முதலில் கத்தோலிக்க தேவாலயமாகவும், பின் னர் புரட்டஸ்தாந்து தேவாலயமாகவும் மாற்றமடைந்தது எனலாம். கோயில் இடிக்கப்பட்ட பின்பு சைவர்கள் போத்துக்கேயருக்கு அஞ்சிவேலொன் றினை வைத்து வழிபாட்டினை மேற்கொண்டு வந்தாலும் அவ்வேல் எங்கு வைத்து வழிபடப்பட்டு வந்தது என்பது உறுதியாகக் கண்டு கொள்ளப்பட வில்லையெனலாம்.

1658 இல் யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தினை நிலைநாட்டிக் கொண்ட ஒல்லாந்தர் ஆரம்பத்தில் சுதேசவழிபாட்டுச் சுதந்திரத்தை வழங்க வில்லையாயினும் பின்னர் சமய சகிப்பினைக் கடைப்பிடித்தனர். போத்துக் கேயரால் இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசாமி கோயிலின் வழிபாட்டை மீள ஆரம்பித்தவராக அக்கோயிலின் அர்ச்சகரின் வழிவந்த பிராமணர் எடுத் துக்காட்டப்படுகின்றார்.

புரட்டஸ்தாந்து தேவாலயம் அமைந்திருந்த இடத்திற்கு அண்மை யில் கிருஸ்ணையர் சுப்பையர் என்ற பிராமணர் அரசஉத்தரவினைப் பெற்று வேலினைப் பிரதிஸ்டை செய்து மடாலயம் ஒன்றினை அமைப்பித்தார் என யாழ்ப்பாண வைபவ மாலை குறிப்பிடுகின்றது. இம் மடாலய அமைப்பு 1734 இல் நடைபெற்றதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. நல்லூர் கோயி லின் அதிகாரிகளில் ஒருவராகிய தொன்யுவான் மாப்பாண முதலியார் 1809 இல் பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த பெட்டீசத்தில் இக் கோயில் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதெனக் குறிப்பிடுவதைக் கொண்டு இன்றைய கந்தசுவாமி கோயில் 1749 இல் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம்.

குருக்கள் வளவு என்ற நிலத்தில் இக்கோயில் அமைக்கப்பட்டிருந் தது. இக்காலத்தில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்த இடமாக இவ்விடம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இங்கு பள்ளிவாசல் ஒன்றும் முஹமது இப்ராஹிம் என்ற முஸ்லிம் யோகி ஒருவருடைய சமாதியும் அமைக்கப்பட் டிருந்தன. இந்த முஸ்லிம்களை அப்புறப்படுத் தத் தமிழர்கள் பல முயற்சி

களை மேற்கொண்டு இறுதியில் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டனர். மேலும் இந்த முஸ்லிம்கள் நாவாந்துறைக்குச் சென்று அங்கு வதியத் தொடங்கினர். ஆனாலும் இவர்கள் அவ்விடத்தின் வழிபாட்டு உரிமை உட்படச் சில உரிமைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. இக்கோயிலின் மீளமைப்பில் தொன்யுவான் மாப்பாண முதலியார் தமது பதவியின் செல்வாக்கின் வாயிலாகப் பங்களிப்புச் செய்ததாகக் கூறப்படினும், அவர் கிறிஸ்தவராக இருந்து இம்முயற்சியை மேற்கொண்டார் என்பதைச் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் இவரது மகனான இரகுநாத மாப்பாண முதலியார் இதன் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்ததை மறுப்பதற்கில்லை. கோயிலின் பரிபாலனத்திற்குப் பொறுப்பாக மாப்பாண முதலியாரும் கிருஸ்ணையர் சுப்பையரும் இருந்தனர். பிரதம பூசகராகவும் இப்பிராமணர் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் கட்டியத்தில் இவரது பெயர் குறிப்பிடாது இரகுநாத மாப்பாண முதலியாரின் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது.

1799 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பிரித்தானியர் சுதேசசமய சுதந்திரத்திற்கு இடமளித்தனர். மேலும் சைவாலயங்களில் பூசைசெய்பவர்களை ஆணைப்பத்திரம் மூலமாக நியமித்தும் வந்தனர். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் வால சுப்பிரமணிய ஐயர் இத்தகைய நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனால் மேற்படி பூசகருக்கும் தர்மகர்த்தாவாகிய கந்தையா மாப்பண்ணருக்குமிடையில் எழுந்த முரண்பாடுகள் நீதிமன்றம் வரை சென்று, இறுதியில் மாப்பாண முதலியாரின் குடும்பத்தினர் அக்கோயிலின் உரிமையை நிலைநாட்டிக் கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் கிறிஸ்தவ மிஷனரிகளின் மூலம் யாழ்ப்பாண மக்களிடையே கிறிஸ்தவம் செல்வாக்குப் பெறத் தொடங்கிய காலகட்டத்தில் சைவ மறுமலர்ச்சிக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் பிரதான பங்கு வகித்தவர் ஆறுமுகநாவலர்.

இன்று நகரின் மையத்தில் மிக உயர்ந்த நிலையில் பலரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் காட்சியளிக்கும் கந்தன் ஆலயம் பலர் நினைப்பது போல் பிற்காலத்தில் தோன்றிக் குறுகிய காலத்தில் வளர்ந்த ஆலயமல்ல. அது தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றுடன் இணைந்து பல படையெடுப்புக்களை, போராட்டங்களை, அழிவுகளைச் சந்தித்துப் படிப்படியாக வளர்ந்த ஒரு ஆலயம். அதனால் தான் அவ்வாலயம் எம்மதத்தின் அடையாளமாக மட்டும் பார்க்கப்படாது, எமது இனத்தின் அரசசின்னமாக, பாரம்பரிய பண்பாட்டின் அடையாளமாகப் பார்க்கப்படவேண்டும்.

8

# நல்லூர் நாற்றிசைக்கோயில்கள் - தமிழரின் இராசதானியை நினைவுபடுத்தும் சின்னங்கள்

**ம**னிதன் தோன்றிய காலம் தொட்டு கடவுள் நம்பிக்கை அவனுடன் இரண்டறக் கலந்துவிட்டது. இதனால்தான் எமது சமூகம் தமது மூதாதையினரின் கடந்தகால வரலாற்று நினைவுகள் பலவற்றை மறந்த போதும் அவர்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்திருந்த கடவுள் நம்பிக்கையைத் தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது.அவற்றின் வெளிப்பாடுகளே ஆலயங்களாகும். இன்று அவ்வாலயங்கள் பலவற்றின் தோற்றமும், வடிவமும் காலமாற்றத்திற்கு ஏற்ப மாறியிருந்தாலும் அவற்றின் நினைவுகள் குறிப்பிட்ட சமூகத்தின் நீண்ட கால வரலாற்றை தெரிந்து கொள்ள உதவுகின்றது என்பதில் ஐயமில்லை. இதற்கு நல்லூர் இராசதானி கால நாற்றிசைக் கோயில்களும் விதிவிலக்கல்ல. ஆகவே இன்று நாம் நல்லூரில் தரிசித்து வரும் நாற்றிசைக் கோயில்களை சமகால வழிபாட்டு ஆலயங்களாக மட்டும் பார்க்காது எமது பாரம்பரிய பண்பாட்டு நினைவுச் சின்னங்களையும் தரிசிப்பதாகக் கொள்கின்றோம்.

தென்னாசியப் பண்பாட்டில் மக்களைப் பாதுகாக்கும் ஆலயங்களே அரசையும் பாதுகாக்கிறது என்ற கருத்து பண்டுதொட்டு இருந்து வருகிறது. இதனால் பண்டைய அரசர்களின்

அரண்மனையாகவும், பாதுகாப்பு அரணாகவும், நிர்வாக மையமாகவும் ஆலயங்கள் திகழ்ந்தன . இம்மரபின் தொடக்கம் சங்க இலக்கியங்கள் கூறும் 'நானிலக் கடவுளர்' கோட்பாட்டிலிருந்து வளர்ச்சிபெற்றிருக்கலாம் எனப் பேராசிரியர் சிற்றம்பலம் கருதுகின்றார். இடைக்கால தமிழக வரலாற்றில் முதன்மை பெற்ற இம்மரபு சமகாலத்தில் இலங்கைத் தமிழரிடமும் செல்வாக்கைப் பெற்றதற்கு நல்லூர் இராசதானி கால நாற்றிசைக் கோயில்களை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். நல்லூர் இராசதானி தொடர்பாக பிற்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான யாழ்ப்பாண வைபவமாலை விஜயராசன் கதிரமலையில் அரசாட்சியை ஆரம்பிக்க முன்னரே தன் ஆட்சிக்குப் பாதுகாப்பாக நான்கு திக்கிலும் சிவதேவாலயங்களை அமைத்ததாக கூறுகின்றது. இம்மரபு நல்லூர் இராசதானியிலும் தொடர்ந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. யாழ்ப்பாண வைபவமாலை 'யாழ்ப்பாணத் திற்கு வந்த சிங்கையாரியன் நல்லூரில் அரசநகர், அரசமாளிகை, கூடகோபுரம், பூங்கா, ஸ்நான மண்டபம் முப்படைக் கூபமும் உண் டாக்கி, கூபத்தில் யமுனாநதித் தீர்த்தமும் கலந்து, நீதிமண்டபம், யானைப்பந்தி, சேனாவீரரிருப்பிடம் முதலாய ஐந்தும் கட்டுவித்து, பிராமணரை இருத்தி, கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோயிலும், வடதிசைக்குச் சட்டநாதேஸ்வரர்கோயில், தையல்நாயகி யம்மன் கோயில், சாலைவிநாயகர் கோயிலையும் அமைத்தான்' எனக் கூறுகிறது. இன்று சமகாலக் கலைமரபுகளுடன் இவ்வாலயங் கள் பெரும்பாலும் காணப்பட்டாலும் அவற்றின் தோற்றம் நல்லூர் இராசதானிக்கு முன்னரோ அல்லது நல்லூர் இராசதானியுடன் ஏற்பட்டிருக்கலாம் என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டு கின்றன. அதை போர்த்துக்கேயர் கால அழிவிலிருந்து தப்பிய தொல்லியற் சின்னங்களும் ஓரளவுக்கு உறுதிப்படுத் துகின்றன.

இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் நல்லூர் இராசதானியைச் சுற்றி நாற்றிசைக் கோயில்கள் இருந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. இவை சிவன், அம்மன், பிள்ளையார் ஆலயங்களாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். இவ்வாலயங்களில் சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார்

கோயில், வீரமாகாளியம்மன் கோயில் என்பன நல்லூர் இராசதானி காலப் பெயர்களில் இன்றும் அழைக்கப்பட்டு வருவது அதன் பழைமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஆயினும் கைலாசநாதர் ஆலயத்தை இலக்கிய ஆதாரங்களில், குறிப்பாகக் கைலாயமாலை என்ற நூலில் இருந்தே அறியமுடிகின்றது. தென்திசையில் கைலாயநாதர் கோயில் நிறுவப்பட்டதாக குறிப்பிடப்படுவதை நோக்கின் அது ஒரு சிவதேவாலயமாக இருந்திருக்க வேண்டும். சிங்கையாரிய மன்னன் மதுரையில் வசித்த போது சொக்கநாதரை வழிபட்டு வந்ததாகவும் யாழ்ப்பாணத்திற்கு வந்தபின்பு இங்கு அவரை வழிபட முடியாமல் இருந்ததையும், சிவன் கோயிலொன்றைக் கட்டி அதற்குச் சொக்கலிங்கநாதர் எனப்பெயர் சூட்ட அவன் எண்ணியிருந்ததையும்,அப்போது கனவில் உமாதேவியாருடன் தோன்றிய சொக்கலிங்கநாதர், 'மன்னா என்னை மறந்தனையோ என்பெயர் கைலாயநாதன்' என்று கூறி ஆட்கொண்டதாகவும் இதன் பிரகாரம் 'கைலாயநாதன்'என்ற பெயரோடு ஆலயமமைக்க முடிவுசெய்து, அதனை நிறுவிக் கும்பாபிஷேகம் நடத்துவித்ததாகவும் கைலாயமாலை கூறுகின்றது.


கைலாசநாதர் கோவில்

ஏறத்தாழ நல்லூர் இராசதானியில் 400 ஆண்டுகளாகச் சிறப்புற்றிருந்த கைலாயநாதர் கோயில் கி.பி.1620 இல் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டாலும் இந்நிகழ்விற்கு முன்னரே இக் கோயில் பூசகர் கோயிலின் மூர்த்தியை மட்டுவிலுக்குக் கொண்டு சென்று அங்குள்ள குளமொன்றில் மறைத்து வைத்திருந்ததாக இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. பின்னர் அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டு அது மட்டுவில் சிவன் கோயிலென அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான குவைரோஸ் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறிதுமாக இருந்த 500 இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டதாகத் தனது நூலில் குறிப்பிடுகிறார். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயச் சிதைவுகளைக் கொண்டே போர்த்துக்கேயர் தமது கோட்டைகளை

யும், பிற நிர்வாகக் கட்டிடங்களையும் அமைத்தனர். அவ்வாறு கட்டப்பட்டதற்கு யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட நல்லூர் ஆலயம் தொடர்பான சோழக் கல்வெட்டு சிறந்த சான்றாகும். இவ்வாறே நல்லூர்க் கைலைநாதர் கோவிலும் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு இக் கோவில் தொடர்பாக ஊர்காவற்றுறைக் கோட்டையில் கிடைத்த சான்றுகளை ஆதாரம் காட்டுகின்றன

நல்லூர் இராசதானியின் கிழக்குத்திசையில் அமைக்கப் பட்ட கோயில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலாகும். இக்கோயி லுக்கு அண்மையில் கோட்டை வாசல் என்ற இடம் இனங் காணப் பட்டுள்ளதால் நல்லூர் இராசதானியின் கோட்டை வாசல் கிழக்கு நோக்கி இருந்ததாகக் கருதப்படுகின்றது. தமிழ்நாட்டில் இராமநாத புரத்திற்கு அண்மையில் உப்பூரில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயமொன்று காணப்படுகின்றது. சிங்கையாரியன் மதுரையி லிருந்து அழைத்து வரப்பட்டவனாதலால் தமிழ்நாட்டிலுள்ள வெயிலுகந்த பிள்ளையார் கோயிலின் செல்வாக்கால் நல்லூர் இராசதானியில் கிழக்கு வாசல் கோயிலாக இக்கோயில் இடம் பெற்றிருக்கலாம். இவ்வாலயத்துக்கு அண்மையிலுள்ள நாயன்மார் கட்டு குளத்திலிருந்து பெறப்பட்ட கல்வெட்டு சிங்கையாரியனால் தீர்த்தங் கொடுப்பதற்காக இக்குளம் அமைக்கப்பட்டதாக கூறுகின்றது. இக்கல்வெட்டினை ஆராய்ந்த அறிஞர்கள் 17அல்லது18ஆம் நூற்றாண்டுக்குரியதாக எடுத்துக்காட்டுவதோடு, பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்படி மன்னன் பெயரை நினைவுபடுத்தி இக்கல்வெட்டை எழுதியிருக்கலாமெனவும் கருதுகின்றனர்.

பண்டைத்தமிழர் கொற்றவையை வீரத்தெய்வமாகப் போற்றியதைச் சங்கஇலக்கியங்கள் தெரியப்படுத்துகின்றன. அதன் தொடர்ச்சியாகக் காளி வழிபாடு பிற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இத்தகைய வீரத் தெய்வத்தை யாழ்ப்பாண மன்னர்களும் போற்றியதன் பின்னணியில் நல்லூர் இராசதானியின் காவற் தெய்வமாக வீரமாகாளி அம்மன் கோயில் நிறுவப்பட்ட தெனலாம். இக்கோயிலின் முன்னே காணப்பட்ட பரந்த வெளியில்

பீரங்கிகளுடன் வந்த போர்த்துக்கேயருக்கும், வாள்களுடன் நின்ற தமிழ்ப்படைகளுக்கும் இடையே பெரும்போர் நடைபெற்றதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. மேலும் தென்னிலங்கை யிலிருந்து யாழ்ப்பாண இராசதானியில் தஞ்சமடைந்திருந்த விதிய பண்டாரமும் சங்கிலி மன்னனும் சத்தியம் செய்து உடன்படிக்கை செய்வதற்காக இக்கோயிலின்முன்பு கூடியமையானது யாழ்ப் பாண இராசதானி காலத்தில் இக்கோயில் பெற்றிருந்த முக்கியத்து வத்திற்குச் சான்றாகும். இதுவும் போர்த்துக்கேயரால் தரைமட்ட மாக்கப்பட்டு மீளத் தற்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டநாதர் என்பது சிவமூர்த்தங்களில் ஒன்றாகும். இரணியனைக் கொல்வதற்காக விஷ்ணு நரசிம்மஅவதாரம் எடுத்தார்.சிவன் நரசிம்மத்தின் வீராவேசத்தை அடக்கி, அதன் எலும்பைக் கதாயுதமாகவும், தோலைச்சட்டையாகவும் தரித்தார். தமிழகத்திலே சீர்காழி என்ற இடத்திலே இம்மூர்த்தத்திற்குரிய சட்டநாதர் ஆலயமுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலய செல்வாக்கின் பின்னணியில் யாழ்ப்பாண இராசதானியில் நாற்றிசைக் கோயில்களிலொன்றாக இக்கோயில் இடம்பெற்றி ருக்கலாம். இன்றைய சட்டநாதர் ஆலயக்குளத்தில் இருந்து பிள்ளையார், வள்ளியம்மை, தெய்வயானையுடன் இணைந்திருக் கும் முருகன், கஜலட்சுமி, தக்ஷிணாமூர்த்தி, சனீஸ்வரன், காவல் தெய்வம் (ஐயனார்)போன்றன உள்ளடங்கிய எட்டு கற்சிலைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.இவை நல்லூர் இராசதானி கால சட்டநாதர் கோயிலுக்குரியவையாகப் பேராசிரியர் சிவசாமி எடுத்துக் காட்டியுள்ளார்.

அன்றைய நல்லூர் இராசதானியின் மையப்பகுதியாகவும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் பிரதான கோயிலாகவும் தற்போதைய முத்திரைச் சந்தைப் பகுதியே கொண்டிருந் ததென்பதைப் பல்வேறு அறிஞர்களும் நிறுவியுள்ளனர். அவ் விடத்தை நடுநாயகமாகக் கொண்டு அதற்கு அண்ணளவான தூரத்தில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயமும், சட்டநாதர் ஆலயமும் அமைந்திருந்ததாக எடுத்துக்காட்டப்படுகின்றது. மேலே

குறிப்பிட்ட நல்லூர் இராசதானியின் நாற்றிசைக் கோயில்களும் ஏறக்குறைய சமஅளவு தூரத்தில் அமைந்திருந்திருக்கலாமென்பது சில அறிஞர்களது முடிவாகும். தற்போதுள்ள வெயிலுகந்த பிள்ளையார் ஆலயமும், சட்டநாதர் ஆலயமும் முத்திரைச் சந்தைக்கு ஏறக்குறைய சமதூரத்தில் காணப்படுவது போன்று ஏனைய ஆலயங்களும் இருந்திருக்க வேண்டும். போர்த்துக கேயர், ஒல்லாந்தர் கால கலையழிவுக் கொள்கை காரணமாக மேற்படி ஆலயங்களும் அழிவுக்குட்படலாயின. இவற்றில் முதலிரு ஆலயங்களும் தற்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட ஏனைய இரு ஆலயங்களும் தற்போதுள்ள நல்லூருக்குச் சமதூரத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்பது இக்கோயில்களின் அழிபாடு களுக்கு காரணமான போத்துக்கேயரின் ஆவணங்களில் இருந்து ஊகிக்கமுடிகிறது..

9

# ஜமுனா ஏரி - யாழ்ப்பாண அரசுகால நினைவுச்சின்னம்



நல்லூரிலே சட்டநாதர் ஆலயத்துக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் பருத்தித்துறை வீதியின் கிழக்குப் பக்கத்தில் இந்த யமுனா ஏரி அமைந்துள்ளது. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண அரசு விளங்கியது. இங்கு கனகசூரியனுக்குப் பின் அரசனாக வந்த அவனது மகன் சிங்கைப் பராசசேகரன் என்பவன் காலத்திலேயே இந்த 'யமுனா ஏரி' கட்டப்பட்டதாகக் கருத்துண்டு.

16 ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்னும் 3 இராசதானிகள் இருந்ததாகவும் அவற்றில் யாழ்ப்பாண மன்னன் பொருள் வளத்திலும் இராணுவ பலத்திலும் மேலோங்கியிருந்ததாகவும் அவர்களது ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரசு தொடர்பாகப் பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, வையாபாடல் முதலான தமிழ்

இலக்கியங்கள் யாழ்ப்பாண அரசர்கள் பற்றியும், அவர்களது சாதனைகள், மக்கள் குடியேற்றங்கள் பற்றியும் பல தகவல்களைத் தருகின்றன. அவ்வி லக்கியங்கள்தான் யாழ்ப்பாண அரசின் முதல் தலைநகர் சிங்கை அல்லது சிங்கை நகர் எனக் குறிப்பிடுகின்றன. அவற்றிற் கனகசூரியனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவன் மகன் சிங்கை பரராசசேகரன் என்பவனே சிங்கை என்னும் பெயரைத் தலைநகருக்குரிய பேராகப் பயன்படுத்தினான் எனக் குறிப்பிடப்படுகின்றன. இவன் காலத்தில்தான் யமுனா ஏரியும் கட்டப்பட்ட தாகத் தெரிய வருகிறது.

இவன் தந்தையிலும் சிறந்தவனாய் நகருக்கு வட திசையில் சட்ட நாதர் திருத்தளியையும் கிழக்குத் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் ஆல யத்தையும், தென் திசையில் கைலாசநாதர் ஆலயத்தையும், மேற்குத் திசை யில் வீரமாகாளி அம்மன் திருப்பதியையும் கட்டுவிட்டுவித்துத் தன் தலை நகரை முன்னரிலும் அழகுற விளங்க வைத்தான். இவன் தனது சமய ஆர்வ மிகுதியினால் தானும் குடிமக்களும் நன்மை பெறக் கருதி 1478 இல் வட இந் தியாவின் யமுனை ஆற்றிலிருந்து திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளில் கொண்டுவந்து இங்கு ஓர் ஏரி அமைத்து அவ்வேரிக்குளம் அப்புனித நீரைப் பெய்வித்தான். சங்கிலித்தோப்பு கல்தோரண வாசலுக்குக் கிழக்கே சில யார் தூரத்தில் இந்த யமுனா ஏரி அமைந்துள்ளது.

யாழ்ப்பாண வைபவமாலையில் இவ்வேரிக்கு இடப்பட்ட பெயர்க் காரணம் பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வட இந்திய யமுனை நதியின் தீர்த்தம் வருவிக்கப்பட்டுத் தலைநகர் அந்தஸ்து டைய நல்லூரில் அமைக்கப்பட்ட ஏரியில் கலப்பித்து விட்ட நிலையில், அரச அந்தஸ்துடனாக்கப்பட்ட யமுனா ஏரி எனப் பெயரிடப்பட்டமை யைக் காணலாம்.

பகர வடிவினதாக இவ்வேரி யமுனாரி எனவும் அழைக்கப்படு கின்றது. வயல் வெளிகளையும் தென்னந்தோப்புக்களையும் சூழவரக் கொண்டுள்ள இவ்வேரியைச் சுற்றித் தற்போது பற்றைக் காடுகள் வளர்ந் துள்ளதால் கிட்ட அணுகுவது கடினமானதாகும். இருப்பினும் இதன் அமைப்பும் கட்டடப் பொறிநுட்பமும் அக்காலத் தமிழ் மன்னர்களின் தொ ழில்நுட்பத் திறனை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வேரியைப் பொழிந்த முருகைக் கற்களையும், வெள்ளைக் கற்களையும் கொண்டு அமைத்துள்ள னர். இக்கேணிக்குள் இறங்கிச்செல்ல வசதியாகச் சிறிய படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆபத்தான காலங்களில் அரசர்கள் தமது சொத்துக்களை இவ்வேரி யில் போட்டுவிட்டு ஓடியதற்கு ஆதாரங்கள் உள்ளன. 1992 களில் இவ்வே ரிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட மரத்தாலான அம்மன் சிலை இதற்குச் சிறந்த சான்றாகும். இவ்வேரியில் அரசர்கள் பாதுகாப்புக் கருதிச் சுரங்கங்கள் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அச்சுரங்கங்களில் ஒன்று மந்திரி

மனையுடன் தொடர்புபட்டதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் இயற்கை அரண் இல்லாத யாழ்ப்பாணத்தில் அக்கால அரசர்கள் தமது பாதுகாப்புக்க ருதிச் சுரங்கப்பாதைகளையும் இயந்திரப் பொறிகளையும் அமைத்திருந்த னர் எனக் கொள்வதில் வியப்பில்லை. இவ்வேரியைச் சுற்றிச் சில கட்டடத் தொகுதிகள் இருந்திருக்கலாம் என்பதை இங்குள்ள செங்கட்டிகள், கலை வேலைப்பாடுடைய சுண்ணாம்புச் சாந்தினால் ஆன தூண்கள், பழைமை யான ஓடுகள், மட்பாண்டங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

யமுனா ஏரியின் தோற்றம் யாழ்ப்பாண அரசுக் காலத்தில்தான் தோன்றியதென்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஏனெனில் யமுனா ஏரி அமைந்த பிரதேசம் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மக்கள் நடமாட் டத்திற்குரிய பிரதேசமாக இருந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத் துள்ளன.


இப்பிரதேசத்திற் கண்டுபிடிக்கப்பட்ட லக்ஷ்மி நாணயங்கள் மற் றும் உரோமர் கால நாணயங்கள் இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் னரே இவ்விடத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேசவணிக உறவுகள் இருந்த தற்குச் சான்றாக அமைகின்றன. மேலும் யமுனா ஏரிக்கு மேற்கு, நாயன் மார்க்கட்டு, மணியந்தோட்டம், அரியாலை கிழக்கு ஆகிய பகுதிகளில் கிடைத்த புராதன குடியிருப்புகளுக்குரிய தொல்லியற் சின்னங்கள் கிறிஸ் தவ சகாப்தத்திற்கு முன்னரே இப்பிரதேசம் சன நடமாட்டத்திற்குரிய பகுதி யாக இருந்ததைக் காட்டுகின்றன.

இதனால் யமுனா ஏரி யாழ்ப்பாண அரசிற்கு முன்னரே இயற்கை யாக அல்லது செயற்கையாகத் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. அது யாழ்ப் பாண அரசு காலத்தில் அரசின் புண்ணிய தீர்த்தமாக மாற்றப்பட்டிருக்க லாம். அதேவேளை தற்போதுள்ள யமுனா ஏரியின் கட்டிடத் தொழில்நுட்ப முறை யாழ்ப்பாண அரசுக் காலத் தொழில்நுட்ப முறையில் கட்டப்பட்ட கட் டடம் எனவும் திட்டமாகக் கூறமுடியாது.

ஏனெனில் அது தமிழரின் புனித சின்னமாகக் கடந்த 400 ஆண்டு கால வரலாற்றில் போற்றப்பட்டதால் அவ்வேரி சீரழிந்து போகாதிருக்கக் காலத்திற்குக் காலம் பல தடவைகள் மீளமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. ஆதலால் அதன் உண்மை தோற்றத்திலும் சில மாற்றங்கள் ஏற் பட்டிருக்க வாய்ப்புண்டு. யாழ்ப்பாண அரசு காலத்தில் யமுனா ஏரி சமய முக்கியத்துவம் வாய்ந்த புனித இடமாகவும், அரசமகளிர் நீராடும் அந்தப்பு ரமாகவும் விளங்கியதாக ஐதீகங்கள் கூறுகின்றன. ஆனால் ஐரோப்பியர் ஆட்சியில் இதுவேறுபட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயினும் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே யாழ்ப்பாண அரசுடன் இவ்வேரி தொடர்புபடுத்திப் போற்றப்ப டும் வரலாற்று நினைவு காணப்படுவதால் இவ்வேரிக்கும் யாழ்ப்பாண அர சுக்கும் ஒரு நெருங்கிய வரலாற்றுத் தொடர்புண்டு என்பதில் எந்தவித ஐய மும் இல்லை.

# 10

## மந்திரிமனை - யாழ்ப்பாண அரசின் ஓர் நினைவுச்சின்னம்



இம் மந்திரி மனை யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் நல்லூர் சட்டநாதர் கோவிலின் தென்னெல்லையில் நல்லூர் இராசதானியின் பாரம்பரிய வரலாற்றை நினைவு படுத்தும் வகையில் கம்பீரமான முகப்புத் தோற்றத்துடன் காணப்படுகின்றது. இம்மந்திரிமனை போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் அக்கால அமைச்சர் ஒருவரின் இருப்பிடமாக இருந்ததென்பது பொதுவான கருத்தாகும்.

இம்மந்திரிமனை 13 ஆம் நூற்றாண்டுக்கும் 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னர்களால் கட்டப்பட்டதென்று கருதப்படுகின்றது. இவ்விடம் தமிழ் இராசதானி இருந்த இடம் என்பதால் அக்கால அரசகட்டிடங்கள் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆயினும் தற்போதைய இம் மந்திரி மனையின் அமைப்பும், கலை மரபும் யாழ்ப்பாண அரசு காலத்திற்குரியவை எனக் கூறமுடியாது. சில சுதேசகலை மரபுகளும், தமிழரின் தொழில் நுட்பமும் கலந்து காணப்பட்டாலும் கட்டிடத்தின் தோற்றமும், அதன் கலைமரபும் யாழ்ப்பாண அரசிற்குப்

பின்னர் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியருக்கும் உரியவையாகக் காணப்படுகின்றன.

இரு மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தின் முன்முகப்பில் வாசல் பகுதியை ஒட்டியவாறு அதன் இரண்டு பக்கங்களிலும் இரு கல்லிருக்கைகள் காணப்படுகின்றன. இங்கு வந்துபோவோர் அமர்ந்திருப்பதற்காக அமைக்கப்பட்டவையாக இவை இருக்கலாம். இதிலிருந்து இக்கட்டிடம் ஒரு நிர்வாக மையமாக அல்லது சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ஒருவரின் இருப்பிடமாக இருந்ததென்பது தெரிகிறது.


இவ்விருக்கைகளுக்கு முன்னால் உயர்ந்த வேலைப்பாட்டுடன் கூடிய வீட்டுக் கதவு காணப்படுகிறது. அதனைக்கடந்தால் பெரியதொரு மண்டபம் காணப்படுகிறது. அம் மண்டபத்திற்கு மேற்கே இரண்டு அறைகளும் தெற்கே ஒரு அறையும் காணப்படுகின்றன. ஏறத்தாழ இதே அமைப்பே மேல்மாடியிலும் காணப்படுகின்றது. மேல் மாடிக்குச் செல்வதற்காகத் தெற்குப் பக்க அறையை ஒட்டியதாக மரத்தாலான படிகள் காணப்படுகின்றன. காற்றோட்ட வசதிக்காக அமைக்கப்பட்டிருக்கும் இக்கட்டிடத்தின் உயர்ந்த கூரை தற்கால கூரை அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனித்துவமான அம்சமாகக் காணப்படுகிறது.

மேலும் இம்மனையின் பின்புறத்தில் நிலஅறை ஒன்றும் அதற்கு மேல் மூடுசாந்தினால் அமைக்கப்பட்ட மண்டபமும் இருந்தாகத் தெரிகிறது. தற்போது இவை இடிந்த நிலையில் காணப்படுகின்றன. இவ்விடத்தில் இருந்து வீட்டிற்கு செல்லும் சுரங்க வாசல் ஒன்று பிற்காலத்தில் அடைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இதே போல் வீட்டிற்குள்ளே இருந்த நிலவறையும் அதற்குள் இறங்கிச் செல்ல இருந்த படிக்கட்டுக்களும் பிற்காலத்தில் அடைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இக்கட்டிடத்திற்கும் 'ஜமுனா'' ஏரிக்கும் இடையே சுரங்கப்பாதை இருந்ததாக நம்பப்படுகிறது. இக்கட்டடத்தின் சிறப்பான அம்சங்களாக மரத்தாலான சிற்ப வேலைப்பாடுகளால் காணப்படுகின்றன. மரச்சிற்பத்திலான பொதிகையின் மேல் இரண்டு யானைத் தந்தங்களைப் பொருத்தியது போன்ற வளைவிலான இரு மரச்சட்டங்கள் கூரை முகட்டினைத் தாங்கி நிற்பது பார்ப்போரைக் கவர்வதாகவுள்ளது. இதன் கலைமரபு பிற்பட்ட ஒல்லாந்தர் காலக் கலைப் பாணியை நினைவுபடுத்தினாலும் கட்டடத்தின் உள்ளே காணப்படும் மரத்தினால் செதுக்கப்பட்ட தூண்கள், சிறந்த தொழில் நுட்பத்துடன் கூடிய போதிகைகள் யாழ்ப்பாண அரசு காலத்தைச் சேர்ந்தவையாக அல்லது அக்காலக் கலைமரபைப் பின்பற்றி பிற்காலத்தில் வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றன எனலாம்.

இம்மந்திரிமனையை ஐரோப்பியர் கால நினைவுச் சின்னமாக எடுத்துக் கொண்டாலும் அதற்குள் யாழ்ப்பாண அரசுகால வரலாறும் மறைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. கி.பி.1619 இல் யாழ்ப்பாண அரசைவெற்றி கொண்ட போத்துக்கேயரும், பின்னர் ஆட்சி செய்த ஒல்லாந்தரும் யாழ்ப்பாண அரசு கால ஆலயங்கள் கட்டடங்களை அழித்து அப்பொருட்களைப் பயன்படுத்தியே தமது ஆலயங்கள், கோட்டைகள், துறைமுகங்

கள் நிருவாக மையங்கள் என்பவற்றை அமைத்ததாக அவர்களது ஆவணங்க ளில் குறிப்பிட்டுள்ளனர். இதை யாழ்ப் பாணக் கோட்டைக்குள் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டுக்களும், இந்து விக்கிர கங்களும் உறுதி செய்கின்றன. ஆயி னும் இவை பெரும்பாலும் கடற்கரை சார்ந்த இடங்களிலேயே அமைக்கப்பட் டிருந்தன. ஆனால் மந்திரிமனை அமைந்த நல்லூர்ப் பிரதேசம் கடற்கரை சார்ந்த இடமல்ல. அப்படியிருந்தும் ஐரோப்பியர் இங்கிருந்தமைக்குக் காரணம் ஏதோ இருக்கவேண்டும்.



யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்கால இலக்கியங் கள் நல்லூர் இராசதானி காலத்தில் இருந்த ஆலயங்கள் கோட்டைகள், துறை முகங்கள், அரசமாளிகைகள், இருப்பிடங்கள் பற்றிப் பலவாறு கூறுகின்றன. போர்த்துக்கேய ஆசிரியரான கெய்ரோஸ் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறி துமாக இருந்த 500 ஆலயங்களை இடித்தழித்ததாகக் குறிப்பிடுகிறார். அக் கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தியே தமது கட்டடங்களை அமைத்த தாகத் தெரிகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் மண், மரம், கல் என்பவற் றைக் கலந்து கட்டிய கட்டடங்களே காலப்போக்கில் ஒல்லாந்தராலும், ஆங் கிலேயராலும் கற்கள் கொண்டு மீளக்கட்டப்பட்டன.

இவ்வரலாற்றுப் பின்னணியை நோக்கும் போது யாழ்ப்பாண அரசு காலத்தில் அவர்களின் நிருவாக மையமாக இருந்த ஒரு இடமாக மந்தி ரிமனை இருந்திருக்கவேண்டும். அதைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரும், பின் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் காலமாற்றத் திற்கு ஏற்ப சமகாலக் கலைமரபைப் பயன்படுத்தி மந்திரிமனையை மீள மைத்திருக்க வேண்டும். ஆயினும் இதைக் கட்டுவித்தவர்கள் ஐரோப்பிய ராக இருந்தாலும் கட்டியவர்கள் யாழ்ப்பாணத்து மக்களாக இருக்கவேண் டும். அதனால் தான் கட்டிடத்தில் காணப்படும் கலைவேலைப்பாடுகள் பல தமிழரின் பாரம்பரியக் கலைமரபுகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. ஆக வே மேலோட்டமாகப் பார்ப்போருக்கு தற்போதைய மந்திரிமனையின் தோற்றம் ஐரோப்பியரின் நினைவுச் சின்னமாகத் தெரியலாம். ஆனால் ஆழ மாக ஆராய்ந்து பார்த்தால் அதற்குள் யாழ்ப்பாண அரசின் வரலாறும் மறைந்திருப்பதைக் காணலாம்.

இம் மந்திரி மனையின் வரலாற்றுச் சிறப்புக்கருதித் தற்போது அது அரசநிருவாகக் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகிறது. இதன் வரலாற்றுப் பழமையையும், அதன் வரலாற்றுப் பெறுமதியையும் உணர்ந்த யாழ்ப் பாண மாவட்ட சபை, மாநகர சபை, மாவட்ட செயலகம் என்பன 1984 ஆம், 1990 ஆம், 1994 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இவ்நினைவுச் சின் னத்தை அதன் பழமை மாறாத வகையில் பாதுகாப்பதற்குப் பல முயற்சி களை எடுத்து வந்தன. ஆயினும் தற்போது அதன் தோற்றமும் பழமையும் அழிவடைந்து போகும் நிலையிலேயே காணப்படுகின்றன.

# 11

## நல்லூர் இராசதானியின் நினைவுச்சின்னமாக கோப்பாயில் அமைந்திருந்த சங்கிலியன் கோட்டை

கோப்பாயிற் காணப்படும் அழிபாடுகளைப் பொதுவாகச் சங்கிலியன் காலக் கோட்டையென்றே கூறுகின்றனர். ஆனால் இன்னொரு சாரார் அதனை நல்லூர் இராசதானியின் உபதலைநகர் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் சங்கிலி மன்னன் தங்கியிருந்த அரண்மனை என்பர். அரண்மனை என்பதற்குக் கோப்பாய் என்பதில் வரும் 'கோ' என்ற எழுத்து அரசனையும் 'பாய்' என்ற சொல் இருப்பிடத்தையும் குறிப்பதை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ஆயினும் இக்கட்டட அழிபாடுகளைக் கொண்டு இக்கட்டடம் என்ன நோக்கத்திற்காகக் கட்டப்பட்டதென்பதைத் தற்போது திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஆயினும் யாழ்ப்பாண அரசு காலத்தில் அதிலும் குறிப்பாகச் சங்கிலி மன்னன் ஆட்சியில் இது ஒரு முக்கிய பாதுகாப்பாக அரணாக அரசமையமாகத் திகழ்ந்ததெனக் கூறலாம்.

இவ்வரலாற்றுப் பழமைவாய்ந்த இடம் கோப்பாய்ச் சந்தியில் இருந்து வடக்காகச் சில யார் தூரத்தில் வலப்பக்கமாக சற்று உள்நோக்கி (பிரதான வீதியிலிருந்து கிழக்காகச் செல்லும் ஒழுங்கை இக்கட்டடப் பகுதிக்குச் செல்கிறது). அமைந்துள்ளது. நீண்ட காலத்திற்கு முன் மிகப்பெரிய பாதுகாப்பு அரணாக இருந்த இக்கட்டடம் அண்மைக்காலங்களில் இடிக்கப்பட்டு அவ்விடங்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த கட்டடப் பகுதிகள் கூட இடிக்கப்பட்டு வேறு தேவைகளிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வரணின் சுற்றாடலில் கிணறு வெட்டிய போதும் வீடு கட்ட அத்திவாரம் வெட்டிய போதும் பழமையான கலைச் சின்னங்கள் வெளிவந்ததாக அறிய முடிகின்றது. அண்மையில் இவ்விடத்தில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட கலாநிதி இரகுபதி இங்கு பரவலாகக் கிடைத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்து அவற்றின் காலம் யாழ்ப்பாணம் அரசு தோன்றுவதற்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்

துள்ளார். இக்காலக் கணிப்பு யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே இவ்வி டத்தில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததைக் காட்டுகிறது.

கோப்பாயை யாழ்ப்பாண மன்னர்கள் தமது நடவடிக்கைகளின் முக்கிய ஒரு மையமாகத் தெரிவு செய்ததற்குப் பல காரணங்கள் இருக்க லாம். நல்லூர் இராசதானியின் கடற்கரைப் பட்டினமாக யாழ்ப்பாணம் விளங்கினாலும் இதன் பாதுகாப்பிற்காகப் பண்ணைத்துறை, கொழும்புத் துறை, கோப்பாய், செம்மணி போன்ற இடங்களில் அரண்களை அமைத்த னர் எனக் கூறப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் யாழ்ப் பாண மன்னர்கள் கோப்பாயில் உள்ள கோட்டையைத் தமது முக்கிய பாது காப்பு அரணாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. குறிப்பாகச் சங்கிலி மன்னன் காலத்தில் போத்துக்கேயர் மீண்டும் படையெடுக்கலாம் என அஞ் சித் தனது படையின் ஒரு பிரிவை நல்லூரிலும் இன்னொரு பிரிவைக் கோப் பாயிலும் வைத்திருந்ததாகத் தெரிகின்றது.

கோப்பாயை மையமாகத் தெரிவு செய்தமைக்கும் முக்கிய பாது காப்பு மையமாகத் தெரிவு செய்தமைக்கும் அதன் அமைவிடம் ஒரு முக்கிய காரணமாகும். தற்போது கோட்டையின் அழிபாடுகள் காணப்படும் இடம் பெருநிலப்பரப்பிலிருந்து தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாண அரசின் மீது மேற்கொள்ளப்படும் படையெடுப்புக்களைத் தடுப்பதற்கு முக்கிய மைய மாகக் காணப்படுகிறது. இதற்குக் கோப்பாய்க்கும் தென்மராட்சிக்கும் இடைப்பட்ட சிறு கடல் பெருந்துணையாக இருந்தது. 11 ஆம் நூற்றாண்டில் பொலநறுவையில் ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகு கோப்பாய்க்கு எதிரேயுள்ள மட்டுவழல் என்னும் இடத்தில் தன்படைகளை நிறுத்தி வைத்தி ருந்தான். இதே காலப்பகுதிக்குரிய சோழர் கல்வெட்டுக்கள் கோப்பாய்க்கு நேரெதிரே அமைந்த மட்டுவில் என்னும் இடத்தைக் கைப்பற்றி அங்கிருந்த படைவீரர்களையும் யானைகளையும் சிறைப்பிடித்ததாகக் கூறுகின்றன.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயரிடம் தோல்வியடைந்த சங்கிலியன் கோப்பாயில் தங்கியிருந்து அங்கிருந்து தென்மராட்சியூடாக மந்துவிலில் உள்ள இன்னொரு கோட்டைக்குச் சென்றதாகக் கூறப்படுகி றது. யாழ்ப்பாண அரசு கால தென்னிந்திய வணிகம் பருத்தித்துறைக் கச் சாய், கோப்பாய் வழியாக நடந்ததாகப் பிற்கால இலக்கியங்கள் கூறுகின் றன. இவ்வாறு பல வழிகளில் கோப் பாய் சிறப்புற்றிருந்ததே அங்கு யாழ்ப் பாண அரசு காலக் கோட்டையொன்று அமைக்கப்படக் காரணமாகும். இத னால் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல் லூரை அடுத்து மக்கள் அதிகமாக வாழ்ந்த இடமாக கோப்பாய் இருந்தி ருக்கலாம். இதை இங்கு பரவலாகக் கிடைத்த யாழ்ப்பாண அரசு கால நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன.






# 12

## இயற்றாலையில் அழிவுண்டு காணப்படும் சங்கிலி மன்னன் காலக்கோட்டை

இவ்விடம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரிவில் மந்துவில் என்ற கிராமத்தின் மேற்கெல்லையில் அமைந்துள்ளது. இதன் அமைவிடம் மேற்கே தொண்டமானாறு கடல்நீரேரி என்பவை, வடக்கே முள்ளியான் பரவைக்கடல் ஊடாகப் பெருங்கடலுடன் தொடர்பு கொள்ளக்கூடிய மையத்தில் அமைந்திருப்பதனால் இவ்விடம் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகத் திகழக் காரணமாகும். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் அவ்வரசரோடு தொடர்புடைய முக்கிய இடங்களில் ஒன்றாக இக்கோட்டை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இயற்றாலையில் கோட்டை அரண் இருந்த இடங்களில் காணப்படும் கட்டடச் சிதைவுகள்

நல்லூரில் போத்துக்கேயருக்கும் சங்கிலிய மன்னன் படைக்கும் போர் நடந்தபோது சங்கிலிய மன்னன் அங்கிருந்து தப்பிக் கோப்பாயில் அடைக்கலம் பெற்றுப் பின்னர் அங்கிருந்து தப்பி மந்துவிலுக்குச் சென்றான் என வரலாறு கூறுகிறது. போத்துக்கேய ஆசிரியரான குவேரோ சுவாமிகள் பருத்தித்துறையில் வந்திறங்கிய தமது படைகள் புத்தூருக்கும் அச்சுவேலிக்


கும் இடையில் பல நாட்கள் யாழ்ப்பாண மன்னனது படைகளுடன் போரிட்டுப் பின்னர் தமது படையில் ஒரு பிரிவினர் தென்மராட்சி நோக்கி நகர்ந்ததாகக் கூறுகிறார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது யாழ்ப்பாண அரசுக் காலத்தில் மந்துவில் ஒரு கோட்டையாக அல்லது பாதுகாப்பு அரணாக இருந்திருக்கலாம் போல் தோன்றுகிறது. ஆயினும் அவற்றை உறுதிப்படுத்தும் முழுமையான கட்டடத் தொகுதிகள் எவையும் தற்போது இங்கு காணப்படவில்லை. ஆனால் மிகப்பெரிய கோட்டை போன்ற கட்டடம் ஒன்று இங்கிருந்திருக்கலாம் என்பதை தற்போது காடாக உள்ள பிரதேசத்தில் காணமுடிகிறது.

இம்மையம் ஏறக்குறைய 20 ஏக்கர் நிலப்பரப்பின் உயர்ந்த மேடாகக் காட்சியளிக்கின்றது. தற்போது இதன் ஒரு பகுதி காடாகவும், இன்னொரு பகுதி பயிர்ச்செய்கை நிலமாகவும் உள்ளது. பயிர்ச்செய்கைக்காக இவ்விடம் திருத்தப்பட்டபோது புராதன கட்டடங்களுக்கான செங்கற்கள் பொழிந்த முருகைக் கற்கள் பரந்தளவில் மண்ணில் புதையுண்டு காணப்பட்டுள்ளன. இவ்விடம் ஒரு கோட்டையின் அழிபாடாக இருக்கலாம் எனக் கருதி இவ்விடம் இயற்றாலைக் கோட்டை எனவும் இங்குள்ள ஆலயம் கோட்டைவாசல் பிள்ளையார் எனவும் கொள்ளப்படுகிறது. இங்கு காணப்படும் கட்டட சிதைபாடுகள் மிகப் பழைய கட்டடங்களின் எச்சங்கள் என்பதில் சந்தேகமில்லை. தற்போது காணப்படும் எச்சங்களை விடப் பல மடங்கு கட்டட எச்சங்கள் காலத்திற்குக் காலம் இங்கிருந்து பிற தேவைகளுக்காக எடுக்கப்பட்டுள்ளன. தற்போது இருக்கும் கோட்டைவாசல் பிள்ளையார் ஆலயத்திற்குத் தேவையான பல கற்கள் அங்கிருந்தும் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர் (1918) கூடத் தனது நூலில் தான் அங்கு சென்று பார்த்த போது அங்கிருந்து அதிக எண்ணிக்கையிலான கற்கள் பிற இடங்களுக்கு வண்டில் வண்டிலாக ஏற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டடச் சிதைவுகள் காணப்படும் மையத்தின் அமைவிடத்தையும் அதன் சுற்றாடலில் கிடைத்த தொல்லியற் சின்னங்களையும் நோக்கும் போது இவ்விடத்தின் வரலாற்று முக்கியத்துவம் யாழ்ப்பாண அரசு காலத்துடன் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. 1980 அளவில் கலாநிதி இரகுபதி அவர்கள் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்விலும், 1993 - 1994 காலப் பகுதியில் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்கள் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்விலும் இங்கு புராதன மட்பாண்டங்கள், இந்திய உரோம நாணயங்கள், அரேபிய உரோம மட்பாண்டங்கள், உரோம, சோழ மற்றும் பாண்டிய நாணயங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் அங்குள்ள மண் மேடு பிறதேவைகளுக்காக அகற்றப்பட்ட போது அங்குள்ள செங்கல் அத்தி

வாரத்தில் இருந்து மிக அலங்காரத் தன்மை கொண்ட மட்குடத்துடன் 700 உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




சிறுகாடாக இருக்கும் இயற்றாலை கோட்டைப்பகுதி

இச்சான்றுகள் இக்கிராமத்தைச் சுற்றியுள்ள வல்லிபுரம், அம்பனை, குடத்தனை, வரணி போன்ற புராதன தொல்லியல் மையங்களில் ஒன்றாக இவ்விடம் இருந்திருக்கலாம் என்பதை உறுதி செய்கிறது. தமிழகத்தில் உள்ள கி.பி 12ஆம் நூற்றாண்டுக்குரிய பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு, சோழப்படைகள் வடஇலங்கை மீது படையெடுத்து அங்குள்ள முக்கிய நகரங்களையும், துறைமுகங்களையும் கைப்பற்றி அங்கிருந்து யானைகளையும், போர் வீரர்களையும் சிறைபிடித்து வந்ததாகக் குறிப்பிடுகிறது. அவ்வாறு வெற்றி கொள்ளப்பட்ட இடங்களில் ஒன்றாக மட்டிவால் என்ற இடத்தையும் குறிப்பிடுகிறது. பேராசிரியர்களான நீலகண்டசாஸ்திரி, பரணவிதான போன்ற அறிஞர்கள் இந்த மட்டிவால் என்ற இடத்தை இயற்றாலைக் கோட்டை அமைந்த இடத்திற்கு தென்மேற்கே சில மைல் தூரத்தில் உள்ள மட்டுவில் கிராமமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இக்கோட்டை அமைந்த காட்டுப் பகுதியில் போர்த் தெய்வங்களுக்கு நாச்சிமார், துர்க்கை, அண்ணமார் போன்ற தெய்வங்களிற்கு அமைக்கப்பட்ட சிறிய ஆலயங்கள் இன்றும் காணப்படுகின்றன. இக்கிராமத்து மக்கள் இத்தெய்வங்கள் இக்கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்த மன்னர்களையும் போரில் ஈடுபட்ட வீரர்களையும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே அமைக்கப்பட்டதெனக் கருதுகின்றனர். இத்தெய்வங்கள் அமைந்துள்ள பீடங்களில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துக்கள் காணப்படுவதால் இவ்வாலயங்களின் தோற்றம் யாழ்ப்பாண அரசின் தோற்றத்திற்கு மிக முந்தியதாகக் காணப்படுகிறது.

பேராசிரியர் புஷ்பரட்ணம் ஈழத்தில் சங்க கால நடுகல் வழிபாட்டு மரபு என்ற தனது கட்டுரையில் இங்கிருக்கும் கட்டட அழிபாடுகளை யாழ்ப்பாண அரசுடனும், அவற்றின் ஆரம்பத் தோற்றத்தைக் கோட்டையுடனும் தொடர்புபடுத்துவது பொருத்தப்பாடானது என்பதற்குப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடுகிறார். இக்கட்டடங்களிற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களில் இங்கிருந்திருக்கக் கூடிய

கட்டடங்கள் சிலவாவது இற்றைக்கு 2000 வருடங்களிற்கு முற்பட்டதென உறுதியாகக் கூறமுடியும் என்கிறார். இக்காலத்தில் செங்கற்களைப் பயன்படுத்தி கோட்டைகள் அமைக்கும் மரபு தோன்றியதா என்பதைச் சமகால இலங்கை வரலாற்றின் பின்னணியில் வைத்து ஆராய்ந்து பார்க்கும் போது பொருத்தமாகத் தெரியவில்லை. மேலும் இக்கட்டடப் பகுதிகளிலும், அதன் சுற்றாடலிலும் கி.பி 4 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட உரோம நாணயங்களுடன், சோழ, பாண்டிய நாணயங்களும் இந்திய, அரேபிய, உரோம மட்பாண்ட ஓடுகளும் கிடைத்துள்ளன.



உரோம நாணயம் (இயற்றாலை)

பொதுவாக இவ்வரலாற்றுச் சான்றுகள் ஒரு வர்த்தக மையத்தில் அல்லது துறைமுகப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதைப் போல் கோட்டைகள் இருந்த இடங்களில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனால் இதன் ஆரம்பத் தோற்றம் ஒரு துறைமுகமாக இருந்ததெனக் கூறுவது பொருத்தமாக இருக்கும். அதற்கு ஏற்றதாக இதன் அமைவிடம் கடல் வழித் தொடர்பின் மையத்தில் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. ஆனால் துறைமுகங்கள் அமைந்திருந்த இடங்களில் காலப்போக்கில் கோட்டைகள் கட்டப்பட்டதற்கு ஈழத்திலும், தமிழகத்திலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இதற்கு ஈழத்தில் மாதோட்டம், திருகோணமலை போன்ற துறைமுகப் பகுதிகளை அண்டிப் பிற்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளை உதாரணத்திற்குக் குறிப்பிடலாம். இவ்வாறான கோட்டை யாழ்ப்பாண அரசு காலத்தில் இயற்றாலையிலும் கட்டப்பட்டிருந்ததா என்பது ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றாகும்.

# 13

## சுண்டிக்குளம் - மறக்கப்பட்டு வரும் ஒரு புராதன தொல்லியற் சுற்றுலா மையம்



இன்று நகரங்களாக இருக்கும் இடங்களெல்லாம் என்றும் நகரங்களாக இருந்த தில்லை. அதே போல் மக்கள் வாழ முடியாதென ஒதுக்கப் பட்ட இடங்களெல்லாம் வர லாற்றில் என்றுமே ஒதுக்கப் பட்ட இடங்களாக இருந்த தில்லை. காலமாற்றம், உள் நாட்டு யுத்தம், பொருளாதார மற்றும் தொழில்நுட்பத்துறை யில் ஏற்பட்ட வளர்ச்சி, மக் கள் இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தம் என்பவற்றால் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. இதற்கு ஒரு உதாரணமாகப் பச்சிலைப் பள்ளியில் உள்ள சுண் டிக்குளத்தை எடுத்துக்காட்டலாம்.

நீண்ட காலமாக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட இவ்விடம் கிளிநொச்சி நிர்வாகப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் அமைவிடம் வரலாற்றுப் பழமை வாய்ந்த இடங்களாகக் காணப்பட்டுள்ள கடற்கரை சார்ந்த உடுத்துறை, தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. சுண்டிக்குளத்தின் தென்பகுதி ஆனையிறவுக் கடல் நீரேரி

யின் முகத்துவாரத்தில் அமைந்திருப்பதால் மழைக்காலத்தில் இவ்விடம் சிறு தீவு போலப் பார்ப்போரைக் கவரும் வண்ணம் அழகாகக் காட்சியளிக்கும்.

இலங்கையின் ஏனைய கடற்கரைச் சுற்றுலாக் கிராமங்களுக்கு இல்லாத சிறப்பு சுண்டிக்குளத்திற்கு உண்டு. நீண்ட வெண்மையான, தூய்மையான கடற்கரைப் பரப்பு, உயர்ந்த மணல் மேடுகள், கடற்கலங்கள் தரிப்பதற்கேற்ற கற்பாறைகள் அற்ற ஆழமான கடல், சுத்தமான கடல் நீர், கடற்கரையோரத்திலும் உட்பகுதியிலும் நீண்ட நெடுந்தூரத்திற்குக் காணப்படும் தென்னந்தோப்பு என்பன இக்கிராமத்தின் சிறப்பம்சங்கள். இவ்விடத்தின் இயற்கையமைப்புக் காரணமாக இலங்கை அரசு இவ்விடத்தைச் சூழவுள்ள செழிப்பான காட்டுப் பிரதேசத்தைப் பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதுடன் சுண்டிக்குளத்துடன் இணைந்த ஆனையிறவுக் கடல் நீர் ஏரியை இறால் நன்னீர் வளர்ப்புப் பிரதேசமாகவும் மாற்றியுள்ளது. ஆயினும் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் இந்த அணைக்கட்டு உடைக்கப்பட்டதால் கடல் நீர் ஏரி நன்னீர் வளர்ப்புப் பிரதேசத்துடன் கலந்துள்ளது.



பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆனையிறவு ஊடான தரைவழி மற்றும் புகையிரதப் பாதை திறக்கப்பட முன்னர் குடாநாட்டையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் போக்குவரத்துப் பாதைகளாக மூன்று வழிகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்று கொழும்புத்துறை - கல்முனையூடான கடல் வழிப் பாதை ஆகும். கொழும்புத்துறையிலிருந்து கல்முனை, பூநகரி, இலுப்பைக் கடவை, மன்னார், அநுராதபுரம் ஊடாகக் கொழும்பு செல்வதற்கான கடல் தரைவழிப்பாதையாக இது இருந்ததால் தான் இவ்விடத்திற்குக் கொழும்புத்துறை என்ற பெயர் ஏற்பட்டது. 15ஆம் நூற்றாண்டு கோட்டை மன்னன் சப்புமால் குமரய்யாவின் படைகள் இப்பாதையூடாகவே யாழ்ப்பாணம் வந்ததாகக் குயில்விடு தூதுப்பிரபந்தம் என்ற சிங்கள இலக்கியம் கூறுகிறது. மற்றைய பாதை கச்சாய் - பூநகரி ஊடான கடல் வழிப்பாதையாகும். இப்பாதையூடாகத் தென்மராட்சி மக்கள் இலகுவாகப் பெருநிலப்பரப்பை அடைய முடிந்தது. இன்று பெருநிலப்பரப்பில் உள்ள

பூநகரி, நல்லூர், பல்லவராயன்கட்டு, தியாகம் போன்ற ஊர்களில் வாழும் மக்களின் உறவினர்கள் பலர் தென்மராட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்ப தற்கு இக்கடல் வழிப்பாதையே காரணமாக இருந்ததெனப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தனது ஆய்வில் குறிப்பிடுகிறார். வடமராட்சியையும் பெருநி லப்பரப்பையும் இணைத்த இன்னொரு முக்கிய பாதை வல்லிபுரம், அம் பனை, குடத்தனை, நாகர்கோயில், தாளையடி, மருதங்கேணி,வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் ஊடான தரை வழிப்பாதை ஆகும். இதில் சுண்டிக்குளம் ஒரு முக்கிய கேந்திர மையமாக இருந்திருக்கலாம் என் பதைத் தற்காலத்தில் குடியிருப்புக்கள் எதுவும் இல்லாத அப்பிரதேசத்தில் காணப்படும் புராதன ஆவுரஞ்சிக்கற்கள், சுமைதாங்கிகள், போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலக் காவலரண்கள், கடற்கரைக் கண்காணிப்பு மையங்கள், சிறிய வெளிச்சவீடுகளின் சிதைவுகள், பாதுகாப்பு அரண்களின் அழிபாடு கள், நிர்வாகக் கட்டடங்களின் அழிபாடுகள், பண்டைய ஆலயங்களின் அத்திவாரங்களின் மேல் பிற்காலத்தில் கட்டப்பட்ட இந்து, கிறிஸ்தவ ஆல யங்கள் என்பன எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் சுண்டிக்குளத்திற்கு இதன் அயல் பிரதேசங்களான வல்லிபு ரம், உடுத்துறை, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி போன்ற இடங் களைப் போல் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மை யான வரலாறு உண்டு என்பதில் ஐயமில்லை. இதை அண்மைக்காலத்தில் கலாநிதி இரகுபதி (1981) பேராசிரியர் புஸ்பரட்ணம் (1994) போன்றோர் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆய்வுகளின் போது பெறப்பட்ட கிறிஸ்தவ சகாப்த கால த்தை ஒட்டிய பலவகைப்பட்ட மட்பாண்டங்கள், புராதன கூரை ஓடுகள், பண்டைய கால இந்திய மற்றும் பிற்கால ஐரோப்பியர் நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. அத்துடன் புராதன இந்து ஆலயங்களின் அழிபாடுகளுடன் போத்துக்கே யர், ஒல்லாந்தர் கால கிறிஸ்தவ ஆலயங்களின் அழிபாடுகளும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் தாக்கத்தால் இலங் கையில் அதிகம் பாதிக்கப்பட்ட கடற்கரைக் கிராமங்களில் சுண்டிக்குளமும் ஒன்றாகும். இங்கிருந்த அழகான கடற்கரையும், செழிப்பு மிக்க தென்னந் தோப்புக்களும் இச் சுனாமியால் அலங்கோலப்படுத்தப்பட்டுப் பெறுமதி மிக்க பல தொல்லியல் எச்சங்களும் சிதைவடைந்தன. இது தொடர்பாக உலக கலாசார பாதுகாப்பு அமைப்பின் அனுசரணையுடன் பேராசிரியர் புஸ்பரட்ணம் மேற்கொண்ட ஆய்வின் போது வரலாற்றுப் பெறுமதியு டைய பூர்வீக தொல்லியற் சின்னங்கள் சிதைவடைந்திருந்தமையை எடுத் துக் காட்டியுள்ளார். அவற்றுட் பண்டைய மக்கள் பயன்படுத்திய மரக்கொட் டால் வடிவமைக்கப்பட்ட கிணறு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இலங்கை

யில் கல், சீமெந்து என்பன பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் கடற்கரையில் வாழ்ந்த மக்கள் நீரை எடுப்பதற்குக் கிணற்று வடிவில் சுடுமண்ணை அமைத்து அல்லது சுடுமண்ணுக்குப் பதிலாகப் பெரிய மரத்தை கிணற்று வடிவில் செதுக்கி அவற்றை மணற்பாங்கான இடங்களிற் புதைப்பதன் மூலம் அசுத்தம் நீரில் கலக்காது நீரைப் பெற்றனர். அவ்வாறு பயன்படுத்தப் பட்ட கிணறே சுனாமியின் போது கடற்கரைப் பகுதியிலிருந்து வெளிக் கிளம்பியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் இவ்வனர்த் தத்தால் மண்ணுட் புதையுண்டிருந்த வழிபாட்டுக் கட்டடங்களின் எச்சங்கள் பலவும் மண்ணின் மேற்படைக்கு எடுத்து வரப்பட்டமையும் தெரியவந் துள்ளது.

பிரித்தானியர் ஆட்சியோடு சுண்டிக்குளம் மக்கள் வாழாத கிராம மாக மாறினாலும் 1985 வரை அங்கு ஐந்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் நிரந் தரமாக வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது.

# 14

# நல்லூர் இராசதானிக் காலத்தை நினைவுபடுத்தும் சங்கிலியன் தோப்பு



தமிழ் மக்கள் நல்லூரைத் தமது அரசபாரம்பரியத்தின் மையமாகக் கருதும் மரபு நீண்ட காலமாகவிருந்து வருகிறது. இதற்கு மன்னர் ஆளுகைக்கு உட்பட்ட 450 ஆண்டு காலத் தலைநகராக இருந்தமையே காரணமாகும். ஆயினும் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தலை நகராக இருந்த தென்னிலங்கை இராச தானிகள் இன்றும் ஒரு தலைநகர்களாகக் காட்சியளிப்பது போல் நல்லூர் ஒரு இராசதானியாக இருந்ததற்குரிய பண்டைய அரச சின்னங்கள் எவையும் அக்காலத்திற்குரிய அதேவடிவத்தில் காணப்படவில்லை. இருப்பினும் ஒரு அரசதலைநகராக முன்பிருந்திருக்கலாம் என்பதற்குரிய சில சுவடுகள் இங்கே காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றே சங்கிலியன் தோரண வாசலாகும்.

முத்திரைச் சந்திக்கு வடக்கே சில யார் தூரத்தில் வலது பக்கமாக இத்தோரண வாசல் அமைந்துள்ளது. நீண்ட காலம் கவனிப்பாரற்ற நிலை யில் இருந்த இக்கட்டடத் தொகுதி தற்போது நல்லூரில் இருந்த இராசதானியை நினைவுபடுத்தும் ஒரு நினைவுச் சின்னமாகப் பாது காக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலக் கலைவிழா மலர்களையும் தமிழ் மன்னர் கால வரலாற்று நூல்களையும் அலங்கரித்த இந் நினைவுச் சின்னம் யார் காலத்திற்கட்டப்பட்ட தென்பதிற் கருத்து முரண்பாடுகள் உள்ளன. சிலர்

இதனைச் சங்கிலி மன்னனின் அரசமாளிகை வாசல் எனவும் வேறு சிலர் யாழ்ப்பாண மக்களின் அடிமை வாழ்வு நினைவுச் சின்னம் எனவும் கூறியுள்ள னர். இக்கட்டடமும் இதன் கலை மரபும் ஒல்லாந்தர் காலத்திற்குரியவை என்பதில் ஐயமில்லை. இதையொத்த கலைமரபுடைய கட்டடத் தொகுதிகள் பலவற்றை இன்றும் பறங்கித் தெருவில் உள்ள வீடுகளிற் காணலாம். இருந்தும் ஒல்லாந்தர் காலத்தில் நல்லூரில் இக்கட்டடம் அமைக்கப்பட்டமைக்கு இவர் களுக்கு முன்னோடியாகத் தமிழ் மன்னர் கால இராசதானி இவ்விடங்களில் இருந்தது தான் முக்கியகாரணம் எனலாம். இவற்றின் பின்னால் தமிழ் மன்னர்களில் வரலாற்றுச் சாதனைகள் மறைந்து கிடக்கின்றன என்பதை இவ்விடயங்களை ஆராய்வதன் மூலம் கண்டு கொள்ளலாம். இது பற்றி 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசஅதிகாரியொருவர் தமது நினைவுப் பதி வேட்டில் கூறியுள்ளதை இங்கு நினைவு கொள்ளலாம்.பருத்தித்துறை வீதி யிலே நல்லூரில் உள்ள யாழ்ப்பாண மன்னர் இருந்த இடத்தைத் தரிசிக்கச் சென் றேன். இது சங்கிலித் தோப்பு என்று கடைசியாக ஆட்சிபுரிந்த சங்கிலி மன்னன் பெயரால் அழைக்கப்பட்டது. இது இப்பொழுது கோயில் ஆதனம் ஆகும். இங்கே ஒரு பழைய வாசல் கட்டிடம் உண்டு. இது டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) காலக்கட்டிடம் ஆகும். இங்கே இது எப்படி எழுந்தது என்பதற்கு விளக்கம் யாதெனில் டச்சுக் கம்பனியார் நல்லூரிலே தங்கள் தலைமைக் காரியாலயத்தை ஒரு பொழுது நிறுவியிருக்கலாம் அல்லது இது கொம்மாந்தரின் கிராமிய வாசஸ்தலமாக அமைக்கப்பட் டிருக்கலாம் என்று குறிப்பிடலாம்.

இக்கூற்றில் இருந்து யாழ்ப்பாண அரசைவெற்றி கொண்ட போர்த்துக் கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும், தமிழ் மன்னர்களின் இராசதானி இருந்த இடத்திலே தங்கள் முக்கிய நிர்வாகமையங்களை அமைத்துக் கொண்டனர் என்பதும், இதற்கான கட்டடங்களை இராசதானி காலக் கட்டடங்களைக் கொண்டு தமது கலை மரபில் அமைத்துக் கொண்டனர் என்பதுவும் புலனாகி றது. இதனால் இன்று பாதுகாக்கப்பட்டுள்ள சங்கிலியன் தோப்புக் கல்வாசல் அன்னியர் ஆதிக்க நினைவுச்சின்னமாக இருப்பினும் அதன் பின்னால் நல்லூர் இராசதானி கால வரலாறும் இணைந்துள்ளதெனக் கூறலாம். இதனால் இவற்றைப் பாதுகாப்பது அவசியமாகிறது.

மேலும் இவர்கள் காலத்திற்குரியதெனக் கருதப்படும் கட்டட அழிபாடுகள் சில இக் கல்தோரண வாசலுக்கு சற்றுக் கிழக்கேயுள்ள சங்கிலித் தோப்பு மேட்டிலும், யமுனா ஏரியைச் சுற்றியும் காணப்படுகின்றன. இவை ஒல்லாந்தர் காலத்தில் இயங்கிய கல்விக் கூடத்தின் அழிபாடுகள் எனத் தொல்லியலாளர் கருதுகின்றனர். இன்று இவ்விடம் பல்வேறு தொழிற்சா லைகளையும், பல பிற்காலக் கட்டடங்க ளையும், முத்திரைச் சந்தியில் புரட்டஸ் தாந்து தேவாலயத்தையும் இவற்றில் கொண்டுள்ளது. அத்திவாரங்களின் கீழ்ப்பண்டைக்காலக் கட்டட அழிபாடுகள் இன்றும் காணப்படுவதாக கூறப்படு கின்றது. 1957 ஆம் ஆண்டில் இப்பகுதியில் ஆய்வினை மேற்கொண்ட சண்முகநாதன் என்பார். இக்கட்டட அழிபாடுகளிடையே சங்கிலி மன்னன் கால அரண்மனையின் அத்திவாரங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். இன்றும் இங்குள்ள குளத்தையும் வைரவர் கோவில் அத்திவாரங்களையும், செங்கட்டி களையும், ஓடுகளையும், மட்பாண்டங்களையும் அவதானிக்கலாம். இவற்றுட் பல தமிழ் மன்னன் காலத்திற்குரியவையாகும்.

15

## வரலாற்று நோக்கில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

யாழ்ப்பாண அரசு தொடர்பாக தோன்றிய தமிழ் இலக்கியங்கள் சோழர் வருகையுடன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதை சூசகமாக தெரிவிக்கின்றன. இவ் இலக்கியங்கள் தமிழகத்தில் சோழர் ஆட்சி மறைந்து ஏறத்தாழ 700 ஆண்டுகளின் பின்னர் தோன்றியிருந்தாலும் தமிழ் இராசதானி தோன்றிய வரலாற்றோடு சோழரின் வருகையை முன்னிலைப்படுத்தியிருப்பது இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் அவர்களின் வகிபாகத்தை புறக்கணித்துவிட முடியாதென்பதைக் காட்டுகின்றது. முதலியார் இராசநாயகம் கதிரமலையை வலிமேற்கில் உள்ள கந்தரோடை என அடையாளப்படுத்தி அதுவே நாகநாட்டில் தோன்றிய முதலாவது தமிழ் அரசு எனவும் அவ்வரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதற்கு சோழர் வருகையே காரணம் எனவும் குறிப்பிடுகின்றார். இவரின் கருத்தை ஆமோதிக்கும் சுவாமி ஞானப்பிரகாசர் இவ்வரசின் தோற்ற காலத்தை கி.பி. 8ஆம் நூற்றாண்டு என குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ இதே காலப்பகுதியில் கதிர மலையிலிருந்து ஆட்சி புரிந்த உக்கிரசிங்க மன்னன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை தோற்றுவித்த சோழ இளவரசியான மாருதப்புரவல்லியை பட்டத்தரசியாக்கி அக்கோயி

லின் வளர்ச்சிக்கு பல பணிகளை செய்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலையில் இடம்பெறும் பல வரலாற்றுச் சம்பவங்கள் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஐதீகங்களின் மாற்று வடிவமாக உள்ளன. இருப்பினும் யாழ்ப்பாணத்தின் தொன்மை பற்றி இவ்விரு நூல்களிலும் கூறப்படும் வரலாற்றுச் செய்திகளில் சில உண்மைகளும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இதற்கு வலிகாமத்தின் மேற்கு பகுதியில் கிடைத்து வரும் தொல்லியல் சான்றுகள் முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன. 1917 இல் கந்தரோடையிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட போல் பீரீஸ் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாகக் கந்தரோடையைக் குறிப்பிடுவது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதன் காரணமாகத்தான் பாளி நூல்களில் இலங்கையின் தனித்துவம் வாய்ந்த பிரதேசமாக யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தி கூறுகின்றன என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும். இது பாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும், வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனத்தில் நாகதீவ எனவும், தமிழகத்தில் எழுந்த இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் நாகநாடு எனவும் குறிப்பிடப்படுகின்றது. இங்கு அநுராதபுரத்திற்கு சமமான காலத்தில் இருந்து சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததை ஆனைக்கோட்டை, கந்தரோடையில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றன. இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் பாளி இலக்கியங்கள் இங்கு ஆட்சியில் இருந்த நாக அரசு பற்றிக் கூறுகின்றன. கி.பி 1ஆம் நூற்றாண்டுக் குரிய சாசனம் ஒன்று இங்கு ஆட்சி புரிந்த நாக மன்னன் தீபராஜா என்ற விருதுப் பெயருடன் ஆட்சி புரிந்ததாக கூறுகின்றது.

இவ்வாறு தனியொரு பிராந்தியமாக சிற்றரசின் ஆட்சிக்குட்பட்ட யாழ்ப்பாணத்தில் கி.பி 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஆகம மரபிற்கு உட்படாத வழிபாட்டு மரபுகளும் தமிழ்ப் பௌத்தமும் நிலவியதாக தெரிகின்றது. ஆயினும் கி.பி 6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கமும் பல்லவ அரசின் எழுச்சியும்

யாழ்ப்பாணத்தில் அதிலும் சிறப்பாக வட இலங்கையில் பல்லவர் கால அரசியல், சமய ஆதிக்கம் நிலவக் காரண மாகியது. அக்காலத்தில் இருந் தே ஆகம மரபில் கற்களைக் கொண்டு இந்து ஆலயங்கள் அமைக்கும் மரபு இலங்கையில் தோற்றம் பெற்றது. இதைத் தமிழகத்திற்கு அடுத்த நிலை யில் இலங்கையில் இருந்த திருக்கோணேஸ்வரமும், திருக் கேதீஸ்வரமும் நாயன்மார்க ளால் போற்றிப்பாடக் காரணமா கியது. இக்காலத்தில் இருந்து வட இலங்கை தமிழகப் படை யெடுப்பாளருக்கும் தென்னிலங்கையில் அரசுரிமையை இழந்த சிங்கள மன்னர்களிற்கும் பாதுகாப்பு வழங்கும் இடமாக மாறியது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் அரசுரிமையை இழந்த 'மாணா' என்ற சிங்கள மன்னன் அநுராதபுர மன்னனுக்கு பயந்து நாகதீபத்தில் அடைக்கலம் பெற்றான் என சூளவம்சம் கூறுகின்றது. இதே காலப்பகுதியில் பல்லவ மன்னன் நாக நாட்டு இளவரசியை மணந்தான் என பல்லவச் செப்பேடு கூறுகிறது. கி.பி 8ஆம் நூற்றாண்டில் அநுராதபுர அரசிற்கு எதிராக நாகதீபத்தில் இருந்து ஸ்ரீநாக என்ற தலைவன் படையெடுத்த செய்தி கூறப்படுகின்றது. கி.பி 835 இல் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் வடஇலங்கையில் வந்திறங்கிய போது இங்கிருந்த தமிழர்கள் அவனுடன் இணைந்து அநுராதபுர அரசை வெற்றி கொண்டதாக சூளவம்சம் கூறுகின்றது. இச்சம்பவங்கள் எல்லாம் நாகதீபம் அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உட்படாது தனியொரு ஆதிக்கம் நிறைந்த பிராந்தியமாக திகழ்ந்ததைக் காட்டுகின்றது.



இவ்வாறான காலப் பகுதியில் தான் சோழ மன்னன் முதலாம் பராந்தக சோழன் கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் வட இலங்கை மீது படையெடுத்தான். இப்படையெடுப்பு நாகதீபத்தில் நடந்ததாக கூறும்

சூளவம்சம் இப்படையெடுப்பால் அநுராதபுர அரசிற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறுகின்றது. அதேவேளை இப்படையெடுப்பை பெரும் வெற்றியாக சோழச் சாசனங்கள் கூறுகின்றன. இதற்காக முதலாம் பராந்தக சோழன் 'ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பர கேசரி வர்மன்' என்ற விருதுப் பெயரைப் பெற்றதாக அவன் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வரலாற்று அறிஞர்கள் சோழரது ஆதிக்கம் அநுராதபுரத்தில் ஏற்பட முன்னர் நாகதீபத்தில் ஏற்பட்டதையே கூறுகின்றன. இதற்கு சோழர் ஆட்சி தொடர்பான கோயில்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், அதிகளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்டுபிடிக்கப் பட்டதை ஆதாரமாகக் காட்டுகின்றனர். இங்கே கதிரமலை அரசின் வீழ்ச்சியை சோழர் வருகையுடன் தொடர்புபடுத்தும் தமிழ் இலக்கியங்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தோற்றத்தை சோழவம்சத்து அரசி மாருதப்புரவல்லியுடன் தொடர்புபடுத்துவதை நோக்கலாம். சோழர் ஆட்சியில் மாவிட்டபுரம் அமைந்த வலிகாமம் அவர்களின் அரசியல், பண்பாட்டு செல்வாக்கிற்கு உட்பட்டதாகவும், இத்துறைமுகம் அமைந்த இடத்தைச் சிலர் தற்காலத் திருவடிநிலை எனவும், வேறு சிலர் காங்கேசன்துறை எனவும் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இவ்விரு இடங்களின் அமைவிடம் கடல் வழித் தொடர்பிற்கு சாதகமாக தமிழகத்திற்கு அண்மையில் அமைந்திருந்தமை தமிழக பண்பாடு முதலில் இங்கு பரவுவதற்குச் சாதகமாக அமைந்தது. சோழ சாசனம் ஒன்று வட இலங்கையில் வலிகாமத்தை வெற்றி கொண்டு அங்கிருந்து பெருமளவு யானைகளை தமிழகம் கொண்டு சென்றதாகக் கூறுகின்றது. மாவிட்டபுரம் அமைந்த சுற்றாடலில் காணப்படும் வளவர்கோன் பள்ளம் காங்கேசன்துறை சோழக் கல்வெட்டுக்களில் அதிலும் குறிப்பாக பராந்தக சோழன் காலக்



கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்படும் பெயராகும். இவற்றை நோக்கும் போது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தோற்றத்தை சோழருடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரிகின்றது.

ஆயினும் கி.பி16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் யாழ்ப்பாணத்தில் 500ற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் ஒன்றாக இருக்கலாம். தற்போது நாம் காணும் கந்தசுவாமி கோயில் 1782 இல் குமாரசாமிக் குருக்களால் கட்டப்பட்டதாக வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இது ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் அழிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வாலயமும் மீளக் கட்டப்பட்டதைக் காட்டுகின்றது. ஆயினும் இதற்கு தொன்மையான வரலாறு இருக்கலாம் என்பதை நாகதீபம் பற்றிய வரலாற்றுச் சம்பவங்கள் தெரிவிக்கின்றன.

# 16

## யாழ்ப்பாணத்தில் அரச மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கலைவடிமாகக் கூறும் நகுலேஸ்வரர் ஆலயம்

உலக மரபுரிமைச் சின்னங்களின் வரிசையில் இணைத்துக் கொள்ள இலங்கை கலாசார அமைச்சினால் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட புராதன ஆலயங்களில் ஒன்றாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் காணப்படுகிறது. இதற்கு இன்றிருக்கும் ஆலய அமைப்போ அல்லது அதன் சிறந்த கலைவடிமோ காரணம் எனக் கூறமுடியாது. மாறாக ஆலயம் அமைந்த இடத்தின் வரலாறும், ஆலயத்தின் தோற்றம் பற்றிய வரலாற்று மரபுமே காரணமாகும். ஒரு தொல்லியல் அல்லது வரலாற்று மையத்தில் காணப்படும் பண்பாட்டுச் சின்னங்களை மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனப்படுத்தும் போது அவ்விடம் பண்டு தொட்டு சர்வதேச கடல்சார் வலையமைப்பில் அரசியல், வாணிப, கலாசார உறவுகளின் மையமாக இருக்கவேண்டும் என்பதும் கருத்தில் கொள்ளப்படுகிறது. அப்பின்னணியில் வைத்து நோக்கும் போது தற்போதைய நகுலேஸ்வரர் ஆலயமும் அதற்குப் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. போல்பீரிஸ் என்ற அறிஞர் கி.மு. 6 ஆம் நூற்றாண்டு விஜயன் இலங்கை வந்தபோது வடக்கில் இருந்த ஆலயங்களில் ஒன்றாக நகுலேஸ்வரத்தைக் குறிப்பிடு கிறார். விஜயன் வருகை இன்று ஒரு கட்டுக் கதையாகப் பார்க்கப் பட்டாலும் அவன் வருகை தொடர்பான காலத்துடன் இவ்வாலயம் இணைத்துக் கூறப்பட்டிருப்பது ஆலயத்தின் பழமைக்கு ஒரு

சான்றாகும். அவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஆலயம் அமைந்த பிராந்தியத்திற்கு உண்டு என்பதை நாம் இவ்விடத்தில் முதலில் குறிப்பிடவேண்டியுள்ளது.



குடாநாட்டின் முதலாவது குடியிருப்பு இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வலிகாமத்திலுள்ள கந்தரோடையில் ஏற்பட்டதாகும். இதைத் தொடர்ந்து குடாநாட்டில் ஏற்பட்ட 40 இற்கும் மேற்பட்ட குடியிருப்புக்களின் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடை விளங்கியதெனவும் தொல்லியலாளர் கூறுகின்றனர். இப்பிராந்தியத்தில் பெறப்பட்ட பலதரப்பட்ட தொல்லியற் சான்றுகள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியம் இந்திய, கிரேக்க, உரோம நாடுகளுடன் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டதை உறுதிசெய்கின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு அநுராதபுரத்திற்கு அடுத்ததாக புராதன நகரமயமாக்கம் நடந்த இடமாகக் கந்தரோடை அடையாளம் காணப்பட்டுள்ளது.


இலங்கை வரலாற்று இலக்கியங்களில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் இருந்த மூன்று துறைமுகங்களைப் பட்டினம் என்ற பெயரால் அழைக்கின்றன. அவை முறையே யாழ்ப்பாணம்), கோணகாமக பட்டன (திருகோணமலை மாவட்டம்), மஹாதொட்டபட்டன (மன்னார் மாவட்டம்) ஆகிய துறைமுகங்களாகும். அவற்றுள் வலிகாமத்தில் அமைந்திருந்தது. இது ஒரு துறைமுகநகரமாக இருந்திருக்கலாம் என்பதைச் சோழக் கல்வெட்டில் வரும் வல்லிகாமம் என்ற பெயரும், சூளவம்சத்தில் வரும் வலிகாமம் என்ற பெயரும் உறுதி செய்கின்றன. இவ்வரலாற்றுப் பின்னணிதான் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசு கி.பி.8ஆம் நூற்றாண்டில் தோன்றக் காரணமாகும். இந்த அரசில் ஆட்சி புரிந்த உக்கிரசிங்கன், மாருதப்புரவல்லி கதையுடன் இணைந்ததுதான் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் தோற்ற வரலாறாகும். அது பற்றி வரலாறு தமிழ் இலக்கியங்களில் பின்வருமாறு கூறப்படுகிறது.

'இலங்கையின் வடமுனையில் கீரிமலை என்றொரு மலையுண்டு: அது சமுத்திர தீரத்திலுள்ளது: அங்கே உவர்க் கல் மத்தியில் சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தம் ஒன்றுண்டு. உலகத்திலுள்ள எந்த தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமாயிருக்கின்றது. அதிலே நீ போய் நீராடிச் சிலகாலந் தங்கியிருந்தால் சுகமடைவாய் என்று சந்நியாசி ஒருவரால் ஆற்றுப்படுத்தப்பட்ட நிலையில் மாருதப்புரவல்லி கீரிமலைச் சாரலில் வந்திறங்கி, நகுல முனிவரிடம் ஆசீர்வாதம் பெற்று அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையையும் அத்தலத்தில் நீராடி தனக்கு கீரிமுகம் மாறிய செய்தியையும் அம்முனிவர் சொல்லக்கேட்டு, மிக்க மகிழ்வுடன் தீர்த்தமாடி சிவாலய தரிசனம் செய்து வந்தார். சில காலத்தில் அவருக்கிருந்து வந்த குன்ம வலியுந் தீர்ந்து குதிரை முகமும் மாறிற்று மாறவே மாருதப்புரவல்லி எழில் மிகு இளமை வடிவை மீண்டும் பெற்றாள்.

பேராசிரியர் பத்மநாதன் மேற்கூறப்பட்ட கதையை கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்கள் என்பவற்றின் தோற்றத்திற்கான புனைகதையெனக் கூறுகிறார். ஆனால் சோழர் வருகையோடு உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி கதை மறக்கப்பட்டாலும் அவர்களின் கதையோடு இணைத்துக் கூறப்பட்ட நகுலேஸ்வரர் ஆலயம் தற்காலம் வரை சோழர் வருகையுடன் இணைத்துப் பேசப்படுவது இதன் பழமைக்குச் சான்றாகும்.

இன்று நகுலேஸ்வரர் ஆலயத்தை தரிசிக்கச் செல்லும் ஒருவருக்கு ஆலயத்தின் அமைப்பு, அதன் கர்ப்பக்கிருகம், அந்தரளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், விமானம், கோபுரம் என்பனவும், அவற்றை அலங்கரிக்கும் செப்புத்திருமேனிகளும், திராவிடக் கலை மரபில் வடிவமைக்கப்பட்ட சிலைகளும், புடைப்புச் சிற்பங்களும் பிரமிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அவை பெரும்பாலும் தற்காலத்திற்குரிய கலைவடிங்களாகும். இருப்பினும் ஆலயத்திற்கு தெற்காக உள்ள மண்டபத்திலும், தீர்த்தக் குளத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள சிற்பங்கள் ஆலயத்தின் வரலாற்றிற்கும், அதன் தோற்றத்திற்கும் உயிர் கொடுப்பனவாக உள்ளன. இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த வரலாற்று நிகழ்வுக்கு உயிர் கொடுக்கும் வகையில் அங்குள்ள

சிற்பங்கள் மாருதப் புரவல்லி குதிரை முகத்துடன் இருந்த காட்சி, முனிவரிடம் வரம்பெறும் காட்சி குதிரைமுகம் நீங்கிய மாருதப்புரவல்லியின் தோற்றம், ஆட்சி அரியணையில் அவர் வீற்றிருக்கும் காட்சி என்பன ஆலயத்தின் வரலாற்று மரபுரிமையை நினைவுபடுத்துவனவாக உள்ளது. பொதுவாகப் பழமையான ஆலயங்கள் ஒவ்வொன்றிற்கும் சில ஐதீகங்கள் உண்டு. அதிலும் சில உண்மைகள் இருக்கலாம். வரலாற்றில் உண்மைகளைவிட ஐதீகங்களே பல நாட்டு வரலாற்றில் செல்வாக்குச் செலுத்துகிறது. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தோற்றத்திற்குள்ள கதையை ஐதீகமாகப் பார்த்தாலும் அது அமைந்துள்ள இடத்தின் பழமை பற்றிக் கூறும் நம்பகரமான தொல்லியற் சான்றுகள் ஆலயம் பற்றிய கதையை வரலாற்று உண்மையில் இருந்து ஒதுக்கிவிடமுடியாது என்பதற்கு கட்டியம் கூறுவதாக உள்ளது. அதனால்தான் ஆரியச்சக்கரவர்த்திகால வரலாற்றிலும், போத்துக்கேயர் கால வரலாற்றிலும் இவ்வாலயம் நினைவுபடுத்தக் காரணமாகும். யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் நகுலேச்சரம் அரச ஆதரவு பெற்ற தலமாக விளங்கியதோடு அவர் கள் தீர்த்தமாடி சிவாலய தரிசனம் செய்து பயனடைந்தமை பற்றியும் மயில்வாகனப் புலவரது குறிப்புக்களிலிருந்து அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்து அரசர்கள் தங்களுக்கு கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதியை ஆலய பரிபாலனத்திற்கு செலவிட்டனர் என்பதை போர்த்துக்கேயரின் ஆவணங்கள் மூலம் அறிய முடிகின்றது.



இன்று ஆலயம் அமைந்துள்ள கீரிமலைப்பிரதேசத்திற்கு செல்லும் ஒருவருக்கு ஆலயம் அமைந்த இடம், அதன் சுற்றாடலில் காணப்படும் நெருக்கமான குடியிருப்புக்களின் எச்சங்கள், சுற்றிவர அமைந்துள்ள ஆலயங்கள் ஐரோப்பியர் காலக்கட்டிடங்கள், கடற்பாதுகாப்பு அரண்கள், வெளிச்சவீடு, கடற்கரைச் சூழல் என்பன குடாநாட்டின் தொடக்க கால தொல்லியல் மையத்திற்குச் சென்று வருகின்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

17

# கந்தரோடை - புராதன தொல்லியல் மையங்களுள் ஒன்று



யாழ். மண்ணில் திராவிடர்களின் ஆரம்ப காலக் குடியிருப்புகளில் ஒன்றாகக் கந்தரோடை இனங்காணப் பட்டுள்ளது. இறந்தவர்களைப் பெரும் கற்கள் கொண்டு அடக்கம் செய்த ஒரு காலகட்டம் பெருங்கற் காலம் என்று திராவிடர் வரலாற்றில் அழைக்கப்படுகின்றது. இக்காலம் விஜயன் வருகைக்கு முற்பட்ட காலமாகும். இப்பெருங்கற்காலக் குடியிருப்புகள் யாழ். குடாநாட்டில் சுமார் 40 இடங்களிலிருந்ததாகத் தொல்லியியல் ஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் தலையாய ஒன்றாகக் கந்தரோடை குறிப்பிடப்படுகிறது.

சுமார் 3.2 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கிய இப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட போது தொன்மையான கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், நாணயங்கள், எலும்புகள், கட்டட அழிபாடுகள், சிற்பங்கள், சிலைகள், தமிழ் பிராக்மிப் பொறிப்புகள், மணி வகைகள், ஆபரணங்கள் முதலானவை கிடைக்கப் பெற்றன. இவை இப்பிரதேசத்தின் தொன்மையை உணர்த்தி நிற்கின்றன.

இச்சான்றுகள் இந்தியாவினது அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களுடனான தொடர்புகளை உணர்த்துகின்றன. கிரேக்க

உரோமப் பொருள்கள், நாணயங்கள், அந்நாடுகளுடனான நேரடி அல்லது தமிழகம் மூலமான தொடர்பு இருந்ததை உணர்த்துகின்றன.

1967 - 1970 களில் அமெரிக்கரான பென்சில் வேனியப் பல்கலைக்கழக ஆய்வாளர் இங்கு மேற்கொண்ட அகழ்வாராச்சியில் கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையானது இது எனக் குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரம், பொலனறுவை, திசமாறகம, மாதோட்டம் போன்ற இடங்களுடனும் தொடர்புகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கந்தரோடை பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இலங்கையின் புராதன பாளி நூல்களான தீபவம்ச, மகாவம்ச போன்றவற்றில் காணப்படாவிடினும் கி.பி.14 ஆம் நூற்றாண்டுக்குரிய நம்பொத்த என்னும் நூலில் கதிறு கொட என்று இது குறிப்பிடப்பட்டுள்ளது.

கதிறு கொடவைப் பௌத்த மதத்திற்குரிய மையமாகவே இவ் நம்பொத்த நூல் குறிப்பிடுகின்றது. எனினும் சிங்கள மக்களால் மட்டுமே இப் பௌத்த மதம் உள்வாங்கப்பட்டது என்பதனை விடச் சமகாலத்திலே தமிழர்களும் பௌத்த மதத்தினைக் கடைப்பிடித்து வந்தமையைத் தமிழகத்திலும் அவதானிக்க முடிகிறது. இங்கு கிடைத்த சான்றுகளும் தமிழ்ப்பௌத்தர்கள் இங்கு வாழ்ந்திருந்தனர் என்பதனையே வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது. இங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் பலவும் தமிழகத்தில் பெருங்கற்கால மற்றும் பௌத்த சின்னங்கள் காணப்பட்ட இடங்களது சின்னங்கள் ஒத்தனவாக உள்ளன. இப்பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளைப் பேசினர் என்பதனை இங்கு கிடைத்த மட்பாண்டச்சாசனங்கள் உறுதி செய்கின்றன.


மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்திருந்த திராவிட மக்கள் நிலையான குடியிருப்புகள், நிரந்தரப் பொருளாதாரம், பண்டமாற்று வர்த்தகம், நகரமயமாக்கம் என்பவற்றைக் கொண்டு வாழ்ந்த சான்றாதாரங்கள் கிடைக்கப்பெற்றன.

இவர்களது வழி வந்தவர்களாலேயே பௌத்த மதம் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும், பௌத்தக் கலை மரபுகள் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. தமிழர்கள் பௌத்தராக இருந்தனர் என்பதை இங்கு கிடைக்கப்பெற்ற தகஹபத - குண குணி, முதலான தமிழ்ப் பிராக்மிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த வகையிலே இன்று பௌத்த மதத்திற்குரிய ஸ்தூபிகளுடன் காட்சி தருகின்ற இம்மையமானது இலங்கைத் தமிழர்களது வரலாற்றில் முக்கிய பங்கினை வகிக்கின்றது எனலாம்.

# 18

## யாழ்ப்பாணத்தில் பூர்வீக மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகள்



தற்போது யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் உள்ள பாவனைப் பொருட்கள் எல்லாம் பிற்காலத்தில் தற்செயலாகத் தோன்றியவை யல்ல அவற்றுள் பலவற்றுக்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு. ஆனால் அவை தொழில்நுட்ப வளர்ச்சி, நாகரிக மாற்றம், பிற பண்பாட்டுச் செல்வாக்கு என்பவற்றுக்கு ஏற்ப பல மாற்றங்களைப் பெற்றுத் தற்காலத்தில் புதிய தோற்றத்துடன் காணப்படுகின்றன. அதற்கு உதாரணமாக யாழ்ப்பாணத்தில் பண்டைய கால மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணறுகளைக் குறிப்பிடலாம்.

1971 ஆம் ஆண்டு பென்சில்வேனிய பல்கலைக்கழக அரும் பொருள் ஆய்வாளரான விமலா பேக்லே கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் மூலம் ஏறக்குறைய இற்றைக்கு 3000 ஆண்டில் இருந்து இங்கு மனித வரலாறு தொடங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்குடியேற்றத்தை முதலில் ஏற்படுத்தியவர்கள் பெருங் கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய திராவிடர் என்பது அவரது கருத்தாகும். இவர்கள் பயன்படுத்திய பலவகைப்பட்ட மட்பாண்டங்கள், கைவினைப் பொருட்கள், கல்மணிகள்,

இரும்புக் கருவிகள் சமகாலத் தமிழக பெரும்கற்காலப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய பொருட்களை ஒத்துக்காணப்பட்டதால் அங்கிருந்தே இம் மக்கள் முதலில் இங்கு வந்து குடியேறி இருக்கவேண்டும் என்பது தொல்லியலாளர்களின் பொதுவான கருத்தாகும். இம்மக்களே சமகாலத்திலும் சற்றுப்பிற்பட்ட காலத்திலும் யாழ்ப்பாணத்தில் ஏனைய இடங்களிலும் குடியேறி இருந்தனர்.


அண்மையில் யாழ்ப்பாணத்தில் புராதன குடியிருப்புகள் பற்றி ஆய்வு செய்த கலாநிதி இரகுபதி ஏறத்தாழ 40 இற்கு மேற்பட்ட இடங்களில் இரு பூர்வீகக் குடியிருப்புகள் இருந்ததற்கான தொல்லியல் ஆதாரங்களை வெளிப்படுத்தியுள்ளார். இக்குடியிருப்புக்கள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய மணற்பாங்கான இடங்களிலேயே முதலில் ஏற்பட்டிருந்ததனைக் காண முடிகிறது. இதற்கு அதிக தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தாது அழிக்கக்கூடிய பற்றைக்காடுகள், இலகுவாக நீரைப்பெறக்கூடிய மண் தன்மை, கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், கடல், தரை வழிப்போக்குவரத்துக்குச் சாதகமான தரைத்தோற்றம் என்பவற்றுக்கு இவ்விடங்கள் சாதகமாக இருந்தமை முக்கிய காரணிகள் ஆகும்.

இதனால் மணற்பாங்கான கடற்கரைப்பகுதியில் குடியிருப்புக்களை ஏற்படுத்தி மக்கள் முதலில் அவ்விடங்களில் கிடைத்த மூலவளங்களுக்கு ஏற்பத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அவற்றுள் அவர்களது நாளாந்த வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக இருந்த நீரைப் பெறுவதற்கு அவர்கள் கையாண்ட தொழில்நுட்பம் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

பொதுவாக வைரமான மண்ணுள்ள இடங்களில் நீரைப் பெறுவதற்கு கூடிய தொழில்நுட்பமும் அதிக மனித வலுவும் நீண்டகாலமும் தேவை. ஆனால் அவ்வாறான தொழில்நுட்பம் அன்றைய காலகட்டத்தில் இலங்கையில் வளரவில்லை. தென்னிலங்கையில் இயற்கையாகத் தோன்றிய ஆறுகள், குளங்கள் நீரைப் பெறுவதற்குச் சாதகமாக இருந்தமையால் மக்கள் அவ்விடங்களை அண்டிக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்த வாய்ப்புக்கள் இல்லை. இதனால் தான் சிறிய தொழில்நுட்பத்துடன் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர்.

அவ்வாறு குடியிருப்புக்களை ஏற்படுத்திய மக்கள் தமக்கு வேண்டிய நீரைப் மணற்பாங்கான இடங்களில் சிறிய குழியை அல்லது கிணற்றை ஏற்படுத்தி இலகுவாகப் பெற்றுக்கொண்டனர். ஆயினும் அக்கிணறுகள்

அல்லது குழிகள் காற்றாலும் மழையாலும் இலகுவாக மறைந்து போகும் தன்மையைக் கொண்டிருந்தன.



இதனால் அவற்றை அழியாது பாதுகாக்கப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதன் விளைவே சுட்ட மண்ணைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சுடுமண் கிணறுகள் தோன்றக் காரணமாகின. இதை யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்கள் பயன்படுத்திய முதலாவது தொழில்நுட்பங்களில் ஒன்று எனவும் எடுத்துக்கொள்ளலாம்.


ஆயினும் இது யாழ்ப்பாண மக்கள் கண்டுபிடித்த தொழில்நுட்பம் அன்று. இந்தியாவில் சிந்துவெளி நாகரிக காலம் தொட்டு இதன் பயன்பாடு இருந்துள்ளது. கங்கைப் பிரதேசத்தில் கி.மு.4ஆம் நூற்றாண்டில் இது 2 ஆவது நகர மயமாக்கத்துடன் அதிக அளவில் பயன்படுத்தியதற்கு ஆதாரம் உண்டு. தமிழகத்தில் அரிக்க மேட்டு பெருங்கற்கா மக்கள் சாயவேரைப் பதனிடவும், குடிநீரைப் பெறவும் கழிவு நீரைத் தேக்கி வைக்கவும் இவ்வகையான சுடுமண் கிணறுகளைப் பயன்படுத்தினர். இதன் பயன்பாடு ஆதிகாலத்தில் மட்டுமன்றி மிக அண்மைக்காலம் வரை தமிழகத்திலும், இலங்கையிலும் பயன்பாட்டில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. குறிப்பாகப் பெருநிலப்பரப்பில் ஒல்லாந்தர் ஆட்சியில் சாயவேர் பதனிடலும் நல்ல நீரைப் பெறுவதற்கும் இச்சுடுமண் கிணறுகள் அமைக்கப்பட்டன.

ஆயினும் 2004 ஆம் ஆண்டு வேலணையில் சாட்டி என்ற இடத்தில் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழகத் தொல்லியல் மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட புராதன சுடுமண் கிணறு இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கடற்கரையை அண்டிய இவ்விடம் முன்பு மணல்மேடுகளாக இருந்ததாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். ஆனால் நாம் ஆய்வு மேற்கொண்ட காலத்தில் அவ்விடம் கடலுடன் தொடர்புடைய சிறிய பள்ளமாகவே இருந்தது. இருப்பினும் முன்னொரு காலத்தில் இவ்விடங்களில் மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் மண்மேடுகள் சிறிய பற்றைக்காடுகளுடன் காணப்பட்டன. அவ்வாறான மேடு ஒன்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது ஏறத்தாழ 12 அடி ஆழத்

தில் பண்டைய மக்கள் பயன்படுத்திய சுடுமண் கிணற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது.

இச்சுடுமண் கிணறு வட்ட வடிவில் சிறு சிறு துண்டுகளாகச் சுடப்பட்ட களிமண் தட்டுக்களைக் கொண்டு வட்டவடிவில் கட்டப்பட்டிருந்தது. எமது ஆய்வின் போது 3 அடுக்குகளில் கட்டப்பட்ட சுடு மண் கிணற்றின் பாகங்களைக் கண்டறிய முடிந்தது. ஆயினும் சுடுமண் கிணற்றின் முழுப்பாகத்தையும் கண்டறிய முடியாத அளவுக்கு நீர் பெருக்கெடுத்து அதன் சுற்றுப்புறங்கள் நீருள் வீழ்ந்து மூழ்கியதால் அதன் எஞ்சிய பாகங்களைக் கண்டறிய முடியவில்லை. இதனால் கிடைத்த பாகங்களைக் கொண்டு சுடுமண் கிணறு எவ்வாறு இருந்ததென அடையாளம் காண முடிந்தது.


சுடுமண் காணப்பட்ட இடத்தின் மேற்படையிலிருந்து 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட முத்திரை, நாணயம், ரோமர்கால மட்பாண்ட ஓடுகள் பிராமிய எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்திருப்பதால் இச்சுடுமண் கிணறு இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக்கூறலாம்.



இவ்வகையான சுடுமண் கிணறுகள் சாட்டியில் மட்டுமன்றி வல்லிபுரம், பொன்னா வெளி போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இச்சுடுமண் கிணறுகளுக்குப் பதிலாகப் பெரிய மரங்களை வட்டமாக அறுத்து அதன் உட்பாகங்களைக் கோதியதன் பின்னர் அவற்றை மணற்பாங்கான இடங்களில் புதைத்து, கழிவுப் பொருட்கள், மண் என்பன உள்ளே செல்லாதவாறு தடுத்து மக்கள் நீரைப் பெற்றனர். அவை கொட்டுக்கிணறுகள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. அவற்றின் பயன்பாடு இன்றும் சில இடங்களில் காணப்படுகின்றன. இதன் இன்னொரு கட்ட வளர்ச்சியே கல்லினாலும் பின்னர் சீமெந்தினாலும் கட்டப்பட்ட கிணறுகளாகும்.

# 19

## ஐரோப்பியரது நினைவுச் சின்னங்களுள் ஒன்றாக அமைந்துள்ள ஊர்காவற்றுறைக் கோட்டை



வட இலங்கையிலே ஐரோப்பியரால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் ஊர்காவற்றுறை ஹாமன்கில் கோட்டையும் முக்கிய மானது. இக்கோட்டையானது பல் வேறுபட்ட நோக்கங்களுக்காக ஊர் காவற்றுறை காரைநகரினைப் பிரிக் கும் ஆழமான கடலின் மத்தியிலே போத்துக்கேயர்களால் கட்டப்பட்ட தாகும். எனினும் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர்கள் கைப்பற்றி ஆட்சி செய்த போது இக்கோட்டையினை மாற்றியமைத்து தற்போதைய வடிவத்தி னையும், பெயரினையும் வழங்கினர் எனக்கூறப்படுகின்றது. ஐரோப்பிய ரது ஆதிக்கத்தின் சின்னமாகக் காணப்படுகின்ற இக்கோட்டையானது ஊர் காவற்றுறையின் அமைவிடம் காரணமாக அமைக்கப்பட்டதனைக் காண லாம். இக்கோட்டையானது முதன் முதலில் அமிநால் - டெமன்சிஸ் என்ற போர்த்துக்கேய தளபதியால் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

பாளி இலக்கியங்களிலே (சூளவம்சத்தில்) ஊராத்தொட்ட அல் லது ஸ்ராத்தொட எனக்குறிப்பிடப்படுகின்ற இவ் ஊர்காவற்றுறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் காணப்படுகின்றது. புராதன காலம் தொட்டே இலங்கையின் வடபுலத்தில் சிறப்பிடம் பெற்ற துறைமுகமாக

ஊர்காவற்றுறை விளங்கியமையைக் காணலாம். சிறப்பாக கி.பி 10 ஆம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்த சோழ அரசன் தன் படைகளை ஊர்காவற்றுறையூடாக நகர்த்தியிருந்தமையும் அவனது கல்வெட்டு ஒன்று இக்கோட்டையிலிருந்து மீட்கப்பட்டமையும் இப்பிரதேசத்தினுடைய வர லாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றன. நயினாதீவுக் கல் வெட்டும் இவ்விடத்தின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்பிரதேசமானது இந்தியாவின் வேதாரணியம் துறைமுகப் பிரதேசத்திலி ருந்து கிட்டத்தட்ட 40 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளதுடன் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேற்கு நுழைவாயிலையும் அரண் செய்கிறது. இப்பிரதேசத் தினது முக்கியத்துவம் உணரப்பட்டே 17 ஆம் நூற்றாண்டில் போத்துக்கேய ரால் இங்கு கோட்டை அமைக்கப்பட்டது. இக்கடற்கோட்டையில் இங்கு சோழர் காலத்திற்குரிய கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டமையானது சோழர் ஆதிக்கம் இங்கு நிலவியமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. இக்கல் வெட்டைத் தாங்கிய கற்றூண்கள் இக்கோட்டையின் வடகிழக்குப் பக்கப் பதிவின் அடித்தளத்திலிருந்து 11 அடி உயரத்திலே வைத்துக் கட்டப்பட்டி ருந்தது. இதுவே இலங்கை தென்னிந்தியத் தொடர்பில் ஊர்காவற்றுறை வகித்த முக்கிய பங்கினையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இக்கோட்டையானது ஊர்கர்வற்றுறை காரைநகரினைப் பிரிக்கும் ஆழமான கடலின் மத்தியிலே அமைக்கப்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகிறது. இக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், இந்தியா வுக்குமிடையே செல்லும் கப்பல்களை அவதானிப்பதே முக்கிய நோக்கா கக் காணப்பட்டது. சோழர்கள் ஊர்காவற்றுறை காரைதீவுக் கடற்பரப்பைத் தங்கள் முக்கிய கடற்படைத் தளமாகக் கொண்டிருந்ததைப் போல் போர்த் துக்கேயர்களும் இக்கடற்பரப்பை முக்கிய காவற்தளமாகக் கொண்டிருந்த னர். இதன் கேந்திர முக்கியத்துவம் பற்றிப் பார்க்கும் போது ஊர்காவற்றுறை யும், களபூமித் துறைமுகமும் வங்காள விரிகுடா மூலம் இலங்கையின் மேற் குக் கரையின் ஊடாக யாழ்ப்பாணத்தினூடாகவும், பூநகரியூடாகவும் மன் னாரூடாகவும் கடல்வழி செல்லும் போது முக்கிய நுழைவாயிலின் இருபுற மும் அமைந்திருந்தமையால் முக்கியம் பெற்றிருந்தது. இதன் மூலம் யாழ். குடா நாட்டினை அரசு புரிபவர்கள் தீவுப்பகுதியூடான கடல்வழிப்பாதை யைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் பொருட்டு இவ்வாறு கோட் டையை அமைத்துக் காவல் புரியலாயினர். சோழராட்சிக்கும், ஐரோப்பிய ராட்சிக்கும் முன்பே மாந்தை, கந்தரோடை, ஊர்காவற்றுறை போன்ற இடங் கள் தமிழர்களின் குடியிருப்புக்களைக் கொண்ட பகுதிகளாக இருந்துள்ளன. இவ்விடத்தினுடைய முக்கியத்துவம் கருதியே இக்கோட்டை இங்கு அமைக்கப்பட்டதனைக் காணலாம். அதாவது யாழ்.குடாநாட்டின் வெளித் தொடர்புகளைக் கட்டுப்படுத்தக்கூடிய கேந்திர ஸ்தானமொன்றில் இது அன்று அமைந்திருந்தது எனலாம்.

1658 இல் ஒல்லாந்தர்கள் இக்கோட்டையைக் கைப்பற்றி இதனைத் திருத்தி அமைப்பதற்காக டொன் ஸ்ரீவன் பூதத்தம்பி முதலியார் என்பவரை அதற்குப் பொறுப்பாக நியமித்தார். இதனாலேயே பூதத்தம்பி கட்டுவித்த கோட்டை எனப்பெயர் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. பன்றியின் கால் வடிவத்திலே இக்கோட்டை அமைந்துள்ளமையால் ஹாமான்கீல் என ஒல் லாந்தர்கள் தமது மொழியிலே அழைத்தனர். இப்பெயரே இன்றும் நிலைத் துள்ளது. மேலும் இக்கோட்டையானது மிகப்பழமை வாய்ந்த வியாவில் ஐயனார் கோவில், களபூமி பாலாவோடை அம்மன் கோவில், மணற்காடு மாரியம்மன் கோவில் ஆகியவற்றை உடைத்த கற்களைக் கொண்டே கட் டப்பட்டதாக யாழ்ப்பாண வைபவகௌமுகியும், காரைநகர் மான்மியமும் குறிப்பிடுகின்றன. இதனை ஈழத்துச் சிதம்பரம் கோவிலின் பரம்பரப் பண்டி தரான சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்களது ஏட்டுப் பிரதியிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் இக்கோட்டையின் அமைப்புப் பற்றிப் பார்க்கும் போது போத்துக்கேயருக்குப் பின்பு ஒல்லாந்தரால் முருகைக்கற்களினால் செப்ப னிடப்பட்டிருந்தமையைக் காணலாம். மிகவும் நேர்த்தியும், உறுதியும் மிக்க னவாக சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. எதிர்க்கோணக்கோடு 80 மீற்ற ருக்கு மேற்படாது வலிமையான முருகைக் கற்பாறைகளால் கட்டப்பட்டி ருந்தது. சுவர்களும் கதவுகளும் அமைக்கப்பட்டு அதற்கு மேல் சீமெந்துக் கோபுரமும் மணியும் இருக்கும் வகையிலே அமைக்கப்பட்டிருந்தது மட்டு மன்றி உயரமான சுவர்களையும் கொண்டிருந்தது. மேலும் ஸ்ரெயிசர் தமது வரைபுகளிலிருந்து மூன்று மீற்றருக்கு மேலான உயரமான வளைவுள்ள வா சல் கதவுடனும் சிறிய இறங்குதுறையுடனும் இக்கோட்டை அமைந்திருந் தமை தெரிகிறது. துவக்குகள் இணைக்கப்பட்ட காவலரண் கோபுரங்கள் அடங்கலாக எல்லாமாக எட்டுப்பக்கங்களை இது உள்ளடக்கி நிற்கின்றது.


இக்கடற்கோட்டை ஆங்கிலேயர்கள் காலத்தில் வடஇலங்கையின் கடற்பிரதேசத்தில் கள்ளக்கடத்தல், வர்த்தகச் செயற்பாடுகளைக் கட்டுப்ப டுத்தி மேற்பார்வை செய்யும் நிலையமாகவும் பிரதான சுங்கப்பரிசோதனை நிலையமாகவும் விளங்கியது. மேலும் சிறைக்கூடமாகவும் மருத்துவநிலை யமாகவும் பாவிக்கப்பட்டது. நாட்டிற்குள் கடல் மூலம் வரும் எதிரிகளை வடபகுதியில் இக்கோட்டை எதிர்த்து நின்றது. 2 ஆம் உலக யுத்தத்தில் கூட இது கடல் ஆகாய மீட்பு நிலையமாகப்பயன்பட்டிருந்தது. மிக அண்மைக் காலத்தில் கூட இந்தியாவிலிருந்து குடியேறுபவர்களைப் பொதுச் சுகாதாரத் திற்கென்று தனிமைப்படுத்தும் நிலையமாக இக்கோட்டை விளங்கிய மையைக்காணலாம்.

இக்கோட்டை பற்றி ஒல்லாந்தப் படைகளுடன் வருகை தந்த போல் டேயஸ் பாதிரியார் தனது இலங்கை பற்றி விபரிப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'நாம் யாழ்.நகர் நோக்கிச் சென்ற பொழுது எல்லாப் போத்துக்கேயப் படைகளும் யாழ்.கோட்டையினுள் புகுந்துகொண்டன. இவர்கள் தமது கண்காணிப்பிலிருந்தே கோட்டையைக் காவல் செய்ய அருகேயிருந்த ஒரு தீவினுள் அரண் ஒன்றை அமைத்திருந்தனர். நாம் எந்தவொரு உதவியும் வரவிடாது யாழ்.கோட்டையைக் கைப்பற்றுவதாக இருப்பின் மேற்கூறிய தீவு அரணைக் கைப்பற்ற வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இக்கோட்டையானது அந்தோனி அமிறல்டே மொன் செஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்திற்குள் நுழைவதற்கான சாவி என்றும் அழைக்கப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறுபட்ட வகையிலும் முக்கிய இடத்தினை வகித்த ஒரு மையப் பிரதேசத்திலே அமைந்த இக்கோட்டையானது ஐரோப்பியரது ஆதிக்கத்தின் நினைவுச் சின்னமாக இது விளங்குகின்றது. இது சிலகாலம் தொல்லியல் திணைக்களத்தினர் பொறுப்பில் இருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பகுதியாகவும் விளங்கியது. இன்று வரை முக்கியமான மையத்திலே அமைந்துள்ள இக்ஹூமென்கீல் கோட்டையானது பாதுகாப்பையும் சுங்கப்பரிசோதனையின் கட்டுப்பாட்டினையும் கட்டுப்படுத்தி வந்துள்ளமையைக் காணலாம். இன்றும் கடற்படையினர் வசம் காணப்படுகின்ற இக்கோட்டைப் பிரதேசமானது யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை உறுதி செய்து நிற்பதனை அவதானிக்க முடிகிறது.

# 20

## வரலாற்று சுற்றுலாவிற்கான முக்கிய தொல்லியல் மையம் வல்லிபுரம்



மணற்காட்டில் சுனாமியால் சிதைவுண்ட ஒல்லாந்தர் கால கிறிஸ்தவ ஆலயம்

யாழ்ப்பாணத்தின் பூர்வீக வரலாறு பற்றிய ஆய்வில் வல்லிபுரம் என்றும் ஒரு தொடக்கப் புள்ளியாகவே இருந்து வருகிறது.கந்தரோடையை அடுத்து இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான,தொடர்ச்சியான பாரம்பரிய வரலாற்றை எடுத்தியம்பும் பலவகைப்பட்ட தொல்லியற் சின்னங்கள் இவ்வட்டாரத்தில் கிடைத்துள்ளன.இதனால்தான் சுவாமி ஞானப்பிரகாசரும்,முதலியார் இராசநாயகமும் பிற்கால அறிஞர்களும் கதிரமலைக்குப் பின்னர் வட இலங்கையில் தோன்றிய தமிழரசின் தலைநகரான சிங்கை நகரை வல்லிபுரமாக இருக்கலாம் என்பதற்கு இங்கு பரவலாக கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சான்றுகளை ஆதாரம் காட்டினர்.

இவ்விடம் யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடகிழக்குக் கரையில் பருத்தித்துறை,ஆளியவளை,மருதங்கேணி வீதியில் பருத்தித்துறை

யிலிருந்து மூன்றரை மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வல்லிபுரம் தென்கிழக்கே அமைந்துள்ள நாகர் கோவில்,அம்பனை,மணற்காடு செம்பியன் பற்று, குடத்தனை,குடாரப்பு முதலிய கிராமங்களுக்கும்,வடகிழக்கே கற்கோவளமும், வடமேற்கே புலோலியும்,துன்னாலை முதலான கிராமங்களுக்கும் ஒரு தலைமைக் குடியிருப்பு மையமாக ஆதியில் இருந்திருக்கலாம் என்பதை அண்மைக் காலத்தின் இக்கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பை வல்லிபுரம் பண்டைய காலத்தில் பெற்றமைக்கு இதன் அமைவிடம் தென்னிந்தியாவுடன் இலகுவாகக் கடல் வழித் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய மையத்தில் கடற்கரை சார்ந்த ஒரு கிராமமாக இருப்பது முக்கிய காரணமாக இருக்கலாம். இதன் மூலம் தென்னிந்தியாவிற் காலத்திற்குக்காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டலைகள் சமகாலத்தில் வல்லிபுரத்திலும்,வடமராட்சியின் ஏனைய வட்டாரங்களிலும் பரவ வாய்ப்பாகியது. அவற்றை உறுதிப்படுத்தும் பல தரப்பட்ட தொல்லியற் சான்றுகள் இப்பிராந்தியத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதை இவ்விடத்தில் நோக்கலாம்.

யாழ்ப்பாண மக்களுக்கு இலங்கையின் ஏனைய பிரதேசங்களை ஒத்த தொன்மையான,தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை முதன்முதலாக வெளியுலகிற்குத் தெரிய வைத்த பெருமை போல் பீரிஸ் என்ற அறிஞருக்கு உரியதாகும்.அவர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கந்தரோடையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த சான்றுகளை ஆதாரங் காட்டிப் பண்டைய காலத்தில் அநுராதபுர இராசதானிக்கு அடுத்த தலைநகர் யாழ்ப்பாணமாக இருக்கலாம் என்ற கருத்தை முன் வைத்தார். அவற்றை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்கள் கந்தரோடையிலும் தொடர்ச்சியாக வடமராட்சியிலும் உண்டு என்பதை எடுத்துக்காட்டினார்.

இவரைத் தொடர்ந்து வல்லிபுரத்திலும், வடமராட்சியின் ஏனைய வட்டாரங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வட்டாரங்களின் மக்கள் பரவலாக வாழ்ந்து வந்ததையும், அம் மக்கள் இந்தியாவுடனும்



சுனாமியால் வல்லிபுரக் கடற்கரைப் பகுதியில் வெளி வந்த பூர்வீக குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள்

மேற்காசியாவுடனும் கடல் வழித்தொடர்புகளை கொண்டிருந்தனர் என்பதையும் உறுதிப்படுத்தும் பல வகைத் தொல்லியற் சின்னங்களைக் கண்டுபிடித்தனர். அவற்றுள் வல்லிபுரத்தில் பூர்வீக குடியிருப்புக்கள் இருந்ததற்கான தொல்லியற் சின்னங்களாக உரோம அராபிய இந்திய மட்பாண்டங்கள், கி.மு 3ஆம் நூற்றாண்டுக்குரிய வடஇந்தியாவினதும் சங்ககாலத்தினதும் நாணயங்கள் கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோம நாணயங்களும் கிடைக்கப்பெற்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் தென்னிந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் ஆட்சி புரிந்த சாதவாகன மற்றும் இஷ்வாகு வம்சங்களுடன் இலங்கை நெருங்கிய வர்த்தக, பண்பாட்டு உறவுகளைக் கொண்டிருந்ததை இருநாட்டு வரலாற்று மூலங்களும் தெரிவிக்கின்றன. ஆயினும் அவ்வுறவு தொடர்பான நம்பத்தகுந்த தொல்லியற் சான்றுகள் இலங்கையின் ஏனைய வட்டாரங்களை விட வல்லிபுரத்திலேயே அதிகமாகக் கிடைத்துள்ளன. அவற்றுட் கி.பி 3 ஆம் நூற்றாண்டில் ஆந்திராவில் ஆட்சி புரிந்த சாதவான மன்னர் கௌதம புத்திரசாதகரணி என்ற பெயரில் தமிழில் வெளியிட்ட நாணயங்கள் அதிகளவில் வல்லிபுரத்தில் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

1971 ஆம் ஆண்டு தொடங்கிய யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் தனது ஆய்வுப் பணியின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக வல்லிபுரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது. அப்போது அக்கழகத்தை முன்னெடுத்த பேராசிரியர் க.இந்திரபாலா, பேராசிரியர் வி.சிவசாமி மற்றும் ஆ.சிவநேசச் செல்வன் ஆகியோர் "சிங்கை நகரைத் தேடி" என்ற பொருளில் பல ஆய்வுகளை வல்லிபுரத்தில் மேற்கொண்டு அது பற்றிய தொடர் கட்டுரைகளைப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தனர். அந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட தொல்லியற் சான்றுகள் இலங்கையின் மனித நாகரிக வரலாற்றுக்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாட்டை உருவாக்கிய திராவிட மக்கள் இங்கும் வாழ்ந்திருக்கலாம் என்பதை வெளிப்படுத்தின.

1981 இல் அவ்விடங்களில் கள ஆய்வை மேற்கொண்ட கலாநிதி பொ.இரகுபதி இங்கு கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் ஆதாரங்களை எடுத்துக்காட்டினார்.

இலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் வல்லிபுரம் முக்கிய இடத்தைப் பெறுவதற்கு 1936 ஆம் ஆண்டு வல்லிபுர விஸ்ணு ஆலயத்தினுடைய அத்திவாரத்தினுள்ளே கிடைத்த பொற்சாசனம் முக்கிய ஒரு காரணமாகும். இதுவே இலங்கையில் கிடைத்த முதலாவது பொற்சாசனம் என்ற பெருமையும் இதற்கு உண்டு. 3.6 அங்குல நீளமும், 1 அங்குல அகலமுமுடைய இச்சாசனம் கி.பி 3ஆம் நூற்றாண்டுக்குரிய பிராக்மி எழுத்தில் எழு

தப்பட்டுள்ளது. அச்சாசனம் வல்லிபுரத்தில் உள்ள படகர என்ற இடத்தில் அமைச்சன் ஒருவனால் கட்டப்பட்ட பௌத்த விகாரை பற்றிக் கூறுகிறது.இச் சாசனம் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பிராமிச் சாசன அமைப்பில் இருந்து பல வகையிலும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இதன் சாசன எழுத்து சமகாலத்தில் ஆந்திராவில் அமராவதி என்ற இடத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவத்தை அப்படியே ஒத்துள்ளது.

மேலும் இலங்கைச் சாசனங்கள் பலவும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டபோது இச் சாசன மொழியாகத் தமிழும் பிராகிருதமும் கலந்து காணப்படுகின்றன. இச் சாசனம் காணப்பட்ட இடத்தில் இருந்தே புத்தர் சிலையும் பௌத்த ஆலயமும் இருந்ததற்கான அழிபாடுகளும் காணப்பட்டன. இங்கு கிடைத்த புத்தர் சிலையைவடிவமைப்பதற்குப் பயன்படுத்திய பளிங்குக் கல்லும் அதன் கலைமரபும் சம கால ஆந்திரக் கலைமரபை ஒத்திருப்பதால் இச்சிலை ஆந்திராவில் இருந்து தமிழ்நாடு ஊடாக வல்லிபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

ஈழத்து முதல் பாளி இலக்கியமான மகாவம்சம் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தது பற்றிக் கூறுகின்றது. சம காலப் பிராக்மிக் கல்வெட்டுகளும் இக்கூற்றை உறுதிப்படுத்துகின்றன. இதனால் இச் சாசனமும் இங்கு கிடைத்த புத்தர் சிலையும் தமிழ்ப் பௌத்தத்திற்குரிய ஆதாரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார். ஆயினும் இங்கு கிடைத்த பல்வேறு தொல்லியற் சான்றுகள் வல்லிபுரம் பண்டைய காலத்தில் கடல் சார் வாணிபத்தின் ஒரு முக்கிய வர்த்தக மையமாக இருந்ததை உறுதிப்படுத்துவதால் இங்கிருந்த பௌத்த ஆலயம் பிற நாட்டு வணிகர்களின் வழிபாட்டுக்குரிய தலமாக இருந்திருக்கலாம் எனும் கருத்தும் நிலவுகிறது.

வல்லிபுரத்தில் அதிலும் குறிப்பாக வடமராட்சியின் கடற்கரை சார்ந்த கிராமங்களில் பரவலாகக் காணப்படும் தொல்லியற் சின்னங்கள் அப்பிராந்தியத்தின் பழைமையை எடுத்துக் காட்டுகின்றன. இருப்பினும் இவ்விடங்கள் கந்தரோடை ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டது போன்று விரிவான தொல்லியல்அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்படாமைமுக்கிய குறைபாடாக உள்ளது.


அவ்வாறான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படுமாயின் இது வரை வெளிச்சத்திற்கு வராத புதிய ஆதாரங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதற்கு உதாரணமாக 2005ஆம் ஆண்டு நிகழ்ந்த சுனாமி அனர்த்த விளைவால் வெளியே தெரிய வந்த தொல்லியல் மையங்களைக்

குறிப்பிடலாம். இச் சுனாமி அனர்த்தத்தால் வடமராட்சியின் கடற்கரை நக ரங்கள் கட்டடங்கள் மட்டும் அழியவில்லை. கூடவே முக்கிய தொல்லியல் மையங்களும் அழிவுண்டன. இது தொடர்பான மதிப்பீடு உலக கலாசார தொல்லியல் மையப் பாதுகாப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் புஸ்பரட்ணத்தினால் யாழ்ப்பாணத்தில் இருந்து திரியாயை வரையான கடற்கரை கிராமங்களில் தொல்லியல் மையங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பான மதிப்பீட்டின் போது மேற்கொள்ளப்பட்டன. அங்கே வல்லிபு ரத்திற்கு வடகிழக்கே மணற்காட்டுப் பகுதியில் இற்றைக்கு 2000 ஆண்டுக ளுக்கு முற்பட்ட புராதன குடியிருப்புகளுக்குரிய தொல்லியல் மைய மொன்று அதன் புராதன தொல்லியல் சின்னங்களுடன் வெளிவந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேபோல் மணற்காட்டில் பெரும்பாலும் மண்ணால் முடுண்டு போன ஒல்லந்தர் காலத்திற்குரியதாகக் கருதப்படும் கிறிஸ்தவ ஆலய மொன்று சுனாமியின் தாக்கத்தால் முழுமையாக வெளியே தெரியுமாறு வெளிக்கிளம்பியுள்ளமையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் வாதாரங்கள் வடமராட்சியில் திட்டமிட்ட அகழ்வுகள் மேற்கொள்ளப்பட் டால் அப்பிரதேசவரலாறு மேலும் துலக்கம் பெறும் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.

21

# கச்சாய் துறைமுகம் வெளிச்சத்திற்கு வராத ஒரு தொல்லியல் மையம்



யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய செகராச சேகரமாலையிலும், பிற்கால இலக்கியங்களிலும் முதன்மைப் படுத்திக் கூறப்படும் முக்கிய துறைமுகங்களாக மாதோட்டம், கொழும்புத்துறை, காங்கேசன் துறை, பருத்தித்துறை, கச்சாய் என்பன காணப்படுகின்றன.

தென்மராட்சியில் கிளாலிக் கடநீரேரிக்கு மேற்காகக் கச்சாய்ப் பிர தேசத்தில் அமைந்துள்ள இக்கச்சாய்த் துறைமுகம் ஏறத்தாழ ஐந்து ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. ஆரம்பகாலத்தில் முனியன்கட்டு, கோட் டைப்பிட்டி என அழைக்கப்பட்டிருந்தது. இக்கச்சாய்த் துறைமுகத்தின் தொ டர்ச்சியான வரலாறு இலக்கியங்களில் கூறப்படாவிட்டாலும் அவ்வப் போது இப்பிராந்தியத்தில் கிடைத்த தொல்லியற் சின்னங்களும் இலக்கியங் களில் இடம்பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்புக்களும் இதன் பழைமையைத் தெரிந்து கொள்ள ஓரளவு உதவுகின்றன.

யாழ்ப்பாண இராச்சிய காலத்திலே கச்சாய் ஒரு முக்கிய துறைமுக மாகவும் கடற்படை மையமாகவும் சுங்கவரிகளைப் பெறுமிடமாகவும் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்

திலும் இவ்வாறே இருந்துள்ளது. ஆனால் பிரித்தானியரது வருகையோடு ஏற்பட்ட ஆனையிறவுப் பாதையூடான தரைவழிப் பாதையும், ஆழ்கடல் போக்குவரத்தும் நீராவிக்கப்பல்களது பாவனையும் இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தினை இழக்கச் செய்திருந்தன. மேலும் கேரதீவு ஊடாகப் பெரு நிலப்பரப்புடன் ஏற்பட்ட போக்குவரத்துத் தொடர்பும் இதன் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு குறைவடையச்செய்தது.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிய வீதிகள் திறக்கப்படும் வரை குடாநாட்டையும், பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் முக்கிய கடல் வழிப் போக்குவரத்தின் மையமாகக் கச்சாயும் இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.


இத்துறைமுகமானது உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக மையமாக விளங்கியது. தென்னிந்திய வணிகர்களதும் உள்நாட்டு வணிகர்களதும் இலகு துறைமுகமாக இது விளங்கியது. குறிப்பாக மலையாளக் கரையிலும் சோழமண்டலக் கரையிலும் உள்ள பட்டினங்களோடு நெருங்கிய தொடர்பினை இது கொண்டிருந்தது.

யாழ்ப்பாண அரசு காலத்திலே இத்துறையூடான போக்குவரத்து வணிகத்தில் ஈடுபடுவோர் வர்த்தக வரிகள் செலுத்த வேண்டி இருந்தது. அவ்வாறு வரி செலுத்துவோருக்கே அரசனது முத்திரை வழங்கப்பட்டது.

ஒவ்வொரு துறைமுகங்களிலும் சுங்கவரி அறவிடப்பட்டிருந்தமை அக்காலத்திற்குரிய நடைமுறையாகும். ஆரம்பகாலம் முதலே முக்கியமானதொரு கடற்றுறைமுகமாகவும் சுங்கத்துறைமுகமாகவும் கப்பம், வரி அறவீட்டு மையமாகவும் இது விளங்கியமையால் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த வெளிநாட்டவர்கள் பலரும் தொடர்புபடவுள்ள குடியேற்றங்களை ஏற்படுத்தவும் சாத்தியமாக விளங்கியிருந்தது. இதனையே இங்கு கலிங்கர், மலையாளத்தார், கன்னார் குடியேறிய இடமாகப் பண்டைய நூல்கள் குறிப்பிடுகின்றன. கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் இஸ்லாமியர் யாழ்ப்பாணத்தில் உசன், மிருசுவில், முகமாலை ஆகிய இடங்களில் முதலில் குடியேறியமைக்குக் கச்சாய்த் துறைமுகத்திற்கும் கேரளத்திற்கும் இடையிலான வணிகத் தொடர்பே முக்கிய காரணமாகும்.

இத்துறைமுகப் பிரதேசமானது பல இடங்களுடனும் தொடர்புபட்ட வகையிலே அமைந்துள்ளது. இக்குறிப்பிட்ட பிரதேசத்திலே இன்றும் காணப்படுகின்ற பண்டைய கால எச்சங்கள் இதனுடைய முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இத்துறைமுகத்திலே சங்கு முத்து தொழிலில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதன் போது கடலிலிருந்து அம்மி, குழவி போன்ற பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இங்கு இன்றும் காணப்படுகின்ற பண்டைய கால எச்சங்கள் யாழ்ப்பாண அரசிற்குரியவையாக

இனங்காணப்பட்டுள்ளன. எனினும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய புராதான மையங்களான பூநகரி, கந்தரோடை, ஆனைக்கோட்டை என்பவற்றுடன் தொடர்புபட்டதாகவும் வரணி உசன் என்பவற்றுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுவதானது கச்சாய்த்துறைமுகத்தினுடைய வரலாற்று முக்கியத்துவத்தினையே வெளிப்படுத்தி நிற்கின்றது. இத்துறைமுகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலுங் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உரோம நாணயங்கள், கண்ணாடிப் பொருட்கள், உரோம சீன மட்பாண்ட எச்சங்கள் யாவும் இத்துறையூடான வர்த்தக நடவடிக்கைகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன.



யாழ்ப்பாண அரசு கால நாணயம் (கச்சாய்)

யாழ்ப்பாண அரசுக் காலத்திலே வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து இத்துறைமுகத்தினூடாகவே வணிகப் பொருட்கள் தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதே போன்ற கச்சாய்த்துறைமுகத்தில் வந்திறங்கிய யானைகள் ஆனைப்பந்தி போன்ற இடங்களில் கட்டி வைக்கப்பட்டுப் பின்னர் காங்கேசன்துறை துறைமுகமூடாக ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண அரசுக் காலத்தில் இத்துறைமுகம் பல வகையிலும் சிறப்பிடம் பெற்றிருக்கலாம் என்பதற்கு இப்பிரதேசத்தில் அதிக அளவில் பேராசிரியர் புஸ்பரட்ணம் கண்டுபிடித்த சமகாலத் தமிழக யாழ்ப்பாண அரசுகால நாணயங்களே சிறந்த சான்றாக அமைகின்றன.

இப்பிரதேசத்திலே முத்திரை நாணயங்களை விட ஐரோப்பியர் ஆட்சிக்காலம் வரையான பல்வேறு தொல்பொருட் சான்றுகளும் கிடைத்துள்ளன. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் இத்துறைமுகமூடாக இடம் பெற்றிருந்ததன் பின்னணியிலே 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செகராசசேகர மாலையானது அரசன் பல யானைகளைத் திறையாகப் பெற்றிருந்ததனைக் குறிப்பிடுகின்றன. இதனோடு பூநகரி, மாதோட்டம் முதலிய இடங்களிலும் அரசன் பிடிப்பித்த யானைகள் யாழ்ப்பாணத்திற்குக் கச்சாய்த் துறைமுகத்தினூடாகவே கொண்டு வரப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. போர்த்துக்கேயர்களும் இந்நடைமுறையினையே கடைப்பிடித்திருந்தனர்.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இத்துறைமுகத்தினை அண்டியதாக கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டதுடன் காவற்கோட்டை

ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. இது முருகைக் கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருப்பதுடன் குகை அமைப்புடையதாகவும் விளங்கியிருந் தது. எனினும் இன்று இதனுடைய இடிபாடுகள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. இக்கோட்டை பற்றிய மேலதிக தகவல்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கோட்டைப்பிட்டி என்று அழைக்கப்படுகின்ற இவ்விடத் திலே இதன் அழிபாடுகளுடன் கலங்கரை விளக்கினது அழிபாடுகளும் இணைந்து காணப்படுகின்றன. இவை இங்கு புராதன காலம் தொட்டு துறை முகம் காணப்பட்டதனையே வெளிப்படுத்துவனவாக உள்ளன.

இக்கச்சாய்த் துறைமுகம் தனித்துவமாக விளங்கியமையை இதனு டைய இடப்பெயரும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அதாவது கச்சு + ஆய் = கச்சாய் என வருகின்றது. இதில் கச்சு என்றால் பொதி எனவும் ஆய் எனின் ஆராய்தல் என்றும் பொருள்படும். பொதிகளை ஆராய்ந்து அனுப்புகின்ற கடற்கரைத் துறைமுகமாக இது விளங்கியதை இப்பெயர் விளக்கி நிற்கின் றது.


மேலும் கச்சாய்த் துறைமுகத்தினை அண்டியதாக நிழல்வாடியடி எனும் இடம்காணப்படுவதும் அதனுடன் பூநகரிப் பிரதேசத்திலுள்ள வாடி யடி எனும் இடத்தினுடைய தொடர்புகளும் இத்துறைமுகத்தினது தேவை கருதியே அமைக்கப்பட்ட வாடி வீடுகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

கச்சாயின் இட அமைப்பை மேலாய்வு அடிப்படையிலே ஆய்வு செய்த பேராசிரியர் ரகுபதி அவர்கள் இதுவும் புராதன தொல்லியற்தலமா கக் காணப்படுவதாகக் குறிப்பிட்டமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

இன்று மீன்பிடித்துறையாகக் காணப்படுகின்ற இத்துறையானது துறைமுகம் என்ற பெயருடன் இன்றுவரை வழங்கப்பட்டு வருகின்றமையா னது புராதன காலந் தொட்டு இத்துறைமுகம் பெற்றிருந்த செல்வாக்கி னையே வெளிப்படுத்துவதாக உள் எது. இத்துறைமுகத்தினை மையமாகக் கொண்டு தொல்லியலாய்வுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்திலே இதனு டைய வரலாறு மேலும் துலக்கம் பெறும் என்பது திண்ணமாகும்.

# 22

## யாழ்ப்பாண நகரின் தென்புறத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டை



இலங்கைத் தீவில் காலடி பதித்திருந்த இரண்டாவது ஐரோப்பிய இனத்தவர்களாக ஒல்லாந்தர் காணப்படுகின்றனர். இத்தீவில் முதன் முதலாக அந்நிய நாடொன்றின் கடல் வளத்தொழில்நுட்பம், நீர்ப்போக்குவரத்துத் தொழில்நுட்பம், நீர், நிலத்தைப் பிரதான தளமாகக் கொண்ட படைக்கட்டுமானம், விசாலமான சுரங்கப்பாதை அமைப்புடனான கோட்டை, அரண்களுடன் கூடிய பாதுகாப்புத் தொழில்நுட்பம் ஆகியன உருவாக்கப்பட்ட காலமாக ஒல்லாந்தர் காலம் அமைந்தது.

1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர்கள் படிப்படியாகக் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினர். 1619 இல் யாழ்ப்பாண இராச்சியம் அவர்களால் கைப்பற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தில் ஒருகோட்டை அவர்களால் அமைக்கப்பட்டது.

1658 இல் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றினர். போர்த்துக்கேயரது கோட்டைகள் அமைக்கப்

பட்ட இடங்களில் ஒல்லாந்தர் தமது கோட்டைகளை நிறுவினர். தமது தாயகச் சூழ்நிலை காரணமாக நில, நீர் அரண்களை ஒருங்கே கொண்டு சிறப்பாகக் கோட்டைகளை அமைப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட கோட்டைகளுள் யாழ்ப்பாணக் கோட்டை மிகவும் பிரபல்யமானதாகும்.

யாழ்ப்பாணக் கோட்டை அந்நியர் ஆதிக்க நினைவுச் சின்னமாக இன்று பார்க்கப்பட்டாலும் அதன் தோற்றப் பின்னணியில் ஈழத்தமிழர் வரலாறும் உள்ளடங்கி இருப்பதைக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து இரு கற்றூண்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று முதலாம் இராசேந்திர சோழன் காலத்துக்கு உரியதாகும். இதனைவிட இக் கோட்டைப்பகுதியில் உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களை போல் பீரிஸ் என்பவரின் யாழ்ப்பாண இராச்சியம் எனும் நூலில் காணலாம். மேலும் யாழ்ப்பாணக் கோட்டையின் புறச்சுவர்களிலும் வேறு சில இடங்களிலும் பழைய காலக் கட்டடப் பகுதிகள் உள்ளனவெனக் கூறப்படுகின்றது. இன்றைய கோட்டையின் ஆரம்பம் தமிழரசர் காலத்தில் ஏற்பட்டிருக்க முடியும் என்றும் பின்பு இவ்விடத்தில் போர்த்துக்கேயரால் ஒரு கோட்டை அமைக்கப்பட்டு அது பின்பு ஒல்லாந்தரால் திருத்திக் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்றும் கருத முடிகிறது. நல்லூரைத் தலைமையாகக் கொண்டு ஒரு தொன்மை மிகுந்த இராச்சியம் நிலைத்திருந்த போது யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள இடமும் முக்கியத்துவமுடைய பிரதேசமாக விளங்கி இருக்க வாய்ப்புண்டு எனலாம்.

யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த சுற்றாடற்பகுதி, அதன் அமைவிடம் அதனுடன் கடல்வழியாகத் தொடர்புகொள்ளக்கூடிய பண்ணைத்துறை, அராலித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களும் கோட்டைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாணயங்களும் எமக்கு இவ்விடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.


மண்கும்பான், சாட்டி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிக்குடிகள் பற்றிய சான்றுகளும் உரோம நாணயம், உரோம மட்பாண்டம் என்பனவும் கிரேக்க, உரோம அரேபிய சீனத் தொடர்புகள் இப்பிரதேசங்களுடன் நிலவி இருந்தமைக்குச் சான்றுகளாக கொள்ளப்படத்தக்கவை ஆகும்.

தென் இந்தியாவில் எழுச்சி பெற்ற சோழரது எழுச்சிக் காலத்திலும் கூட இப்பிரதேசம் சோழரது கட்டுப்பாட்டில் இருந்திருக்க முடியும். மேற்கில் ஏற்பட்ட அரேபிய வர்த்தக எழுச்சியைத் தடுக்கவும் இலங்கையின் பெருநி

லப்பரப்பில் ஏற்பட்ட சிங்களவரது ஆட்சியைத் தடுத்து நிறுத்தவும் தென்கிழக்காசிய நாடுகளுடன் தமது வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தவும் சோழர்கள் இப்பிரதேசத்தைக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். இதை நிறுவுவதற்குச் சோழர்கால நாணயங்களும் சோழரை நினைவுபடுத்தும் செம்பியன்பற்று, வளவர்கோன்பள்ளம், கங்கை கொண்டான் போன்ற இடப்பெயர்களும் கமால் வீதி, நாரந்தனை ஆகிய இடங்களில் கிடைத்த இவர்கள் காலச் சிற்பங்களும் இவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

போர்த்துக்கேயர் நல்லூர் ஆலயத்தை அழித்து இவ்விடத்தில் கோட்டை அமைத்ததாகக் கூறப்படுகின்றது. இக்கோட்டையின் மேற்குப் புறத்தில் பழைமையான கட்டடங்களுக்குரிய கற்றூண்கள் காணப்படுகின்றன. இவை 10 ஆம் நூற்றாண்டுக்குரிய கிரந்த எழுத்துக்கள் கொண்டவை. கோட்டையின் வடக்காக உள்ள நிலப்பகுதி இன்று 'ஐநூற்றுவர் வளைவு' என்று அழைக்கப்படுகின்றது. இங்கு ஐநூற்றுவர் வளைவு என்பது சோழர் காலத்துக்குரிய முக்கிய வணிககணம் ஆகும். ஆகவே தற்போது கோட்டை அமைந்துள்ள இடம் சோழர் காலத்தில் முக்கியத்துவமுடைய இடமாக இருந்திருக்கும் என்று கருதமுடிகிறது. ஆரியச் சக்கரவர்த்தி ஒருவனுடைய வெற்றி பற்றிக்கூறும் கோட்டகம் சாசனத்தில் வரும் 'பொங்கொலி நீர் சிங்கை நகர்' எனும் கூற்று இம்மன்னர் கால அரண்மனை அல்லது கட்டடம் ஒன்று கடற்கரையில் இருந்தமையை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இதுவும் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண அரசர்கட்கும் இடையிலான போராட்டம் கொழும்புத்துறைக்கும் பண்ணைத் துறைக்கும் இடையில் நடைபெற்றதாகக் கிடைக்கும் தகவல்களும் எமக்கு இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இங்கு இருந்த இராட்சியங்களில் ஒன்றாகிய யாழ்ப்பாண இராச்சியம் 1621 இல் இவர்கள் வசம் வந்தது. போர்த்துக்கேயத் தளபதி பிலிப் டி ஒலிவேரா நல்லூர் கந்தசுவாமி கோயிலைக் அத்திவாரத்துடன் இடித்து அழித்து நல்லூரில் இருந்து ஆட்சி நடாத்தியபோது தென்னிந்திய உதவியுடன் சில தமிழ்த்தளபதிகள் இவனுடைய ஆட்சிக்கு எதிராகக் காலத்துக்குக் காலம் படையெடுப்புகளை மேற்கொண்டனர். அவை தோல்வியில் முடிந்தன. ஆயினும் போரியல் ரீதியில் நல்லூர் ஒரு பாதுகாப்பான



இடம் அல்ல என்று டி ஒலிவேரா உணர்ந்தான். பாதுகாப்பான ஒரு இடத்தில் கோட்டை அமைப்பதற்கு அவன் முடிவு செய்த போது முஸ்லிம் வர்த்த கர்கள் வர்த்தகசாலை அமைத்த இவ்விடமே அவனால் கவரப்பட்டது.

போர்த்துக்கேயரால் முதலில் இங்கு அமைக்கப்பட்ட இக்கோட்டை சதுர வடிவில் காணப்பட்டது. இது பின்னர் ஒல்லாந்தரால் ஐங் கோண வடிவில் மாற்றியமைக்கப்பட்டது. இக்கோட்டையின் மிக முக்கிய கட்டடக் கலைச்சிறப்பு வாய்ந்த அமைப்பு அதன் மதில் சுவரே ஆகும். இது உச்சியில் சராசரியாக 20 அடியாகவும் அடிப்பகுதியில் சில இடங்களில் 40 அடியாகவுடம் விரிந்து அமைந்திருக்கிறது. மதில் வெளிப்புறம் ஏறத்தாழ 6 அடி அகலத்தில் முருகைக் கற்களால் கட்டப்பட்டது.


இந்தக் கோட்டை ஐந்து கொத்தளங்களைக் கொண்டிருந்தது. இவற் றில் இரண்டு கொத்தளங்கள் கடல் நீரேரிப் பக்கம் கடலிலிருந்து வரும் ஆபத்தை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும் ஏனைய மூன்றும் நிலப்பக்கம் இருந்துவரும் ஆபத்தை எதிர்நோக்கக்கூடிய வகையில் நிலப்பக்கம் பார்த்த படியும் அமைந்திருந்தன. இந்த மதில்கள் ஒவ்வொன்றினதும் நீளம் 554 அடிகள் ஆகும். கொத்தளம் ஐந்தையும் உள்ளடக்கியதாக உட்கோட்டை யின் சுற்றளவு 6300 அடிகள் ஆகும். இவ்வாறு ஒல்லாந்தரின் இக்கோட்டை கொத்தள அமைப்பு பாதுகாப்பு நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டிருந்தது.

உட்கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் அகழி மிகுந்த தொழில்நுட்பத்திறன் கொண்ட அமைப்பாகும். அகழியின் வெளி மதிற் சாய்வுச்சுவரோடு தாழ் கொத்தளங்கள் நான்கு அமைந்துள்ளன. இவை கோட்டை மதில் ஒவ்வொன்றின் நிலப்பகுதிக்கும் நேர் எதிரில் அகழிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை வடிவில் சிறியவையாக இருப்பதால் சின்னக்கோட்டைகள் என்று அழைப்பர். யாழ்ப்பாணக் கோட் டைக்குள் அமைந்த பிற கட்டடங்களை நோக்கும் போது பிற்காலத்தில் ராணி மாளிகை அமைந்த இடத்தில் ஒல்லாந்த லெப்ரினன் கவர்னர் மாளிகை அமைந்திருந்தது என்பர். இதை விட இங்கு ஒல்லாந்தரது காவல் துறை வசிப்பிடங்கள், தேவாலயம், சிறைக்கூடங்கள், அதிகாரிகளுடைய நிர்வாக மையங்கள் என்பனவும் காணப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்திலும் அதற்குப் பின்பும் மிக முக்கியம் பெற்றி ருந்த யாழ்ப்பாணக் கோட்டை 1983 களுக்குப் பின்னர் படைகளின் பாது காப்பு நிலையாக மாறியது. தற்பொழுது போரினால் சிதைவடைந்துள்ள யாழ்.கோட்டைப்பகுதி புற்களாலும் புதர்களாலும் சூழப்பட்டுத் தனது அடையாளத்தை, வரலாற்றுச் சிறப்பைத் தொலைத்து நிற்கின்றது. இந்நிலை தொடருமேயானால் ஒரு பாரம்பரிய வரலாற்றுப் பெருமை மிக்க நிலையத் தை இளஞ்சமூகத்தினர் அறிந்திட முடியாத சூழல் உருவாகும் எனலாம்.

# 23

## யாழ் கோட்டை முனியப்பர் ஆலயம்



யாழ்ப்பாண வரலாற்றி லே முக்கிய இடத்தை வகிக்கும் யாழ்.கோட்டையுடன் முனியப்ப ரின் நாமமும் நெருங்கிய தொடர் புடையதாக விளங்குகின்றது. இவ்வாலயம் பற்றியும் முனியப் பரின் அருளாற்றல் பற்றியும் பல் வேறு சுவையான சம்பவங்கள், க தைகள் ஐதீகங்களாக அறியப் பட்டு வந்துள்ளன. அந்நியராட் சிக்காலத்திருந்தே இத்தெய்வம் அருளாற்றல் மிக்க தெய்வமாகப் போற்றப்பட்டு வந்தமை இவ் ஐதீகங் களால் உறுதியாகின்றது.

தமிழரசர்களிடமிருந்து கி.பி 1621 ஆம் ஆண்டு நல்லூர் இராசதா னியைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் தமது பாதுகாப்புக்கருதி ஒரு கோட் டையை அமைத்தனர். சதுரவடிவ அரணாக விளங்கிய இக்கோட்டை யாழ்ப்பாணத்துச் சைவ ஆலயங்களை இடித்து அக்கற்களைக் கொண்டு கட் டப்பட்டது. பின்னர் வந்த ஒல்லாந்தர் கி.பி 1658 ஆம் ஆண்டு இக்கோட் டையைக் கைப்பற்றிக் கொண்டனர். ஒல்லாந்தர் இதனைப் புதுப்பித்து ஐங் கோண வடிவில் அழகுபடுத்தி அமைத்தனர். இக்கோட்டையே இவ் அந்நி யரின் பாதுகாப்பு அரணாகவும், நிர்வாக நடவடிக்கைகளுக்கேற்ற இடமாக

வும் விளங்கியதால் அக்காலமக்கள் இதனை இராசவாசல் என அழைத்த னர்.

இக்கோட்டைக்கும் முனியப்பருக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதற்கு பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. இக்கோட்டை அமைந் துள்ள இடத்திலே ஒரு சிவன் கோயில் இருந்தது எனவும் அதுவே முனியப் பர் எனவும் போர்த்துக்கேயர் அவரைக் காவல் தெய்வமாக வழிபட்டனர் எனவும் கூறப்படுகிறது. மேலும் கோட்டைக்குள் இருக்கும் கிறிஸ்தவ ஆல யமே முன்னர் சிவாலயம் இருந்த இடம் எனவும் ஒரு ஊகம் உண்டு. இதற்கு ஆதாரமாகச் சில புதைபொருட் சின்னங்களும் கல்வெட்டுக்களும் இடிந்த பல கட்டுமானங்களும் கோட்டைக்கு உள்ளும் புறமும் இருப்பதாகக் கூறப் படுகின்றது. இச்சான்றுகள் வரலாற்று ரீதியான உண்மைகள் என்று இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

கி.பி.1931 ஆம் ஆண்டு திரு.கணபதி கந்தையா என்பவரால் இன் றைய ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாக அறியமுடிகிறது. அந்நி யராட்சிக்காலத்தில் அவர்களுக்குத் தனது அருட்செயல்களால் தன் பேராற் றலை உணர்த்திய முனியப்பர் இன்றளவும் யாழ்.நகரில் தனித்துவமுடைய தெய்வமாக விளங்குகின்றார். வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயம் அந்நி யராட்சிக் காலத்திலிருந்து களம் பல கண்டது. கோட்டையில் இடம்பெற்ற யுத்தங்களுக்கும், இரத்தக்களரிகளுக்கும் அசையாது நின்று இன்றும் யாழ்.ந கரின் காவல் தெய்வமாக முனியப்பர் விளங்குகிறார்.





வரலாற்று உலா தொகுப்பாசிரியர்

மானிட நேயர்

**ஆ.சி. நடராசா** அவர்களின்

பன்முக ஆளுமை பற்றி

சில வார்த்தைகள்...

"பூச்சியத்திலிருந்து இராச்சியத்தை" கட்டியெழுப்பிய சாதனையாளர் என்ற பெருமைக்குரிய அதிபர் நடராசாவின் சொல்லும் செயலும் வயாவிளான் பாடசாலையின் வரலாற்றோடு இறுகப்பிணைந்துள்ளது. ஆறு முறை இடப்பெயர்வுக்குட்பட்ட நிலையிலும் 25 ஆண்டுகளுக்கு மேலாக புலம்பெயர் நிலையில் தனது வீடு, வளவு, மெய்பாதனச் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து வாழ்ந்தாலும் தனது சொந்த இழப்புக்களுக்காக கவலையடைந்து சோர்ந்துவிடாமல் ஊர் மக்களுடனும் தனது வயாவிளான் பாடசாலையுடனும் நாளும் பொழுதும் தன்வாழ்வை இணைத்துக் கொண்டார் என்பதை குரும்பசிட்டிக் கிராமவரலாறும் பாடசாலை வரலாறும் எதிர்கால சந்ததிக்கு எடுத்துக்காட்டும்.

ஊடகவியலாளராகவும், தினக்குரல் பத்திரிகையின் முகாமையா-ளராகவும் மிகவும் கடினமான ஒரு தசாப்த காலம் கடமையாற்றி தமிழ்ச்சமூகத்திற்கு பல சமூக ஆக்கங்களைத் தந்தவர். பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவில் கோட்டாமுறையில் ஏற்பட்ட பாரபட்சத்தை தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதிகள் கண்காணிப்பு அமையத்தின் செயலாளராக இருந்து செயற்பட்டு வருபவர்; மகாதேவா நினைவுப் படிப்பகத்தின் காப்பாளராகவிருந்து இளையோரின் கல்விக்காக உழைத்துக் கொண்டிருப்பவர்; தமிழ்மக்கள் சந்தித்த பேரழிவிற்குப் பின்னால் ஏதிலிகளாய் இருந்த இளம்விதவைகளுக்கும் அவர்தம் குழந்தைகளுக்காகவும், ஊனமுற்றவர்களுக்காகவும் கருணைப்பாலம் ஒன்றை உருவாக்கி வாழ்வு அளித்து வரும் உத்தமர்; என்பவை அவரது பல பரிணாமங்களுக்கு சில உதாரணங்கள்.

இத்தகைய உயரிய மனிதநேயச் செம்மலுக்கு சிவத்தமிழ் மானிட விடியற் கழகம் மனிதாபிமான பணிகளுக்கான தங்கள் உயரிய விருதான 'மானிடநேயர்' என்ற விருதினை வழங்கி கௌரவித்திருப்பது சாலப்பொருத்தமானதாகும்.

பேராசிரியர் ப.சிவநாதன்

யாழ். பல்கலைக்கழகம்

Harikanan Jaffna